# நல்ல மாணவனாக!

இரா. இளங்குமரன்



# நல்ல மாணவனாக!

இரா. இளங்குமரன்

**விக்னேஷ் வெளியீடு**

இரண்டாவது மாடி,

19, நியூ காலனி, ஜோசியர் தெரு,

நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# நூற் செய்தி


| | |
|---|---|
| நூல் பெயர் | நல்ல மாணவனாக! |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு | முதற்பதிப்பு |
| பதிப்பாண்டு | 2000 |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| நூல் கட்டு | தாள் அட்டை |
| பக்கம் | 208 |
| தாள் | 10.5 வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | 12.5 செ.மீ. X 18 செ.மீ. |
| எழுத்து | 12.5 புள்ளி |
| வெளியீடு | விக்னேஷ் வெளியீடு,<br>இரண்டாவது மாடி,<br>19, நியூ காலனி, சோசியர் தெரு,<br>நுங்கம்பாக்கம், சென்னை – 34. |
| அச்சு | வேமன் பிரிண்டர்ஸ்<br>19, நியூ காலனி, சோசியர் தெரு,<br>நுங்கம்பாக்கம், சென்னை – 34.<br>☎ : 821 11 34 |
| பொருள் : | கட்டுரை |
| **விலை :** | **உரூபா. 46–00** |

# பயனும் பாராட்டும்

'நல்ல மாணவனாக' என்னும் பெயருடைய இந்நூல், மாணவர் கல்வியாலும் பண்பு நலங்களாலும் சிறந்து விளங்க உதவும். அவர்கள் உள்ளத்தில் அடங்கிக் கிடக்கும் ஆற்றலை, ஊற்றுக்கண் திறந்தது போல் வெளிப்படுத்தி உயர்த்தும்.

நல்ல மாணவனாக என்பது முதற்கட்டுரை. மாணாக்கர் தரம், நூற்பயிற்சி, நல்லவையும் அல்லவையும், தூண்டலும் துலங்கலும், முயற்சியும் முன்னேற்றமும், முட்டுக்கட்டை, எடுத்துக்காட்டான இளமையர் என்பன தொடரும் கட்டுரைகள்.

வளரும் மாணவர்க்கு அன்றி, வளர்ந்த மாணவர்க்கும், பெற்றோர்களுக்கும் இந்நூல் பயன் செய்யும்.

இதனை வெளியிடும் பதிப்பகத்தார்க்குப் பயன் செய்தார்கள் என்னும் பாராட்டு வாய்க்கும்.

அன்புடன்,
இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை
அல்லூர் - 620 101.
திருச்சி மாவட்டம்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நல்ல மாணவனாக | 5 |
| 2. | மாணாக்கர் தரம் | 20 |
| 3. | நூற்பயிற்சி | 35 |
| 4. | நல்லவையும் அல்லவையும் | 46 |
| 5. | தூண்டலும் துலங்கலும் | 61 |
| 6. | முயற்சியும் முன்னேற்றமும் | 73 |
| 7. | முட்டுக்கட்டை | 88 |
| 8. | எடுத்துக்காட்டான இளமையர் | 102 |
| 9. | பணப்பை | 117 |
| 10. | ஒரு நாடகம் | 122 |
| 11. | பரிசு | 127 |
| 12. | பட்டாடை | 132 |
| 13. | ஊரும் பேரும் | 136 |
| 14. | முத்தும் முத்தும் | 141 |
| 15. | கல்யாணை | 147 |
| 16. | நிறுத்து போரை | 153 |
| 17. | எவர் வாழ்வோர்? | 158 |
| 18. | எப்படி வாழ்வது? | 165 |
| 19. | மெய்ம்மைப் பொய் | 170 |
| 20. | பொய்யா விளக்கு | 188 |
| 21. | தொண்டனாகுக | 194 |

# 1. நல்ல மாணவனாக!

மாண்புத்தன்மை அமைந்தவரே **மாணவர்** எனப்படுவர். மாணவரின் நினைவு, சொல், செயல் எல்லாம் அவருக்கு மாண்பு தருவனவாக இருத்தல் வேண்டும்; அப்பொழுதுதான் உண்மையாகவே அவர் மாணவர் என்னும் பெயர்த் தகுதிக்கு உரியவர் ஆவர். ஆதலால் மாணவ மணிகளே! உங்கள் நினைவாலும் சொல்லாலும் செயலாலும் உங்களுக்கு மாண்பு ஏற்படும் வண்ணம் நடந்துகொள்ள வேண்டும் என்று இப்பொழுதே உறுதி கொள்வீர்களாக!

**இளமையிற் கல் :**

இளம் பருவத்தினராக இருந்து பள்ளிக்கும் கல்லூரிக்கும் செல்பவர்களையே மாணவர் என்பது

உலக வழக்காக உள்ளது. உண்மையில் கல்விக்கு இளமை, முதுமை எனப் பருவ வேறுபாடு எதுவும் இல்லை. எந்நாளும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா' என்பது **உலகநீதி.** ஆயினும், கல்விக்கு ஏற்ற இனிய பருவம் இளமையே ஆகும். கற்பதற்கு என்றே அமைந்த பருவம் இளமையே என்பதும் பொருந்தும். அதனால்தான், 'இளமையிற் கல்' என்று முதிய **ஔவையார்** கட்டளை இட்டுள்ளார்.

**ஐந்தும் ஐம்பதும் :**

நல்வாழ்வு வாழ்வதற்காகவே மக்களாகப் பிறந்துள்ளோம். அந்நல்வாழ்வுக்கு வேண்டிய பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பருவம் இளமையே ஆகும். ஆகவே, இளம்பருவத்திலேயே நீங்கள் உங்கள் எதிர்கால நல்வாழ்வுக்கு வேண்டிய அறிவு வளர்ச்சி, பண்பு வளர்ச்சி, உடல் வளர்ச்சி, தொழிற் பயிற்சி ஆகியவற்றைத் தவறாமல் பெற்றுக் கொள்ளவேண்டும். இதனை வலியுறுத்துவதற் காகவே, **"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"** என்று நம் முன்னோர் வினாவினர்; **"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்"** என்றும் துணிந்து உரைத்தனர்.

**இளமை வெள்ளம் :**

இளம் பருவம் வெள்ளம்போல் ஓடி ஒழிவது; கண்காணிப்புடன் இருந்து நல்ல அணையிட்டுக்

கொண்டவர்களே வெள்ள நீரைத் தடுத்து நிறுத்தி வயலுக்குப் பாய்ச்சிப் பயன்கொள்ள முடியும். காலம் என்பது கடிய வெள்ளம்! உலகெலாம் ஒரு குடைக்கீழ்க் கொண்டு ஆள்பவர் நினைத்தாலும் ஒரு நொடியளவு கூட அதனை நிறுத்தி வைக்க இயலாது. ஆகவே, இளம் பருவத்தை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அவ்வளவும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கரும்பை ஆட்டிச் சாறு எடுத்துக் கொண்ட பின்னர்ச் சக்கையை எரிப்பதில் தவறு இல்லை. அதுபோல் இளமைப் பயன் அனைத்தையும் வீணாக்காமல் பெற்றுக் கொண்டீர்களாயின் அவ்விளமை கடந்து போனது பற்றிப் பின்னர்க் கவலைப்பட வேண்டியது இல்லை.

**பேறுகள் பதினாறு :**

ஒவ்வொருவரும் தம் வாழ்வில் பெறவேண்டிய பேறுகள் பதினாறு என்பர். அவை புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்பன. இப்பதினாறனுள்ளும் தலையாயது '**நன்மக்கட்பேறு**' என்பது வள்ளுவர் கருத்து. ஏன்? நன்மக்களைப் பெற்றெடுத்தவர்களை எஞ்சிய பதினைந்து பேறுகளும் தாமே தேடி வந்து அடையும் என்பது அவர் கண்ட தெளிவு. ஆதலால், நன்மக்களாகப் பிறந்த நீங்கள், எஞ்சிய பேறுகளை எல்லாம் பெற்று, உங்களைப் பெற்றவர்களுக்கும் அவற்றை வழங்கி, நன்கு வாழ்வீர்களாக!

**மலரும் மக்களும் :**

இல்லறம் என்னும் சோலையில் மலர்ந்த மலர்களே மக்கள். மலர்ந்தவை எல்லாம் மலர்களே! எனினும் நறுமணமும் பெரும் பயனும் தருபவையே மலர்கள் என்று பாராட்டவும் மதிக்கவும் பெறும். அதுபோல் பிறந்தவர்கள் அனைவரும் மக்களே எனினும் சிறந்த அறிவும் உயர்ந்த பண்பும், சீரிய செயல் திறமும் வாய்ந்தவர்களே உலகத்தவர்களால் மக்கள் என்று பாராட்டி மதிக்கப்பெறுவர். நறுமணமலர், தான் பிறந்த சோலையில் மட்டும் அல்லாமல் அடுத்துள்ள சாலையிலும் கமழ்ந்து, பக்கமெல்லாம் மணம் பரப்பும். அதுபோல் நன்மக்களாகப் பிறந்த நீங்களும், நீங்கள் பிறந்த குடும்பத்துக்கு மட்டும் அல்லாமல் சுற்றம், சூழலுக்கும் உலகுக்கும் நலம் செய்பவர்களாகத் திகழவேண்டும்.

**நரையும் நன்மக்களும் :**

**பிசிராந்தையார்** என்பவர் ஒரு புலவர்: அவர் மிக முதியராக இருந்தார்: எனினும் அவருக்கு நரை தோன்றவில்லை. அதனை வியப்பாகக் கருதிய வேறு சில புலவர்கள் பிசிராந்தையாரிடம், “பெரியீர், நுமக்கு மிகுந்த முதுமை உண்டாகியும்கூட, அந்த முதுமைக்கு அடையாளமாகத் தோன்றும் நரை இன்னும் தோன்ற வில்லையே, ஏன்?” என்று வினாவினர். அவ்வினாவுக்கு விடையாகப் பிசிராந்தையார் உரைத்தவற்றுள் ஒன்று **‘நன்மக்கட்**

பேறு' ஆகும். "மாண்பு நிரம்பிய மக்களை நான் பெற்றிருக்கிறேன்; என் குறிப்பு இன்னதென அறிந்து அவர்கள் செயலாற்றுகிறார்கள். ஆகவே, எனக்குக் கவலை சிறிதும் இல்லை. கவலை இல்லாமையால் நரை தோன்றவில்லை" என்று விரித்துரைக்கிறார் அவர். இவ்வாறே, உங்கள் பெற்றோர்கள் உங்களைப் பற்றிப் பிறரிடம் கூறிப் பெருமைப் படவும் கவலையற்று நெடுங்காலம் வாழவும் நீங்கள் துணையாவீர்கள் என்றால் நீங்கள் நன்மக்கள் என்பதில் ஐயமில்லை.

**பெற்றவர் பேறு :**

உங்கள் பெற்றோர்கள் உங்கள்மேல் செலுத்தும் அன்புக்கு அளவில்லை. தாங்கள் எத்துயரை உற்றாலும் எவ்வறுமைப் பட்டாலும் அத்துயரும் அவ்வறுமையும் உங்களைச் சாரக்கூடாது என்று கருதித் தாங்களே அனுபவிக்கிறார்கள். உங்கள் கண்ணில் நீர் வழிந்தால் தங்கள் கண்ணில் குருதி வழிவதாகக் கருதித் துடைக்க முந்துகிறார்கள். அவர்கள் செலுத்தும் அன்பு, அருளே வடிவான இறைவன் செலுத்தும் அன்புக்கு ஒப்பானதாகும். அதனால்தான், ஆண்டவனை அருள் அடியார்கள் அனைவரும், 'அன்னை' என்றும், 'அப்பன்' என்றும், 'அம்மை அப்பன்' என்றும் அழைத்து அழைத்துத் தங்கள் அல்லல்களை அழித்து இன்புற்றிருக்கின்றனர். இத்தகு தெய்வச்

சிறப்புடைய பெற்றோர்கள் அகமும் முகமும் மகிழ நீங்கள் நல்வாழ்வு வாழ்வது அவர்களுக்குச் செய்யும் கைம்மாறு ஆகும்.

## இளமை இன்பம் :

தாய் தந்தையர் தங்கள் குழந்தைகள் மேல் செலுத்தும் இன்ப அன்பை நெடுநாட்கள் நுகர வேண்டும் என்பது இயற்கையின் ஆவல் போலும்! ஆட்டுக் குட்டி பிறந்த சிறிது பொழுதுக்குள்ளே ஓடி ஆடத் தொடங்கி விடுகின்றது; பசுக்கன்றும் அன்றே நடந்து விடுகின்றது; கோழிக் குஞ்சும் சிறிது பொழுதுக்குள் உலாவத் தொடங்கிவிடுகின்றது. ஆனால் குழந்தைகள் மட்டும் உட்காருவதற்குச் சில திங்கள் செல்லுகின்றன; தவழ்வதற்கும், தத்தி நடப்பதற்கும், ஓடி ஆடுவதற்கும் சிலச்சில திங்கள் செல்கின்றன. மழலை பொழிவதோ சிலச்சில ஆண்டுகள் அளவுக்கும் நீடிக்கின்றது. இவையெல்லாம் குழந்தைகளால் பெற்றோர்கள் அடையத்தக்க இன்பங்களை நெடுங்காலம் அடைய வேண்டும் என்னும் இயற்கை நோக்கத்தாலேயாகும். அத்தகைய பெற்றோர்களுக்கு அவர்கள் வாழ் நாளெல்லாம் இன்பம் செய்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டுவது உங்கள் கடமை அல்லவா!

## குழலும் யாழும் :

**குழல்** என்பதோர் இசைக் கருவி; அது மிகமிக எளிமையானது. ஆனால் அதன் இசை கேட்டவர்களை

எல்லாம் இன்ப வெள்ளத்தில் நீந்தச் செய்யவல்லது. **யாழ்** என்பதும் ஓர் இசைக்கருவி. அது செய்நேர்த்தியில் இணையற்றது. அதன் இசையும் கேட்பவர்களை வயப்படுத்த வல்லது. இவ்விசைகளைக் கேட்டு அனுபவித்துக் கொண்டிருக்கும் பெற்றோர்களின் முன், தங்கள் குழந்தை தளர் நடையிட்டு வந்து கனிவாய் மழலை பொழியுமானால் அவர்களுக்குக் குழலிசையும் யாழிசையும் வெறுத்துப் போகும்: மழலையே தணியாச் சுவை ஊட்டும்: "குழல் இனிதோ? யாழ் இனிதோ? மழலை இனிதோ?" என்னும் வினா எழுப்பப்படுமானால், "மழலைக்கு இணையானது எதுவும் இல்லை" என்றே கூறுவார்கள். எவராவது குழலே இனியது: யாழே இனியது என்பார் ஆனால், அவர் தம்மக்கள் மழலை மொழியைக் கேட்கும் பேறு வாய்க்காதவராகவே கருதப்படுவர். இத்தகைய அன்புப் பெற்றோர்களை எதிர்த்து மக்கள் உரையாடுவதும் வசைமொழியால் வாட்டுவதும் வன்சொல் கூறுவதும் பெரும் பாவம். அப்பாவம் உங்கள் வாழ்வில் ஒரு பொழுதும் தலைகாட்டா திருக்குமாக!

**கூழுங் கொள்கையும் :**

**கூழ்** என்னும் சொல்லின் பழம்பொருள் உணவு என்பதாகும். ஆனால் இந்நாளில் அச்சொல் ஓர் எளிய உணவைக் குறிக்கின்றது. அமிழ்து என்பதும் ஓர் உணவு. ஆனால் அது மக்கள் வாழ்வில் கிட்டாத ஒன்றாகும். அது தேவர்களுக்கே உரியது என்றும்,

அவர்களுக்கு இறவாத வாழ்வு தந்துகொண்டிருப்பது என்றும் கூறுவர். ஆகவே அமிழ்து என்பது உணவு வகையில் ஒப்பற்ற ஒன்று என்றும் கொள்ளலாம். ஆனால், தம் சிறுபிள்ளைகள் சிறிய கைகளால் அள்ளித் துழாவிய கூழைத் தாம் உண்ணும் போது பெற்றோர்களுக்கு அமிழ்தினும் இனியதாக இருக்கும். இது கூழின் சுவையா? தம் குழந்தைகளின் கையில் பட்டதால் அதற்கு உண்டாகிய சுவையா? கூழையும் அமுதாக நுகரும் பெற்றோர்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு என்ன? **"இவனையும் இவளையும் பெறுவதற்கு இவர்களின் பெற்றோர்கள் என்ன தவம் செய்தார்களோ!"** என்று பிறர் எண்ணி வாழ்த்துமாறு வாழ்வதே ஆகும்.

**காலமும் களமும் :**

**பிறப்பு** அனைவருக்கும் பொதுவானது; **இறப்பும்** எவர்க்கும் பொதுவானது. ஆனால் இடையே வரும் **சிறப்பு** அவரவர் பண்பாலும் அறிவாலும் முயற்சியாலும் பெறக்கூடியது. இடையே வந்து சேரக்கூடிய சிறப்பை அடையாதவர் இந்த உலகத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்ததற்குரிய அடையாளமே இல்லாமல் மறைந்து போகின்றனர். அத்திப்பழத்துள் புழுக்கள் ஒரு நாட் பொழுதுக்குள் ஆயிரக் கணக்கில் தோன்றி, "எப்படி இருந்தன? எப்படி வாழ்ந்தன? எப்படி இறந்தன?" என்று எவரும் அறியமுடியாமல் இறந்துபோகும். அந்தப் புழுக்களைப் போன்றவர் அவர். ஆகவே, நீங்கள் அனைவரும் சிறந்தவர் ஆவதற்குரிய ஆர்வமும்

முயற்சியும் உடையவராக விளங்குதல் வேண்டும். அதற்கு வித்திட்டு வளர்க்க வேண்டிய பருவம் இவ்விளமையே. வித்திட்டு வளர்த்தற்குரிய இடம் கல்வி நிலையமே.

**காலமே கருதுக :**

'**பருவத்தே பயிர்செய்**' என்னும் பழமொழி உழவுத் தொழிலுக்கு மட்டும் உரியது அன்று. ஒவ்வொரு தொழிலுக்கும் உரியதே ஆகும். கல்விக்குத் தகுதியாக அமைந்தது இளமைப் பருவமே எனக் கண்டோம். அப்பருவத்தில் நன்றாகக் கற்றுக் கொள்ளவும், பெற்றுக் கொள்ள வேண்டிய பண்புகளைப் பெற்றுக் கொள்ள தவறினால் பின்னாளில் பெருங் கேடாகும். "**உழும் காலத்தில் ஊர்வழி போய்விட்டால், அறுக்கும் காலத்தில் ஆள்தேட வேண்டியது இல்லை**" என்பது போல் பிற்கால வாழ்வு அமைந்து விடும். ஆகவே, "இளம் பருவம் எங்கள் கல்வி வளர்ச்சிக்கு என்றே கிடைத்துள்ளது" என்று கருதிக் கல்வியையே கண்ணாகக் கொண்டு நீங்கள் கற்க வேண்டும்.

**கற்பவை கற்க :**

வெள்ளைத் துணியில் எந்தச் சாயத்தையும் நனைக்கலாம். நன்றாகப் பிடித்துக் கொள்ளும். இளக்கமான மண்ணில் குயவர் தம் மனம்போல் கலங்கள் வனைய முடியும். வெள்ளைத் துணியையும், இளக்கமான மண்ணையும் போன்றதே இளம்பருவம். இப்பருவத்தில் எந்தக் கருத்தும் எந்தப்

*பயிற்சியும் எளிதாகப் பதிந்து விடும். ஆகவே, தரம் பிரித்துத் தக்கவற்றைக் கற்பதில் கருத்துச் செலுத்த வேண்டும். அதனால் தான்* **'கற்க'** *என்று மட்டும் கூறாமல்* **'கற்பவை கசடறக் கற்க'** *என்று திருவள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார். நீங்கள், அவர் வழி வழி வந்த பேரர்கள். ஆகவே அவர் கூறிய வண்ணம் 'கற்க வேண்டுபவற்றை மட்டும் கற்பீர்களாக!' அவற்றைக் கசடறக் கற்பீர்களாக!*

**பள்ளிக்கு வந்ததன் பயன் :**

*பெற்றோர்கள் உங்களைப் பள்ளிக்கு ஏன் அனுப்பியுள்ளனர்? வீட்டிலே நீங்கள் பெற முடியாத அறிவு, பண்பாடு முதலியவற்றைப் பெறுதற்காகவே உங்களைப் பள்ளிக்கு அனுப்பியுள்ளனர். அவற்றை நீங்கள் பள்ளியில் பெறத் தவறினாலோ, அரைகுறையாகப் பெற்றாலோ நீங்கள் பள்ளிக்கு வந்த பயன் நிறைவேறவில்லை; உங்கள் பெற்றோர்களின் ஆவல் நிறைவேறவில்லை; உங்களுக்கு அயராமல் கற்பித்த ஆசிரியர்களின் முயற்சி பயன்பெறவில்லை என ஆகும். இவை மட்டுமல்லாமல் உங்களுக்கென அரசு செலவிட்ட தொகை இழப்பாகின்றது; உங்கள் எதிர்கால நல்வாழ்வோ முழுமையாகப் பாழாகி விடுகின்றது. இந்நிலையை, நெஞ்சோடு பொருத்தி நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களேயானால் பொழுதை வீண் வழியில் போக்காமல் உழைப்பதில் ஊன்றுவீர்கள்.*

**நன்றி மறவேல் :**

உழுது விதைத்து உரமிட்டு நீர் பாய்ச்சிக் களை எடுத்துக் காவல் புரிந்த உழவன், தன் பயிர் பயன்தராது போனால், அல்லது அப்பயிரின் பயனைப் பிறரொருவர் கொள்ளை கொண்டு போனால் பொறுக்க மாட்டான்: வெறுக்கவும் செய்வான். அதுபோல் உங்கள் முயற்சிக் குறைவால் உங்கள் கல்வித்தரம் குறையுமானாலும் சரி, உங்கள் சூழ்நிலைக் கேட்டால் உங்கள் கல்வித் தகுதி குறையுமானாலும் சரி, உங்கள் மேல் மாறாத உள்ளன்புடைய உங்கள் பெற்றோர்களின் வெறுப்புக்கு நீங்கள் ஆளாகத் தவற மாட்டீர்கள். அவ்வாறு நீங்கள் ஆளாவீர்களானால், **“செய்ந்நன்றி கொன்ற மக்கள்”** என்றே கருதப் பெறுவீர்கள்.

**நிரம்பிய வாழ்வு :**

மாணவச் செல்வங்களே! நீங்கள் நிறை செல்வர்களாக உயருங்கள்: உங்களை நீங்கள் நல்லவற்றாலும் நிரப்பலாம்: அல்லவற்றாலும் நிரப்பலாம். அறிவொளியாலும் நிரப்பலாம்: அறியாமை இருளாலும் நிரப்பலாம்; **நிரப்புதல் உங்கள் கையிலேயே இருக்கிறது.** நீங்கள் உங்களை எவ்வாறு நிரப்பப் போகிறீர்கள்? எதனால் நிரப்பப் போகிறீர்கள்?

**ஒளி விளக்கு :**

ஒரு தந்தையார் இருந்தார்: அவருக்கு மக்கள் இருவர் இருந்தனர்: இருவரையும் அழைத்தார்

தந்தையார். "என் மைந்தர்களே! உங்கள் அறைகளை நீங்கள் விரும்பிய பொருள்களால் நிரப்பி வைக்க வேண்டும். நான் மாலையில் வந்து காணுவேன். எவன் முழுவதும் நன்றாக நிரப்பி வைத்திருக்கின்றானோ அவனுக்குப் பரிசு அளிப்பேன்" என்றார். மைந்தர் இருவரும் '**தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை**' என்று தத்தம் அறைகளை நிரப்பி வைத்தனர். தந்தையார் தாம் கூறியவாறே மாலையில் தம் மைந்தர் நிரப்பி வைத்த அறைகளைக் காணுமாறு வந்தார். மூத்தவன் அறையின் அருகே வந்தார். உள்ளே புக முடியவில்லை. ஏன்? அவன் வாயில் வரை வைக்கோலை அடைத்து வைத்திருந்தான். அதனைக் கண்டு ஏக்கமுற்ற தந்தை இளையவன் அறைக்குச் சென்றார். அறை முழுவதும் நறுமணம் கமழ்ந்தது: அங்கு ஒளி விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. அறை ஒளியாலும் நறுமணத்தாலும் நிரம்பி இருந்தது. அறையின் நடுவே அமைந்திருந்த மேசையின்மேல் உயர்ந்த நூல்கள் சில இருந்தன! இளையவனது அறிவுக் கூர்மையை எண்ணி எண்ணி வியந்து பாராட்டினார் தந்தை! பரிசுகள் பல வழங்கினார்.

ஒரு பெரியவர் தம் சிறுவனை அழைத்துக் கொண்டு காய்கறிக் கடைக்குப் போனார். சிறுவன் கையிலே காய்கறி வாங்கி வைப்பதற்கேற்ற கூடை இருந்தது. போகும் வழியில் ஓரிடத்தில் கழிவுத் தாள்கள் கிடக்கக் கண்டார் பெரியவர்; "பையா! இவற்றை அள்ளிக் கூடையில் போடு" என்றார்.

"இத்தாள்கள் எதற்காக அப்பா?" என்றான் சிறுவன். "காரணம் கேட்காதே! சொன்னபடி அள்ளிப் போடு" என்றார். சிறுவன் கூடையில் அள்ளிப் போட்டுக் கொண்டான்.

சிறிது தொலைவு சென்றதும் ஓரிடத்தில் கிடந்த குப்பையைச் சுட்டிக்காட்டி "இதனையும் அள்ளிப் போடு" என்றார். சிறுவன் மறுக்காமல் அள்ளிப் போட்டுக் கொண்டான். அப்படியே அவர் கட்டளைப் படி வேறோர் இடத்தில் கிடந்த வாழைப்பழத் தோல்களை அள்ளிக்கொண்டான். கூடையில் ஏறத் தாழ முக்கால் பங்கு நிரம்பிவிட்டது.

காய்கறிக் கடையை அடைந்ததும் அகத்திக் கீரைக் கட்டு வாங்கினார்: கத்தரிக்காயும் வாழைக்காயும் வாங்கினார். கூடை நிரம்பி விட்டது. "அப்பா! நமக்கு மிகமிக விருப்பமான தக்காளி இன்னும் வாங்கவில்லை; சுவைமிக்க உருளைக் கிழங்கு வாங்கவில்லை; சத்தான வெண்டைக்காய் வாங்க வில்லை: கூடை நிரம்பிவிட்டதே என்ன செய்வது?" என்றான்.

"ஏன் அவற்றையும் வாங்குவோம். கூடையில் முடிந்த மட்டும் வைத்துப்பார்" என்றார். "அப்பா! இனி ஒரு பொருளையும் வைக்க முடியாது. கூடை நிரம்பிவிட்டது." என்றான் சிறுவன். "கூடை கொள்ளாது என்றால் புறப்படு, போகலாம்," என்றார் தந்தை. இருவரும் வீட்டுக்குச் சென்றனர்.

"குப்பை, தாள், வாழைப்பழத்தோல் இவற்றை அள்ளவில்லையானால் தக்காளி, உருளை, வெண்டை முதலியவற்றை வாங்கி இருக்கலாம். வேண்டாத வற்றை அள்ளி நிரப்பியதால்தான் வேண்டியவற்றை வாங்க முடியவில்லை," என்று சிறுவன் தன் தாயிடம் குறை கூறினான். இந்த வாய்ப்பையே எதிர்நோக்கி இருந்த தந்தையார், "தம்பி, வேண்டாத குப்பை கூளங்களைக் கூடையில் போட்டு நிரப்பியதால், வேண்டிய காய்கறிகளை வாங்க முடியவில்லை. அது போல் வேண்டாத வெறுக்கத் தக்க பயனற்ற செய்திகளை உன் மூளையில் நிரப்பி வைத்துக் கொண்டால் வேண்டிய செய்திகளை உன் மூளையில் உன்னால் நிரப்ப முடியாது என்பதை உணர்ந்துகொள்" என்றார். சிறுவன் அப்பொழுது தான் தனக்கு நல்லறிவு வருவிப்பதற்காகவே தந்தையார் இச்செயல் செய்ததாக உணர்ந்து திருந்தினான்.

இக் கதைகளையும் நிகழ்ச்சிகளையும் எண்ணிப் பார்த்து உங்கள் உள்ளத்தை நீங்கள் எவற்றால் நிரப்ப வேண்டும் என்று அறிந்து கொள்ளுங்கள். **ஒளியும் பயனும் மிக்க கருத்தால் உங்கள் உள்ளத்தை நீங்கள் நிரப்பிக் கொள்வதிலேதான் உங்கள் வாழ்க்கையின் வெற்றி அடங்கிக் கிடக்கிறது** என்பதை உணர்ந்து செயல்படுவீர்களாக! **"என் மக்களும் நிரம்பினர்"** என்னும் பிசிராந்தையார் உரையை மெய்யாக்குவீர்க்ளாக!

**உலகத்தின் உரை :**

அன்புள்ள மாணவர்களே! உங்கள் உதவியை உங்கள் பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்; உற்றார் உறவினர் எதிர்பார்க்கின்றனர்; நாடும் ஏடும் எதிர் நோக்குகின்றன. ஏன்? எதிர்கால உலகமே உங்களை எதிர் நோக்குகின்றது. உலகமே உங்கள் ஒவ்வொருவர் முன்னரும் நின்று, "நீ பிறந்தாய், வளர்ந்தாய், வாழ்ந்தாய், நான் தந்த உணவை உண்டாய், நீரைப் பருகினாய், உடையை உடுத்தாய், எவ்வெவ் வகையால் இன்பம் அடைய வேண்டுமோ அவ்வளவும் அடைந்தாய், ஆனால் நீ எனக்குக் கைம்மாறாகத் தந்தது என்ன? எனக்குப் பாரமாகவா நீ பிறந்தாய்? பகுத்தறிவுடைய மாந்தர் இனத்தில் பிறந்த பயன் இதுதானா? முன்னோர் உனக்கு வைத்துள்ள வளங்களைப் பார்! நீ உன் பின்னோர்க்கென என்ன நலங்களை வைத்துச் செல்லப் போகிறாய்? அவற்றை இப்பொழுதே எண்ணிப் பார்த்துச் செயலில் இறங்கு!" என்று ஏவுவதை - ஊமையாக இருந்தால் கூட உண்மையுணர்வால் ஏவுவதை உணருங்கள்! உணர்ந்து செயலாற்றுங்கள்! பாரதியார் கூறுவது போல, "உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ! பற! பற! மேலே, மேலே, மேலே!"

☆ ☆ ☆

# 2. மாணாக்கர் தரம்

**மலையமான் திருமுடிக்காரி** என்பவன் ஒரு மன்னன்: பெருவள்ளல். அவனைக் **கபிலர்** என்னும் புலவர் பெருமான் கண்டு அளவளாவி மகிழ்ந்தார். அப்போது அவர், அம் மன்னனிடம், வேந்தே! நின்னைத் தேடி எத்துணையோ புலவர்கள் நாள்தோறும் வருகின்றார்கள்: அவர்கள் அனைவரையும் ஒப்பானவராகக் கருதாதே: ஒவ்வொரு புலவர்க்கும் தனித்தனித் தன்மைகளும் புலமை ஏற்றத் தாழ்வுகளும் உண்டு என்பதை உணர்வாயாக: உணர்ந்து அவ்வவர்க்கு ஏற்ற வண்ணம் பரிசில் அளித்துப் போற்றி அனுப்புவாயாக!" என்று வலியுறுத்திக் கூறினார். மாணவ மணிகளே! உலகம் இவ்வாறுதான் ஒவ்வொன்றையும் தரம் பிரித்துக் காண விரும்புகின்றது. தரத்திற்குத் தக்க தகுதி தரவேண்டும் என்றும் கருதுகின்றது. தரம் அறிந்து,

கொள்ள வேண்டியதைக் கொள்ளவும், தள்ள வேண்டியதைத் தள்ளவும் செய்கின்றது.

**தாய் காணும் தரம் :**

உள்ளத்தால் உயர்ந்தவள் தாய். உலகம் என்னும் உயர்ந்த அளவில் பரந்து விரிந்தது. அவள் உள்ளம். அவள் உள்ளத்தில் மாசு இல்லை; சிறுமை இல்லை; இன்னார் இனியர் என்னும் வேற்றுமை இல்லைல. ஆயினும் அத்தாய் உள்ளத்திலும் தரம் பிரித்துக் காணும் தன்மை உண்டு என்றால், பிறர் தரம் பிரித்துக் காண்பதில் வியப்பு இல்லை.

**அன்னையின் அன்பு :**

ஒருவன் அறிவாளி; மற்றொருவன் அறிவிலி; ஒருவன் பண்பாளி; மற்றொருவன் பண்பிலி; ஒருவன் முயற்சியும் செல்வமும் உடையவன்; மற்றொருவன் அவ்விரண்டும் இல்லாதவன். இவ்விருவருள் எவன் மேல் தாய்க்கு முழுநிறை அன்பு உண்டாகும்? இருவரும் தன் வயிற்றில் பிறந்த மக்களே எனினும் அவர்களின் தகுதி வேறுபாட்டால் தாய் மனமும் வேறுபட்டு விடுகின்றது. இல்லை! மக்களே தாய் மனத்தை வேறுபடுத்தி விடுகின்றனர் என்பதும் பொருந்தும். இதனை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளான் பாண்டிய வேந்தன் ஒருவன்.

**"பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்"** **(புறம் 183)**

என்பது அவன் மொழி. **மாறாத தாயன்பை மாற்றுவது மதி கெட்டோர் செயலாக இருக்கலாம். ஆனால் மாணவர்களாகிய உங்கள் செயலாக ஒருபொழுதும் இருத்தல் கூடாது.**

**வாணிகத்தில் தரம் :**

அவர் இவர் என்று இல்லாமல் ஏறக்குறைய அனைவருமே வணிகர் ஆகிவிட்ட காலம் இது. வாணிகத்தில் தரம் பிரிக்கும் அளவுக்கு வேறு எத்தொழிலிலும் இல்லை எனலாம். தேங்காயைத் தட்டிப் பார்த்த அளவிலேயே அதன் முதிர்ச்சியும் வளமும் புலனாகிவிடுகின்றன. மண்கலத்தைக் கொட்டிப் பார்த்தவுடனே அதன் வேக்காட்டு அளவும் ஓட்டை உடைவு நிலைமைகளும் புலனாகி விடுகின்றன. இவ்வாறே வெவ்வேறு பொருள்களைத் தரங்கண்டு பிரித்துக் காண்கின்றனர். விலை ஏற்ற இறக்கம் செய்கின்றனர்: வாங்குபவர்களும் அவ்வாறே தரங்கண்டு வாங்குகின்றனர்.

**மூவகை மாணவர் :**

சரியாக அளவிட்டுத் தரம்காண முடியாதவற்றைக்கூட உயர்வு - தாழ்வு என்றோ, மேல் - கீழ் என்றோ, பெரிது - சிறிது என்றோ, நல்லது - கெட்டது என்றோ ஒருவகையில் தரம் பிரித்துக் காணத் துடிக்கின்றனர். இவ்வகைத் துடிப்பு மாணவர்களின் அறிவு, பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களை மூவகையினராகப் பிரித்துக் கூறியுள்ளனர். **தலை**

**மாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர்** எனப்படுவர் அவர்.

**தலை மாணாக்கர் :**

உடல் உறுப்புக்களில் எல்லாம் தலைமையானது தலை. அதனிடத்தேதான் கண், காது, மூக்கு, வாய் முதலாய உயர்ந்த உறுப்புக்களும் மூளைப்பகுதியும் அடங்கிக் கிடக்கின்றன. அத்தலைக்கு ஒப்பானவர் தலைமாணாக்கர். அவர்களின் நினைவு, சொல், செயல் எல்லாம் தம் தலைமை நிலையில் இருந்து சிறிதும் இறங்கா. அத்தகு தலைமை மாணாக்கராக நீங்கள் அனைவரும் இருக்க வேண்டும். அந்த ஒன்றையே மாணவப் பருவத்தில் உங்களிடம் இருந்து வீடும் நாடும் எதிர்பார்க்கின்றன.

**அன்னம் :**

முன்னாளில் சிறப்போடும் சீரோடும் விளங்கிய பறவைகளுள் ஒன்று **அன்னம்.** அவ்வன்னம் பிற பறவை வகைகளுக்கோ, உயிர் வகைகளுக்கோ இல்லாத ஒரு தனித்தன்மையைப் பெற்றிருந்தது. பாலும் நீரும் கலந்து இருக்குமானால் பாலை மட்டும் பருகி, நீரை விலக்கிவிடும் ஆற்றல் அதற்கு உண்டு. பாலும் நீரும் பிரிக்க முடியாத அளவில் இரண்டறக் கலக்கக் கூடியன. அவற்றையே பிரித்து எடுக்கும் ஆற்றல் அன்னத்திற்கு இருந்தது என்றால் அது மிக

*மிக அரிய தன்மையாகும். அவ்வன்னத்தின் தனித் தன்மையை நீங்கள் பெற வேண்டும்.* **ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களிலும் நீங்களே கற்கும் நூல்களிலும் பிற பிற இடங்களில் அறியும் செய்திகளிலும் சாரமானவற்றை மட்டுமே எடுத்துக் கொண்டு சக்கையானவற்றை விலக்கி விடுதல் வேண்டும்.** *வேண்டாச் சுமையைத் தலையில் அள்ளி வைத்துக் கொண்டு தள்ளாடாமல் அதைக் கீழே தள்ளிவிடுவதே தகுதியான செயல். அச்செயலை முயன்று கடைப்பிடிப்பீர்களாக!*

**பசு :**

*தலை மாணாக்கர்க்கு உவமையாகக் கூறப் பெறுவனவற்றுள் மற்றொன்று பசு. அன்னத்திற் கமைந்த தனித்தன்மை போலப் பசுவிற்கும் ஒரு தனித்தன்மை உண்டு. அது புல்லைக் கண்ட இடத்தில் வயிறார மேயும்; நீரைக் கண்ட இடத்தில் பருகும்; நிழலைக் கண்ட இடத்தில் படுத்து, முன்னர் மேய்ந்த இரையை வாய்க்குக் கொண்டு வந்து நன்றாக அசைபோட்டு விழுங்கும். அது போல நீங்களும்* **வகுப்பறை, நூலகம், படிப்பகம் ஆகிய இடங்களில் நுழைந்து வேண்டியமட்டும் கற்பீர்களாக! தகுதியான இடங்களில் எல்லாம் ஆற்றும் சொற்பொழிவுகளைக் கேட்பீர்களாக! தனியே அமர்ந்து கற்றவற்றையும் கேட்டவற்றையும் பல்கால் சிந்திப்பீர்களாக!** *தலைமை மாணவர் என்னும் தகுதியைப் பெறுவீர்களாக!*

**இடை மாணாக்கர் :**

இனித் தலைமாணாக்கர்க்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் இடைமாணவர்கள். அவர்கள் **மண்ணும், கிளியும்** போல்பவர்.

**மண் :**

உழுது, வெட்டி, உழைத்த அளவுக்கே பயன் தருவது மண்ணின் இயல்பு. அதுபோல் முயன்று ஆசிரியர் கற்பித்த அளவுக்கே பயன் தருபவர் இடைமாணாக்கர். தமக்கெனத் தனி முயற்சியோ, சிறப்போ உடையவராக இவர் இரார்.

**கிளி :**

பன்முறை சொல்லிச் சொல்லி வைத்த சொற்களை மட்டுமே சொல்ல வல்லது கிளி. தானாக எந்த ஒரு சொல்லையும் சொல்லுதற்கு அறியாது. அதுபோல் தாமாக எந்த ஒன்றையும் அறிந்து சொல்லவோ, எழுதவோ முடியாமல் ஆசிரியர் சொல்லி வைத்த அளவுக்கே அறிந்து அமைபவர் இடைமாணாக்கர். அவர்கள் எடுத்த செயலைப் பிறர் உதவியுடன் ஓர் அளவு நிறைவேற்றும் திறம் உடையவர்களாக இருப்பர்.

**கடைமாணாக்கர் :**

இனி இறுதியாக நிற்கும் **கடைமாணாக்கர், கடைமாணாக்கரே! அவர் இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி** போன்றவர்.

**இல்லிக்குடம் :**

இல்லிக்குடம் என்பது ஓட்டைக்குடம். அக்குடத்தில் எவ்வளவுதான் தண்ணீரை விட்டுக் கொண்டே இருந்தாலும் ஒழுகிப் போய்விடும். நிரம்பி நிற்கும் தன்மையில்லாதது. அது போல் கற்றவற்றையும் கேட்டவற்றையும் உடனுக்குடன் மறந்து போகின்ற மாணவர் இல்லிக் குடம் போன்றவர்.

**ஆடு :**

ஆடு ஓரிடத்தே நிலைத்து மேயாது. எவ்வளவு தான் இலை தழைகள் நிரம்பிக் கிடந்தாலும் அவ்விடத்திலேயே நின்று மேய்ந்து வயிற்றை நிரப்பிக் கொள்ளாது. பல இடங்களிலும் சுற்றித் திரியும். அதுபோல் கடைமாணாக்கர் ஓர் ஆசிரியரிடத் திலேயோ ஒரு பள்ளியிலேயோ கற்பதற்கு வேண்டிய அளவு வாய்ப்புக்கள் இருந்தாலும் அவ்விடத்தில் கல்லாது பல இடங்கட்கும் மாறிமாறிச் செல்வர்; முழுமை அறிவும் பெறமாட்டார்கள். **“பலமரம் கண்டவன் ஒருமரமும் வெட்டான்”** என்னும் பழமொழிபோல் அலைந்து கெடுவார்கள்.

**எருமை :**

எருமைக்கென ஒரு தனித்தன்மை உண்டு. ஒரு குளத்தில் எவ்வளவு நன்னீர் இருந்தாலும் அதை அப்படியே குடிக்காது; குளத்தின் உள்ளே இறங்கிச் சேற்றைக் குழப்பிக் கலக்கும்; பின்பு அந்நீரையே இனிதாகப் பருகும். அதுபோல் மாணவர் சிலர்

ஆசிரியர் எவ்வளவு தெளிவாகக் கற்பிப்பவராக இருந்தாலும் அவர் கற்பிப்பதை அப்படியே கொள்ளாமல் வேண்டாதவற்றைக் கிண்டிக் கிளறிச் சேர்த்துக் கொண்டு மகிழ்வர். இவரே கடை மாணாக்கர்.

**நெய்யரி :**

நெய்யரி, நெய் முதலியவற்றை வடித்து எடுப்பதற்குப் பயன்படும். தன்னிடம் ஊற்றப் பெற்றதில் உள்ள சாரமான பகுதியை ஒழுகவிட்டுச் சக்கையை மட்டும் சிக்கெனப் பிடித்துக் கொள்ளும். ஆசிரியர் கூறுவனவற்றுள் இன்றியமையாது வேண்டுவனவாகிய சிறப்பான கருத்துக்களையெல்லாம் போக விட்டுவிட்டு, வேண்டாதவற்றை மட்டுமே நெஞ்சத்தில் பதித்துக்கொள்பவர் நெய்யரி போன்றவர்.

**இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி போன்ற கடைப்பட்ட மாணவர் வழியில் நீங்கள் தலைப்படாமல் விலகிச் செல்வீர்களாக!**

**மூளையின் வகை மூன்று :**

இனி, ஆசிரியர் கற்பிக்கும் கருத்துக்களை வாங்கிக் கொள்ளும் மூளை ஆற்றலை மூன்று வகையாகப் பிரித்துக் கூறுவர் சான்றோர்.

கற்பூரத்தில் சுடரைக் கொண்டுபோய்ப் பொருத்தினால், அஃது எளிதில் பற்றிக் கொண்டு எரியும். நெருப்புத் துண்டை இட்டு ஊதி ஊதித்தான் கரியில் நெருப்பைப் பற்றவைக்க முடியும்.

*எவ்வளவுதான் முயன்றாலும் வாழைத் தண்டில் நெருப்பைப் பற்ற வைக்க இயலாது. எரியவைத்த தீயையும் அவ்வாழைத் தண்டு எளிதில் அணைக்க வல்லது.* **ஆசிரியர் ஒருமுறை சொல்லியவுடன் தெளிவாகப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர் கற்பூரம் போன்ற சுடர்விடும் மூளையர்; ஆசிரியர் முயன்று முயன்று திரும்பித் திரும்பித் கற்பித்த அளவுக்கே அறிவு பெறுபவர் கரிமூளையர்; ஆசிரியர் எவ்வளவு முயன்றாலும் பயன் பெறாமல் அவர் முயற்சியையும் கெடுக்க வல்லவர் வாழைத்தண்டு மூளையர்.** *இவருள் தலையான வராகத் திகழ நீங்கள் உறுதி கொள்ள வேண்டும். நீங்கள் கற்பூர மூளையராக அமைந்து சுடரொளி பரப்புவீர்களாக.*

**தென்றல் :**

*தென்றற் காற்று சோலையில் நுழைகின்றது; குளத்துள் புகுகின்றது; மல்லிகை முல்லைப் பந்தர்களில் தாவுகின்றது; ஆங்காங்குள்ள பூக்களின் உட்சென்று நறுமணத்தைப் பெறுகின்றது; இயற்கை யாகவே குளிர்ந்து மெல்லென்றிருந்த அது மேலும் குளிர்ச்சி பெறுகின்றது; மென்மையும் அடைகின்றது. அதுபோல் நல்ல மாணவர்களாகிய* **நீங்கள் பள்ளிகளிலும், அறிவு நலம் வாய்ந்த பலப்பல மன்றங்களிலும், அறிஞர் அவைகளிலும் சென்று சென்று அறிவுச் செல்வங்களை அள்ளிக் கொள்வீர்களாக! அவ்வாறு அறிவுச் செல்வத்தை நீங்கள் தேடிக் கொள்வீர்களேயானால் உங்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ள அறிவுக் கூர்மையும், பண்பு நலங்களும் மேலும் மேலும் பெருக்கமடையும். நன் மாணவனைப் போல் உலாவிவரும் தென்றல் காற்றே இதற்குச் சான்று.**

**காக்கையும் குயிலும் :**

அறிவு வளர வளரப் பண்பும் வளரவேண்டும். 'படித்தவன் இவன்' என்பதை அவன் பண்பாலேதான் அறிய முடியும். குயிலுக்கும் காக்கைக்கும் நிறத்தால் வேற்றுமை உண்டா? இல்லை. ஆனால் காக்கை கரைதலுக்கும், குயில் கூவுதலுக்கும் எவ்வளவு வேறுபாடு? அது போல் படித்தவனுக்கும் படிக்காத வனுக்கும் எவ்வளவு வேறுபாடு என்று உங்களைக் கொண்டு தெளிவாக அறியுமாறு நீங்கள் விளங்க வேண்டும்.

**ஆபிரகாம் லிங்கன் :**

அமெரிக்க நாட்டின் பெருந்தலைவனாக இருந்தவன் ஆபிரகாம் லிங்கன். அவன் ஒருநாள் விரைந்து குதிரையின் மீது ஏறிப் போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே ஒரு குதிரைமீது வந்த எளியவன் ஒருவன் தன் குதிரையினின்றும் இறங்கி நின்று தன் தலையில் வைத்திருந்த தொப்பியையும் எடுத்துத் தலைதாழ்த்தி வணங்கினான். இலிங்கன் என்ன செய்தான்? குதிரையில் இருந்து கொண்டே வணங்கிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. குதிரையில் இருந்து கீழே இறங்கினான்; தன் தொப்பியைத் தலையிலிருந்து எடுத்தான்; எளியவனைப் பார்க்கிலும் தான் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்தினான். இதனை நேரில் கண்ட மற்றொருவன் இலிங்கனைப் பார்த்து,

"இந்த ஏழைக்காக நீங்கள் கீழே இறங்கி இவ்வளவு பணிவுடன் வணக்கம் செலுத்த வேண்டுமா?" என்று வினாவினான். "**ஆம்! ஆளும் தலைவன் பணிவிலும் தலைவனாகவே இருக்க வேண்டும். இந்த ஏழை, பணிவால் என்னை வெற்றி கொள்ள நான் விடமாட்டேன்,**" என்றான் இலிங்கன். இந்தக் காட்சியும் கருத்தும் உங்கள் மனப் பெட்டியில் என்றென்றும் வைத்துப் போற்றப் படுவனவாக.

**மாணவனும் மதகளிறும் :**

கட்டுப்பாடற்றுக் காட்டிலே களித்துத் திரியும் இயல்பு உடையது களிறு. மதம்பிடித்த களிறு ஒன்றைத் தன் கையில் இருந்த யாழை மீட்டிப் பணியச் செய்தான் உதயணன் என்னும் வேந்தன். அதனைக் கூறவந்த ஆசிரியர் கொங்கு வேளிர், "ஆசிரியர் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் பணிந்து நிற்கும் மாணவனைப்போல் மதகளிறு படிந்தது." எனக் குறிப்பிடுகிறார். மாணவர்க்கு வேண்டிய பணிவுடைமையை இக்குறிப்பு வலியுறுத்துகின்றது.

**அன்புப் பிணைப்பு :**

கால்டேன் என்பவர் அயல் நாட்டைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி. அவர் கல்கத்தாவில் நெடுங்காலம் வாழ்ந்தார். அவருக்கு வங்கமொழி கற்றுக் கொள்ளும் ஆவல் மிகுதியாக இருந்தது. தக்க ஆசிரியர் ஒருவரைத் தேர்ந்து அவரிடம் கற்றுத் தெளிந்தார்.

கால்டேன் ஒருநாள் ஒரு பேரவையில் நின்று சொற்பெருக்காற்றிக் கொண்டிருந்தார்; தமக்கு வங்க மொழி கற்பித்த ஆசிரியர் கூட்டத்திற்கு வந்து தம் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். மேடையில் இருந்து கீழே இறங்கி வந்து அவ்வாசிரியரின் அடிசார்ந்து வணங்க மயன்றார். ஆனால் ஆசிரியர் அவரை அரவணைத்துத் தழுவிக் கொண்டு மகிழ்ந்தார்.

கால்டோனைப் பார்க்கிலும் வங்கமொழி கற்பித்த ஆசிரியர் மூத்தவர் அல்லர். ஒத்த வயதினரும் அல்லர்; முப்பது வயது இளையவர்; இருப்பினும் அங்கே வயது பணிவுக்குத் தடையாக இருக்கவில்லை; அறிவு, ஆராய்ச்சி, செல்வம், பதவி, இனம், நிறம் ஆகிய எவையும் தடையாக இருக்கவில்லை. ஆசிரியர் மாணவர் என்னும் இணையற்ற அன்புப் பெருக்கு ஒன்றே ததும்பி வழிந்தது. மாணவர்களாகிய நீங்கள் படித்து அறியவும். காது கொடுத்துக் கேட்கவும் வேண்டிய அரிய செய்தி இது.

**அறியாமைக்கு அடையாளம் :**

தராசுத் தட்டில் பளு (எடை) ஏற ஏறத் தட்டு கீழே இறங்குகிறது; நீரில் போடப்பட்ட நெல்லில், பதர் மேலே மிதக்க, மணியுடைய நெல் கீழே போகிறது; இவற்றைப் போல், **தலையில் உண்மையாக அறிவுக் கனம் ஏறினால் செருக்கு உண்டாக முடியாது. செருக்கு உண்டாகுமானால் அங்கு அறிவு நிரம்பவில்லை, அறியாமையே மிகுந்து ஏறியிருக்கிறது** என்பது தெளிவாகும்.

**பணிவின் பெருமை :**

மாணவருள் சிலர் தாம் ஒரு வகுப்பைக் கடந்ததும் அவ்வகுப்பிற் கற்பித்த ஆசிரியர்களை மதிக்காதிருப்பதும், ஒரு பள்ளியை விடுத்துக் கடந்ததும் அப் பள்ளி ஆசிரியர்களை மதிக்காதிருப்பதும் காணுகிறோம். தாம் மிகுதியாகப் படித்து விட்டதாகவும், அதனால் முன்னர்த் தமக்குக் கற்பித்த ஆசிரியர்களை மதிப்பது தம் கல்விப் பெருமைக்குக் குறைவு என்றும், தம் உயர்வுக்குத் தக்கது அன்று என்றும் கருதுகின்றனர். இவர்கள் நினைவும் செயலும் இழிவுடையதாகும். இப்போக்கால் ஆசிரியர்க்கு எத்தகைய குறைவும் இல்லையாயினும், அந்த மாணவரின் எதிர்கால வாழ்வுக்கு நன்மையாகாது. தமக்குக் கற்பித்த ஆசிரியர்களைப் புறக்கணித்தது போலவே தமக்கு உதவியவர்களையும், மேல்நிலையில் இருப்பவர்களையும் புறக்கணிக்கும் பண்பு இயல்பாகவே அவர்களுக்கு அமைந்து விடும். குப்பையைக் கிளைத்துப் பழகிய கோழி, பளிங்குத் தளத்தில் இரைபோடப் பெற்றாலும் கூட அங்கும் கிளைத்துத் தின்னுவதே இயற்கை! ஆகவே, ஆசிரியர் பெற்றோர் பெரியோர் ஆகியோரிடத்து இளமை முதலே பணிவுடையவராக நடந்து கொள்வது தம் பெருமைக்கும் நன்மைக்கும் உரிய செயலாகும்.

**எது பணிவு :**

பணிவு என்பதைச் சிலர் வேறுவகைப் பொருளில் கருதுகின்றனர். அஞ்சி நடுங்குவதும் ஒடுங்குவதுமே பணிவு என்று கொள்கின்றனர். கைகட்டி, வாய் பொத்தி நிற்பதே பணிவு என்றும் துணிகின்றனர். இவையெல்லாம் பணிவு ஆகா. உள்ளத்தில் உண்டாகும் அன்பால் தடைகூறாது செய்யும் செயல் முறையில் வெளிப்படுவதுதான் பணிவு. அங்கு அடங்குதலோ அடக்குதலோ இல்லை. ஆண்டானோ அடிமையோ இல்லை. அங்கு அன்பு என்னும் பண்பு ஒன்றே ஒன்றுதான் உண்டு.

**அழலும் நிழலும் :**

ஒருவன் காட்டிலே இருக்கிறான். பனி, கொடுமையாக வாட்டுகிறது; உடலும் உள்ளமும் சேர்ந்து நடுங்குகின்றன. நெருப்பு மூட்டிக் குளிர்காய வேண்டும். குளிர்காய்வது எவ்வாறு? குளிரைப் போக்க வேண்டும் என்று மிக நெருங்கினால் நெருப்பு சுடும்; நெருப்பு, சுடுமே என்று விலகினால் குளிர் தாக்கும். ஆகவே, மிக நெருங்காமலும், மிக விலகாமலும் இருந்து அவன் குளிர்காய்வான். இவ்வாறுதான் ஆசிரியரிடம் மிக நெருங்கி விடாமலும் தொலைவில் அகன்று விடாமலும் மாணவர் இருத்தல் வேண்டும். நிழல் எவ்வாறு உருவை விடாமல் தொடர்கிறதோ, அவ்வாறு ஆசிரியரை விடாமல் மாணவர் தொடர்தல் வேண்டும். இத்தகைய அன்புத் தொடர்பை

முன்னோர் வலியுறுத்தியுள்ளனர். இதில் அடிமைத் தன்மை எதுவும் இல்லை.

**"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து"**

என்று பணிவின் மாண்பைப் பகர்கிறார் **திருவள்ளுவர்.**

அவர் நெறி நன்னெறி. அந்நெறி உங்கள் நெறி ஆவதாக. பணிவுச் செல்வராக அமைந்து பல்கலைச் செல்வர்களாக நீங்கள் வாழ்வீர்களாக.

# 3. நூற் பயிற்சி

நீலவான் ஏறி, நிலவில் தன் காலடியை வைத்துள்ளான் மனிதன். அவன் தன் காலடி வைத்தற்கெனக் கணக்கிட்டிருந்த கால அளவில் சில நொடிகள் கடந்து விட்டன. அதற்காக அவ்விண்ணில் இருந்தே மண்ணுலகில் இருந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். ஒரு நிமிடம் கூடக் காலத் தாழ்வு ஆகவில்லை. சில நொடிகள் தாம். எனினும், அக் காலத் தாழ்வைத் தன் தாழ்வாகக் கருதுகிறான்! அவன் உள்ளத்தின் உயர்வும் முயற்சிச் சிறப்பும் வாழ்க!

**காலம் கருதுக :**

காலம் கடந்து வண்டிக்குப் போய், "வண்டி முந்திவிட்டது" என்று கூறும், வாழையடி வாழைத்

திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் நாம். குறித்த காலத்தில் எந்த ஒன்றையும் தொடங்குவதோ, குறித்த காலத்தில் முடிப்பதோ மிகமிக அரிய செயல்! இப்பழக்கத்திலேயே முதிர்ந்து விட்ட சிலர் இதனை ஒழித்துக் கட்டா விட்டாலும் மாணவர்களாகிய நீங்களாவது ஒழித்தே தீர வேண்டும்.

**இயற்கையின் இயற்கை :**

இயற்கைப் பொருள்கள் காலம் தவறாமல் தம் கடமை புரிகின்றன. ஞாயிற்றின் சுழற்சியில், திங்களின் எழுச்சியில், காற்றின் வருகையில் தவறுதல் உண்டாவது இல்லை. மலர் மலர்வதிலே, மரம் தளிர்ப்பதிலே, இலை உதிர்வதிலே கால்த் தவறு உண்டாவது இல்லை. வைகறையில் கோழி கூவுதலிலே, காகம் கரைவதிலே, பசுவும் கன்றும் குரல் கொடுப்பதிலே தவறு உண்டாவது இல்லை. அஃறிணைப் பொருள்களாகிய இவைபேணும் காலந்தவறாமையைப் பகுத்தறிவுடைய மனிதன் போற்றாமை தவறாகும். அவன் பழக்கக் கேட்டாலும், உணர்ச்சி இல்லாக் குறையாலுமே இங்ஙனம் தவறு செய்கின்றான்.

**காலந்தவறாக் கடப்பாடு :**

உலகத்துள்ள விதவிதப் பறவைகளெல்லாம் ஒரு காலத்தே வந்து **வேடந்தாங்கல்** என்னும் இடத்தில் கூடுகின்றன: உரிய காலம் வந்ததும் பிரிகின்றன.

நாளும் பொழுதும் குறித்து நன்றாக விளம்பரப் படுத்தி அறிவித்த செயலுக்குக் கூட நம்மவர்கள் காலத்தில் வருவது இல்லை. நீங்களாவது **பள்ளிக்கு வருவதிலும் கடமைகள் புரிவதிலும் காலம் தவறாது இருக்க வேண்டும். உங்களைக் கண்டே மற்றோரும் காலம் தவறாமையைக் கற்க வேண்டும்.** கடைப் பிடிக்கவும் வேண்டும்.

**காந்தியடிகளும், காலம் தவறாமையும் :**

ஒரு கூட்டத்துக்குச் செல்லவேண்டிய காந்தியடிகள் ஒருமுறை மிதி வண்டியில் ஏறி விரைந்து சென்றார். காலத்தாழ்வு உண்டாகி விடக் கூடாது, கூடியிருக்கும் பல்லாயிரம் மக்களைக் காக்க வைத்தல் கூடாது, என்பதற்காகவே, அவர் அங்ஙனஞ் சென்றார். அவரைப் போல் செயலில் வழிகாட்ட வேண்டிய பெருமக்கள் பலர் உலகில் தோன்ற வேண்டும். அத் தோன்றல்களை உங்களிடமிருந்து தானே இந்த நாடு எதிர் நோக்க முடியும்?

நாட்டுக்குக் காலந்தவறாமையை உணர்த்துதற்கு முந்தி நிற்கும் உணர்வு உங்களிடம் உண்டாகுமானால் உங்கள் வாழ்வில் சிறப்படைவீர்கள்.

**தளராத ஆர்வம் :**

காலம் தவறாமையை அடுத்து உங்களுக்கு வேண்டுவது கல்வியின் மேல் தளராத ஆர்வம் ஆகும்.

*ஆர்வம் இல்லாத ஒன்று எப்படித்தான் நிறைவான தாக முடியும்?*

**வள்ளுவப் பெருந்தகைக்கு,** *'வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும்' என்னும் ஆர்வம் இருந்ததால்தான், திருக்குறள் என்னும் மாமணி விளக்கை ஏற்றி வைத்தார்.*

**புத்தர் பெருமானுக்கு,** *'உலகத்தார் அல்லலற்ற வாழ்வு வாழ வேண்டும்' என்னும் ஆர்வம் இருந்ததால்தான், பல்லாண்டுகள் காடுகளிலும் மலைகளிலும் அலைந்தும் பட்டினி கிடந்தும் இறுதியில் 'போதி ஞானம்' கைவரப் பெற்றுப் 'போதி மாதவர்' ஆனார்.*

*கவிஞர் கோமான்* **இளங்கோவடிகளுக்கு** *இருந்த கலையார்வம் தான், அவரைக் கலைக் கருவூலமான சிலம்பை இயற்றச் செய்தது.*

*உலகப் பெரும்புலவர்* **சேக்சுபியருக்கு** *இருந்த நாடக ஆர்வம்தான் அவரை இணையற்ற நாடகக்கலை மன்னர் ஆக்கிற்று.*

*ஓவிய ஆர்வம் இல்லையேல்* **இராசா இரவிவர்மாவை** *நாம் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை.*

**இரைட் உடன்பிறந்தார்**கள*ுக்குப் பறக்கும் ஆர்வம் அரும்பியிருக்க வில்லையேல் நிலாவைத் தான் நிற்குமிடமாக மனிதன் ஆக்கியிருக்க இயலாது. ஆகவே,* **ஆர்வம் என்பது அல்லாவுதீன் விந்தை விளக்குப்**

**போன்றது.** அல்லது, நினைத்தவற்றை நினைத்தவாறு தரக் கூடியதாகக் கதைகளில் படிக்கும் **கற்பக மரம்** போன்றது. அவ் வார்வத்தைக் கல்வியிலே காட்டாதவர் மாண்புடைய மாணவர் ஆகார்.

**பருகுதல் போன்ற ஆர்வம் :**

நீர் வேட்கையுடையவன் நீர் கிடைக்கவில்லை யானால் பெருந்துன்பம் அடைகிறான். "எங்கே கிடைக்கும்? எங்கே கிடைக்கும்?" என்று தேடி அலைகிறான். மக்கள் மட்டுமல்லர்; பறவைகளும் விலங்குகளும் நீர் வேட்கையால் வருந்துகின்றன. பொய்க் காட்சியாக, நீர்போல் தோன்றும் கானல் நீரை, உண்மை நீரென நம்பிக்கொண்டு மான்கள் ஓடி ஓடி இளைக்கின்றன.

பாலை வனத்திலே நீர் கிடைக்காமல் அலைந்து திரியும் மான் ஒன்று செந்நாயின் அருகில் இருந்து நீரை நக்கிக் குடிக்கின்றதாம். நாயைக் கண்டவுடனே அஞ்சி ஓடி ஒளியக்கூடிய மான், அச்சமற்று நாயின் அருகில் நீருக்கு ஏங்கி நிற்கின்றது என்றால் அதன் நீர் வேட்கைதான் என்னை! என்னை!

மாணவர்களே, **உங்களுக்குக் கல்வியில் இத்தகு வேட்கை வேண்டும்.** நீரைப் பருகுதற்கு - கொடிய பாலைவனத்தில் நீரைப் பருகுதற்கு - உண்டாகும் வேட்கை போன்ற வேட்கை - உங்களுக்குக் கல்வியில்

உண்டாக வேண்டும். அப்பொழுது தான் குறைவற்ற கல்வியை நீங்கள் பெறுவீர்கள்.

**ஒருப்பட்ட உள்ளம் :**

கல்வி ஆர்வத்தை அடுத்து உங்களுக்கு இன்றியமையாது வேண்டுவது **ஒருப்பட்ட உள்ளம்**. இரண்டு பட்ட உள்ளம் அல்லது பலவகைப்பட்ட உள்ளம் ஊக்கமாக ஒன்றையும் வளரவிடாது. செல்ல வேண்டும் எல்லை வரைக்கும் செல்லவும் விடாது.

**ஒருமுக நினைவின் வெற்றி :**

ஒருமுகப்படுத்தி நாடக மேடையில் செலுத்தும் விளக்கு எவ்வளவு சுடர்விடுகின்றது! ஞாயிற்றின் கதிரை ஒரு குவியாடி வழியாக ஊடுருவிச் செல்ல விடுங்கால் எவ்வளவு விரைவில் வெப்பம் உண்டாகித் தீயே பிடித்து விடுகின்றது! ஒன்றில் நினைவு கவிந்து ஒருமுகப்பட்டுச் செயல்படுங்கால் இத்தகைய வெற்றி எளிதில் கிட்டும்.

**இரண்டு படும் கேடு :**

"இரண்டு தலைவர்களுக்கு ஒரு வேலைக்காரனால் ஊழியம் செய்ய இயலாது". என்னும் கருத்தை வெளியிடுகிறது **கிறித்தவத் திருமறை.**

"ஒரு வேட்டை நாயைக் கொண்டு இரண்டுபேர் வேட்டையாட முடியாது" என்று கூறுகிறது **பழமொழி நானூறு.**

"இரண்டு தோணிகளில் கால் வைத்தவன் ஈடேற மாட்டான்" என்கிறது நாட்டுப் பழமொழி. ஆகவே, ஒரே போக்கில் உங்கள் கருத்தைச் செலுத்திக் கற்றல் வேண்டும்.

**வில்லாசிரியர் :**

தருமன் வில்லை எடுத்தான்: அம்பைத் தொடுக்க முனைந்தான். "உனக்கு என்ன தோன்றுகின்றது?", என்றார் வில்லாசிரியர்: "சாலை, சோலை, மரம் கிளை, பழம் எல்லாம் தோன்றுகின்றன" என்றான் தருமன். எய்ய விடாமல் வில்லை வாங்கிக் கொண்டார் ஆசிரியர். வீமனிடம் வில்லைத் தந்தார். அவனும் குறிபார்த்தான்; அவனும் சோலையும், மரமும், கிளையும், பழமும் தெரிவதாகக் கூறினான். அவனிடம் இருந்தும் வில்லை வாங்கிக் கொண்டார் ஆசிரியர். அப்படியே நகுலன், சகாதேவன் ஆகியவரிடமும் தந்து குறிபார்க்கச் செய்து வில்லை வாங்கிக் கொண்டார். இறுதியாக அருச்சுனனிடம் வில்லைத் தந்தார். அவன் குறிபார்த்தான். ஆசிரியர், "உனக்கு என்ன தோன்றுகின்றது?" என்றார். "பழம் மட்டுமே தோன்றுகின்றது?" என்றான். 'அம்பை ஏவு' என்றார் ஆசான். ஏன்? மற்றவர்கள் குறிப்புப் பழத்தில் மட்டும் இல்லை. எத்தனையோ பொருள்களில் இருந்தது. அருச்சுனன் ஒருவனுக்கு மட்டுமே சரியாகத் தைக்க் வேண்டிய இடத்திலே குறிப்பு இருந்தது. அக்குறிப்பை அறிந்துகொண்ட

*நீங்கள் உங்கள் குறிப்பை ஒருமுகப்படுத்தாமல் சிதறவிட மாட்டீர்கள் அல்லவா!*

**வல்வில் ஓரி :**

*இன்னொரு வில்லாளி! அவன் பெயரே வல்வில் ஓரி! அவன் ஒரு முறை அம்பு எய்தான். எப்படிச் சென்றது அவன் எய்த அம்பு? முதற்கண் ஒரு யானையைத் துளைத்தது. பின் அதனைக் கடந்து சென்று ஒரு புலியை வீழ்த்தி உருவியது; மேலும் சென்று, ஒரு மானையும் பன்றியையும் கிழித்தது; இறுதியாகப் புற்றிலே கிடந்த உடும்பில் தைத்து நின்றது! ஓரி குறி வைத்த திறம்தான் என்னே! ஒரு கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்தியவனே பெரிய குறிப்பாளி என்று பாராட்டப் பெறும்போது, ஓரியை எப்படிப் பாராட்டுவது? அவன் காட்டிய ஒருப்பட்ட குறிப்பாற்றல் உங்களுக்கு வரக்கூடாது என்பது உண்டா?* **திறமை பொதுச் சொத்து! ஆனால் ஆர்வத்துடன் முழு மூச்சாகத் தேடிக் கொண்டவர்களுக்குத்தான் அது கிட்டும். நீங்கள் ஆர்வத்தோடும் அசையா உறுதியோடும் தேடுவீர்களானால் அடையப் பெறுவீர்கள்!**

**உறங்காத உறக்கம் :**

**விவேகானந்தர்** *சிறுபருவத்தில் ஒரு பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார். ஆசிரியர் ஏதோ ஒரு பாடத்தை மிகத் திறமாக நடத்தினார். நடத்தும்போது அவர் பார்வை விவேகானந்தர்மீது விழுந்தது. விவேகானந்தர் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தது ஆசிரியர்க்கு*

உறங்குவதாகத் தோன்றியது. ஆகவே நெருங்கிச் சென்று எழுந்திருக்கச் செய்து கடிந்து கொண்டார்.

"ஐயா நான் உறங்கவில்லை" என்று விவேகானந்தர் மறுத்தார். பொய் சொல்வதாகவே ஆசிரியர் கருதினார். ஆனால் தாம் உறங்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக வகுப்பில் ஆசிரியர் சொல்லிக் கொண்டு வந்த கருத்துக்களில் ஒன்றும் விடாமல் கூறினார். அதற்குப்பின் உண்மையென ஒப்புக்கொண்ட ஆசிரியர் வியப்படைந்தார்: "ஏன் கண்களை மூடிக் கொண்டிருந்தாய்?" என்று வினாவினர். அதற்கு விவேகானந்தர் "ஐயா, நான் கண்களைத் திறந்து கொண்டு இருந்தால் என் எண்ணம் ஒருவேளை சிதறக்கூடும்: தாங்கள் கூறும் செய்திகளை விட்டு விடவும் கூடும்: அவ்வாறு ஏற்படக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு கண்களை மூடிக் கொண்டேன்" என்றார். ஆசிரியர் மிக மிக வியப்புற்றார். உங்களுக்கு இவ்வரலாறு வியப்பூட்டுவதால் மட்டும் பயனில்லை: வழிகாட்டி யாகவும் அமையவேண்டும். அதற்காக வகுப்பில் நீங்கள் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும் என்பது இல்லை. உங்கள் கருத்தை ஒருமுகப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே நோக்கம்.

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டு இருப்பார்: மாணவன் கண்கள் எங்கெங்கோ வட்டமிடும்: காதுகள் பிற ஒலிகளைக் கேட்கும்! எண்ணங்களோ ஊஞ்சலாடும்! இத்தகு நிலைமையில்தான், "நுழைந்ததா" என்று ஆசிரியர்

வினாவும்போது "வால் மட்டும் நுழையவில்லை" என்று விடை வரும். "எண்டிசையும் செல்லும் வண்டிதனை நோக்கும் மண்டு" என்று ஆசிரியர் வாழ்த்துரை வெளிவரும். இத்தகைய சிதறல் விடாமல் காப்பீர்களாக.

**ஒவியப் பாவை :**

உடைந்து பிளவுபட்ட கண்ணாடி உங்கள் முகத்தை எப்படி எப்படிக் காட்டுகிறது? முழுமையாகக் காட்டுகிறதா? **கண்ணாடிச் சிதறல் மட்டுமன்று, எண்ணச் சிதறலும் இத்தகையதுதான்.** ஆகவே ஒருப்பட்ட உள்ளத்தைப் பழகிப் பழகிக் கைவரப் பெறுவீர்களாக! பின்னர் உங்கள் முயற்சி இல்லாமலே உங்களுக்கு நன்றாக ஒருள்ளம் அமைந்துவிடும். 'எழுதி வைத்த ஓவியம் போல இருந்து மாணவர் பாடம் கேட்கவேண்டும்' என்னும் கொள்கை உண்டாகியதே ஒருப்பட்ட உள்ளத்தை உண்டாக்குவதற்காகவே யாம்.

**அழுத்தமான பழக்கம் :**

ஆசிரியரிடம் பாடம் கேட்கிறீர்கள். கேட்டதைக் கேட்டவுடன் அல்லது சில நாள்களில் மறந்து போவீர்களானால் கேட்டதன் பயன்தான் என்ன? களஞ்சியத்தில் தானியத்தைச் சேர்த்து வைத்து, வேண்டிய பொழுதுகளில் எல்லாம் அள்ளி எடுத்துப் பயன் படுத்திக்கொள்ளுவது போலக் கேட்ட கருத்துக்களை விடாமல் தொகுத்து வைத்து ஏற்றவாறு பயன்படுத்துதல் வேண்டும். அவ்வாறு

மனத்தில் தேக்கவும், வெளிக் கொணர்ந்து பயன்படுத்தவும் பழக்கம் வேண்டும்; தொடர்ந்து பழகவும் வேண்டும். முதலாவது மிதி வண்டி விடக் கற்கும்பொழுது கால் நடுங்குகிறது; கை நடுங்குகிறது; முதுகும் நேராக நிற்பதில்லை. ஆனால் பழகப் பழக விளையாட்டாகவே ஓட்ட முடிகிறது. அவ்வாறே கல்வியும் வர வரப் பயிற்சியாகிவிடும். **"வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்"** என்பது ஒரு தனிப்பாடல் வரி.

"ஆசிரியரிடம் ஒருமுறைக்கு இருமுறை, மும்முறை பாடங் கேட்டல் வேண்டும். அவ்வாறு கேட்டதை விடாமல் உள்ளத்து இருத்திப் போற்றல் வேண்டும். பாடம் கேட்டுப் போற்றினால் கூட, பெற வேண்டிய முழுமை அறிவில் கால் பங்குதான் பெறல்கூடும்" என்று **பவணந்தி முனிவர்** உரைக்கின்றார். 'முழுத் திறமையும் எப்படி அடைய முடியும்?' என்று அவரிடம் வினாவினால்,

"உன்னுடன் படிக்கும் மாணவர்களுடன் உன் பாடம் பற்றி வினாவியும் விடைதந்தும் பழகினால், உனக்கு மேலுமொரு கால் பங்குத் திறமை கிடைக்கும். பன்முறையும் நீ செவ்வையாகப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் பயிற்சியைப் பெற்றால், எஞ்சிய அரைப் பங்குத் திறமையும் கைவரப் பெறுவாய்" என்கிறார். முழுமை அறிவு பெறுதற்கு அவர் வழி காட்டியுள்ளார். முழுமை அறிவு பெற வேண்டியவர்கள் நீங்கள். ஆதலால் உங்கள் முன் அக்கருத்தை எடுத்து வைக்க வேண்டுவது எங்கள் கடமையாகும்.

☆ ☆ ☆

# 4. நல்லவையும் அல்லவையும்

அன்புள்ள மாணவர்களே, உங்களுக்குக் கல்வியின் மேல் தணியாத ஆர்வம் வேண்டும் என முன்னரே உரைத்தோம். ஆர்வம் கொண்டீர் களானால் அவ்வார்வம் 'வாளா' போகாது; பற்றாக மலரும்; பெரும் பயன் அளிக்கும். ஆகவே, **ஆர்வத்தின் முதிர்ச்சியே பற்று** என்பதை நீங்கள் உணர்தல் வேண்டும்.

**பற்றுதல் :**

பற்றுதல் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வகையாக உண்டாகி வளரும்; ஒவ்வொன்றில் உண்டாகி வளரும். அணிந்து கொள்ளும் சட்டையின் நிறத்திலேயே ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருவகைப் பற்று உண்டு! ஒருவர்க்குச் சுவையாகத் தோன்றும்

உணவு, காய்கறி முதலியவை மற்றொருவர்க்குச் சுவையற்றனவாகத் தோன்றுகின்றன. தனித்தனிப் பற்றின் விளைவே இது.

**பற்றே தேர்ச்சி :**

நீங்கள் ஆர்வத்துடன் எல்லாப் பாடங்களையும் படிக்கிறீர்கள்; ஆனால் ஒரு பாடத்தில் உங்களுக்கு மிகுந்த பற்றுதல் உண்டாகி விடுகின்றது. அதில் இணையற்று விளங்குகிறீர்கள். "இன்ன பாடமா? இன்னவன் தான் முதல் மதிப்பெண் பெறுவான்; அவனை விஞ்ச முடியாது" என்று ஆசிரியர் மட்டுமல்லர், உடன் மாணவர்களும் உறுதியாகக் கூறும் அளவுக்கு அப்பாடத்தில் தேர்ச்சி கொள்கின்றீர்கள். பாராட்டுக்குரிய செய்தி இது.

**பாரதியார் :**

**பாரதியார்** சிறுவராக இருந்தபோது அவர் தந்தையார் 'கணக்குப் போடு' என்றாராம். "கணக்கு மணக்கு, பிணக்கு, ஆமணக்கு" என்று அடுக்கிக் கொண்டு போனாராம் பாரதியார். "ஏனடா விழிக்கிறாய்?" என்றாராம் தந்தையார். "விழி, பழி, குழி" என்று கூறி ஒரு சுழியைப் போட்டாராம் பாரதியார். ஏன்? தந்தையின் பற்றுதல் கணக்கில் இருந்தது. மைந்தன் பற்றுதல் தமிழ்க் கவியில் இருந்தது. இவ்வேறுபாடுதான் திருவிளையாடல் நடத்துகின்றது.

**இராமானுசம் :**

கணக்கில் இணையற்று விளங்கினார் பேரறிஞர் **இராமானுசம்.** அயல் நாடுகள் அவரை அழைத்துப் பெருமைப்படுத்தின; அவர் தம் ஆராய்ச்சித் திறத்தை பாராட்டிப் பட்டம் வழங்கிப் பெருமை கொண்டன. ஆனால் அவரால் மொழிப் பாடத்தில் திறமை காட்ட முடிந்ததா? இல்லை. ஏன்? அவர் கொண்ட கணக்குப்பற்று மற்றவற்றை நாட விட்டவில்லை.

**தாகூர் :**

கல்வி நிலையத்திற்குச் சென்று படிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் வற்புறுத்திய வேளையிலே கங்கைக் கரையில் உலாவவும் இமயச் சாரலில் உறையவும் விரும்பினார். தாகூர். அவரை இயற்கைச் சூழலும் கதை, கவிதை, கற்பனைகளும் எப்பொழுதும் பற்றிப் பிடித்துக் கொண்டே இருந்தன. அவருக்கு அவற்றின் மேல் இருந்த ஈடுபாடே 'நோபல்' பரிசைக் கொண்டு வந்து சேர்த்தது. அழியாச் செல்வங்களான நூல்களை வழங்கியது.

**காந்தியடிகள் :**

**அரிச்சந்திரன்** நாடகத்தைக் காந்தியடிகள் மட்டும் தான் பார்த்தாரா! எத்துணையோ கோடி மக்கள் பார்த்துள்ளனர். இப்பொழுதும் பார்க்கின்றனர்.

ஆனால் கரந்தியடிகளால் மட்டும் தானே, "நானும் இவனைப் போல் வாய்மை காப்பேன்" என உறுதிகொள்ள முடிந்தது. தம் வரலாற்றையே '**சத்திய சோதனை**' யாக்கிக் கொள்ளவும் முடிந்தது. அந்தச் சத்திய சோதனையை நம்மில் எத்துணைப் பேர்களால் செய்ய முடிகின்றது?

**பற்றுக்குள் பற்று :**

தனித்தனிப் பாடத்திலே உண்டாகும் பற்றுதல் மட்டும் இல்லை, ஒரு பாடத்தின் ஒரு பகுதியிலேயும் ஒரு தனி நூலிலேயும் பற்றுண்டாவதும் கண்கூடு. திருக்குறளார், சிலம்புச் செல்வர், திருப்புகழார் என்று அழைக்கப் பெறும் பெருமக்களை அறிகிறோம். **குறிஞ்சிக் கபிலரும், பாலைபாடிய பெருங் கடுங் கோவும்** சங்க காலத்தில் இருந்ததை அறிந்திருக்கிறோம். வெண்பாவில் புகழேந்தியும், விருத்தத்தில் கம்பனும் இடைக் காலத்தில் இலங்கியதை அறிந்துள்ளோம். நினைவு எல்லாம் நாடகமே ஆன பேரறிஞர் **பெர்னாட்சா**, நம் நினைவை விட்டு அகன்றார் அல்லர். "பாலெல்லாம் நல்லாவின் பாலாகுமா? நூலெல்லாம் வள்ளுவன் செய் நூலாகுமா?" என்று வினாவுகிறார் வள்ளுவரைப் போற்றும் **ஒருவர்.**

"கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க் கிதயம் களியாதே" என்கிறார் கம்பர்க்கு அன்பர் ஒருவர்.

"நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்" என்கிறார் சிலம்பின்மேல் இணையற்ற பற்றுள்ளம் கொண்ட பாரதியார்.

**"எங்கள் நாட்டை இழந்தாலும் இழப்போம்; ஆனால் சேக்சுபியரை இழக்க மனம் ஒப்போம்"** என்று ஆங்கிலத்தில் புலமைபெற்ற பேரறிஞர் ஒருவர் கூறுவதிலே அவர் தம் பற்றார்வம் எவ்வளவு **தெளிவாகப் புலப்படுகின்றது!**

**காரல் மார்க்சு :**

"ஞாயிற்றுக் கிழமைதோறும் உன்னை நடுத்தெருவில் நிறுத்தி வைத்துக் கசையினால் இருபது அடிகள் அடிப்போம். ஏற்றுக்கொள்ள முடியுமானால் தான் நீ விரும்பும் நூல்களைப் படிக்கலாம்" என்று எவரேனும் எனக்குக் கட்டளை இடுவாரானால் "அடிக்கு அஞ்சிப் படிப்பை நான் விடமாட்டேன். அடியை உவப்போடு பெற்றுக் கொண்டு படிக்கவே செய்வேன்" என்று தாமே வினாவை எழுப்பிக்கொண்டு விடை கூறுகிறார் பெருஞ் சிந்தனையாளர் **காரல் மார்க்சு.**

**சாக்ரடீசு :**

"எனக்கு நல்ல நூல்களைத் தேடித் தருபவர்களே இனிய நண்பர்கள்" என்று சொல்லும் சாக்ரடீசு, "புல்லைக் காட்டிக் கொண்டு முன்னே ஒருவன் சென்றால் அவனை விடாது மாடு

தொடர்ந்து செல்வது போல, நூல்களைத் தேடித் தருபவனைப் பின்தொடர்ந்து நான் செல்கிறேன்" என்று கூறுகிறார்.

**அலெக்சாண்டர் :**

பாரசீகத்தை வெற்றி கொண்டார் **அலெக்சாண்டர்.** ஆங்கு அழகிய வேலைப்பாடு அமைந்த தங்கப் பேழை ஒன்று கிடைத்தது. அதில் "அரசே! தங்கள் திருமுடியை வைக்கலாம்", "நீங்கள் வீர வழிபாடு செய்பவர்கள். ஆகவே உங்கள் வாளை வைக்கலாம்," "அன்னைமேல் அளவிலா அன்பு உடையவர்கள் நீங்கள். ஆகவே அவர்களுக்கு அணிகலப் பேழையாகத் தரலாம்" என்று பலரும் பலவாறு கூறினர். ஆனால் மாவீரர் அலெக்சாண்டர் கூறியது வேறொன்றாக இருந்தது. **"இதில் வைத்துப் போற்றத் தக்கது ஓமர் பெருமானால் எழுதப்பெற்ற 'இலியாத்' என்னும் காவியம் ஒன்றேயாம்"** என்றார். அலெக்சாண்டருக்குப் போர்ப்பற்று மிகுதியா? நூற்பற்று மிகுதியா? என்பதை எண்ணிப் பார்க்க அல்லவா தூண்டுகின்றது இந்நிகழ்ச்சி.

**பெருஞ்சேரல் :**

தகடூரைத் நிலமட்டமாக்கியவன் **பெருஞ்சேரல் இரும்பொறை.** அவனைத் 'தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என அழைத்தனர் முன்னோர். அவனைத் தேடி அரண்மனைக்கு வந்தார் புலவர் **மோசிகீரனார்.** வழி நடந்த களைப்பாலும் பசியாலும் அரண்மனைக்குள் நுழைந்த அப்புலவர் கண்ணில்,

ஆங்கிருந்த முரசுகட்டில் காட்சியளித்தது. முரசம் நீராட்டுதற்காகக் கொண்டு செல்லப்பெற்றிருந்தது. முரசு கட்டில் அஃது என்பதை அறியாமல் புலவர் படுத்துக் கண்ணயர்ந்து விட்டார்.

வேந்தன் முரசத்துடன் மீண்டான்: முரசு கட்டில்மேல் ஒருவன் படுத்திருக்கக் கண்டான்; வெகுண்டான்: தெய்வத்தன்மையுடையதாகப் போற்றப்படும் முரசு கட்டில் மேல் ஒருவன் படுத்ததைப் பெருங் குற்றமாகக் கருதினான். ஆகவே அவன் தலையைக் கொய்யக் கருதி, வாளை உறையினின்று எடுத்துக் கொண்டு அருகே சென்றான்: அவ்வேளையில் படுத்திருப்பவனை உற்று நோக்கினான் இரும்பொறை. புலவர் மோசியார் அங்கு உறங்குகிறார் என்பதை அறிந்தவுடன் **எடுத்த** வாளை உறைக்குள் இட்டான். தன் கைகளால் கவரி கொண்டு விசிறினான். அதனால் அவன் 'கவரி வீசிய காவலன்' என்னும் புகழ் பெற்றான். பாவலனுக்கு உயிர் தந்த காவலனும் ஆனான். தமிழின் மேல், தமிழ்ப்புலவன் மேல் இரும்பொறைக்குப் பற்றில்லாது இருந்திருக்கு மானால் அவனிடம் அருட் பெருக்கைக் கண்டிருக்க முடியாது: குருதிப் பெருக்கையே அங்குக் கண்டிருக்க முடியும்.

**பிண்டார் :**

பெருஞ்சேரல் செயல் போலவே, அலெக்சாண்டர் வாழ்விலும் இப்படியொரு நிகழ்ச்சி நடந்தது. 'தீப்சு' என்பது ஒரு பெரு நகரம்.

ஆங்கு அலெக்சாண்டரால் ஆறாயிரம் மக்கள் கொல்லப் பெற்றனர். முப்பதாயிரம் மக்கள் சிறை பிடிக்கப் பெற்றனர். ஒரே ஒரு வீட்டைச் சுட்டு விரலால் காட்டினார் அலெக்சாண்டர். “இந்த ஒரு வீட்டை மட்டும் விட்டு விடுங்கள்: எஞ்சியவற்றையெல்லாம் இடித்துத் தள்ளுங்கள்” என்று வீரர்களுக்கு ஆணையிட்டார். அவர் ஆணையை நிறைவேற்றிய பின்னர் “ஏன் இந்த ஒரு வீட்டை மட்டும் இடிக்காமல் விடவேண்டும்” என்று வீரர்கள் வினாவினர். **“பிண்டார் என்னும் கவிக்குலக் கோமான் குடியிருந்த இடம் அது. அவன் வாயில் இருந்து தேன் ஒழுகியது போன்ற கவிதைகள் உருவாகி இருக்கின்றன,”** என்றார் அலெக்சாண்டர். “அழிவு, அழிவு: ஓயா அழிவு: போர், கொள்ளை” என்றே வாழ்ந்த அவர் உள்ளத்தில் இருந்த இலக்கியப் பற்று இவ்வளவு என்றால் உங்கள் உள்ளத்தில் எவ்வளவு அழுத்தமாக இருக்க வேண்டும்.

**ஆபிரகாம் லிங்கன் :**

ஆபிரகாம் லிங்கனுக்கு இருந்த நூலார்வத்தை இவ்வளவு என்று அளவிட்டுரைக்க இயலாது. அவ்வார்வம்தான் தச்சுவேலை புரிந்த அவரை அமெரிக்க நாட்டின் தலைவர் ஆக்கியது என்று கூறலாம்.

இலிங்கன், கால்நடையாகப் பலகல் தொலைவு சென்று ஒருவரிடம் ஒரு நூலை இரவலாக வாங்கிக்

கொண்டு வந்தார். அதனைத் தம் எளிய குடிசையின் பலகணியின் அருகில் வைத்துவிட்டு வேலைக்குச் சென்றார். அன்று பெய்த மழையால் நூல் நனைந்து கெட்டுப் போயிற்று. மிகமிக வருந்தினார். இரவலாக நூல் தந்தவரை அணுகி, நிகழ்ந்ததை உரைத்தார். "இப்புத்தக விலைக்காக நீ தோட்டத்தில் மூன்று நாள்கள் வேலை செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் இந்தப் புத்தகத்தை நீயே வைத்துக் கொள்ளலாம்," என்றார் அவர். வேலை செய்வதைப் பற்றிச் சிறிதும் வருந்தவில்லை இலிங்கன். மாறாக மகிழ்ச்சியே கொண்டார். வேலையை முடித்துவிட்டுப் புத்தகத்தை வைத்துக் கொள்ளவும் சொல்லி இருக்கிறார். அல்லவா! இந்த மகிழ்ச்சியுடன் மற்றொரு மகிழ்ச்சி "நீ இங்கே வேலை செய்யும் வரைக்கும் என் நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்களில் நீ விரும்பும் எதனையும் எடுத்துப் படித்துக் கொள்ளலாம்" என்று அவர் கூறியது. இலிங்கனது நூற்பித்துக்கு ஆங்குச் செய்த வேலை தண்டனையாகத் தெரியவில்லை. நன்கொடையாகவே புலப்பட்டது.

**நல்லதும் அல்லதும் :**

பற்றுதல் வேண்டும் என்று வலியுறுத்தியவுடனே எல்லாவற்றின் மேலும் பற்றுச் செலுத்த வேண்டும் என்பது அன்று. பற்றுகளில் நல்லவையும் உண்டு: தீயவையும் உண்டு.

*நல்லவற்றைக் கொண்டு அல்லவற்றை உதறித் தள்ளுவதே அறிவுடைமையாகும்.*

**எந்த ஒரு பற்று, தனி வாழ்வை மட்டும் அல்லாமல் மன்பதை வாழ்வை வளமுடையதாக்குமோ. எந்த ஒரு பற்று தனக்கென வாழாமல், பிறர்க்கென வாழும் பெருந்தகைமையை உண்டாக்குமோ, எந்தவொரு பற்று நிலைபேறற்ற இந்த உலகில் தன்னை என்றும் புகழால் நிலைபெறச் செய்யுமோ, எந்த ஒரு பற்று, பின் வருவாரை யெல்லாம் பின்பற்றி நடக்கத் தூண்டவல்ல எடுத்துக்காட்டான வாழ்வாக அமையுமோ அந்தப் பற்றே எல்லாராலும் போற்றிக் கைக்கொள்ளத் தக்கது ஆகும்.**

*நல்லதும் அல்லதும் இரட்டைகள் அல்ல: காசின் இரு பக்கங்கள் போல அமைந்தவை. அவை ஒன்றையொன்று முட்டுவன்: மோதுவன: அழிப்பன! ஒன்று வளரின் மற்றொன்று தளரும்: ஒன்று தேயின் மற்றொன்று ஓங்கும்: ஒன்று வீழின் மற்றொன்று வாழும்: ஒன்று குறைந்தால் மற்றொன்று பெருகும். ஒன்றை ஒன்று விழுங்கக் காத்துக் கொண்டு இருக்கும் மீன்களைப் போன்றன. நல்ல பற்றுதல் வலிமை யுடையதாக இருந்தால் அது தீய பற்றுதலை அழிக்கும். தீய பற்றுதலை ஒழிக்கும். ஆதலால் தக்கதை அறிந்து தளராமல் செயலாற்ற வல்லவரே வெற்றி நடையிட்டு விளங்க முடியும்.*

*“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே” என்ற கருத்தை* **விவேகானந்தர்** *வழங்கினார்:* **பாரதியார்** *அதற்குக்*

கவிவடிவு தந்தார். இருவர் பற்றும் இலங்கும் இடங்கள் இவை.

**மொழிப்பற்று :**

"தமிழ், தமிழ், தமிழ் - என்று எப்பொழுதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய ஆராய்ச்சி, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் - தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும்."

"தம்பி - நான் ஏது செய்வேனடா; தமிழைவிட மற்றொரு மொழி சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்த முண்டாகிறது; தமிழனைவிட மற்றொரு சாதியான் அறிவிலும் வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்குச் சம்மதமில்லை; தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு சாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது."

"தம்பி - தமிழ்நாடு வாழ்க என்று எழுது: தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது: தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது. அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகள் எல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்று எழுது."

என்று தம் அன்புத் தம்பியாக ஏற்றுக்கொண்ட **நெல்லையப்பருக்குக்** கடிதம் எழுதினார் பாரதியார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று பாடிய கவிஞர் அல்லரோ அவர்.

**நாட்டுப் பற்று :**

**தங்கத்தின்** வயிற்றில் தங்கம் பிறந்தது போலப் பிறந்தான் **குமாரசாமி.** அவனே **திருப்பூர் குமரன்.** நாட்டின் மேல் அவன் கொண்டிருந்த பற்றுக்கு அளவும் உண்டோ? காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய நாளில் தொண்டு செயப் புகுந்து, தொண்டர் தலைவன் ஆனவன் அவன்.

"ஊர்வலம் போதல் கூடாது: கூட்டம் கூட்டுதல் கூடாது" என்று அரசு ஆணையிட்டிருந்தது. ஆனால் உறுதியாக ஊர்வலம் போவதென உரிமைத் தொண்டர்கள் முடிவு செய்திருந்தனர். தலைமை தாங்கி வழி நடத்த இருந்த தலைவரோ அஞ்சிப் பின் வாங்கிவிட்டார். அஞ்சாத கோளரியாக முன் வந்தான் குமரன். கொடி பிடித்துக் கொண்டு, முழக்கத்துடன் முன்னே சென்றான்.

கொடுமையான அளவில் தடியடி நடந்தது. கைத்தடிகள் உடைபட, மண்டைகளும் எலும்புகளும் நொறுங்கின. இந்திய அன்னையின் எழில் மிக்க நெற்றிக்கு இட்ட பொட்டே போல மண்ணில் குருதி கொட்டியது. அயர்ந்தான் இல்லை குமரன்: தடியால் தாக்குண்டு வீழ்ந்தபோதும் கொடியை விட்டான் இல்லை. **கொடியை உறுதியாகப் பிடித்துக் கொண்டே,**

**குமரனாகச் சென்ற அவன் அமரன்** ஆனான். அவன் நாட்டுப் பற்று இருந்தவாறு அது.

**அறிவியற் பற்று :**

"நாம் இருவரும் இன்பமிக்க ஏதாவது ஓர் இடத்திற்குச் சென்று திரும்ப வேண்டும்," என்று **எடிசனை** நோக்கி அவர்தம் இள மனைவி வேண்டினார். "ஆம். செல்லலாம்" என்றார் எடிசன். என்றும் இசையாத கணவர் உலாச் செல்ல இசைந்தது குறித்து மகிழ்ந்தார் மனைவி. உலாவுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தலில் ஈடுபட்டார்.

பொழுது விடிந்தது. எடிசன் வழக்கம்போல் தம் ஆய்வுக்கூடத்தின் தாழ்க்கோலை எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார். மனைவியார் வந்து, "என்ன? நாம் இன்று இன்பச் செலவு அல்லவா செல்ல வேண்டும்" என்றார். "ஆம்! ஆம்! **எனக்கு இன்பமான இடம், என் ஆய்வுக் கூடம் ஒன்றுதான்**" என்று கூறி ஆய்வுக்கூடத்திற்குப் புறப்பட்டார் எடிசன், அவருக்கு இருந்த அறிவியல் ஆய்வுப் பற்று அது! அப்பற்றால்தானே நூற்றுக் கணக்கான அறிவியற் கருவிகளைப் படைக்க முடிந்தது. எடிசன் என்னும் அறிவியற் பற்றாளன் தோன்றவில்லையானால் இன்று காணக்கிடைக்கும் வாய்ப்புக்களில் எத்துணையோ தலைகாட்டி இருக்கமாட்டா. அவனை நினைத்து விம்மிதம் அடையும் நாம், அவன் வழியில் எவ்வாறு செல்லலாம் என்று சிந்திக்க வேண்டுமல்லவா?

**தெய்வப்பற்று :**

ஆண்டவன்மேல் பெரும்பற்றுக் கொண்ட அருந்தொண்டர் **திருநாவுக்கரசர்.** உண்ணும்போதும் உறங்கும்போதும் 'தொண்டு, தொண்டு' என்றே இருந்த பெருந்தகை அவர். 'தொண்டலால் துணையும் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்று ஆண்டவனையே தொண்டர் துணைவனாகக் கொண்டவர் அவர். **'என் கடன் பணிசெய்து கிடப்பதே'** என்பது அவர் திருவாய் மொழி.

'உயிர்களுக்குச் செய்யும் தொண்டாலே, உயிர்களைத் தந்த இறைவனுக்கு வழிபாடு செய்ய வேண்டும்' என்னும் திருநெறியாளர் திருநாவுக்கரசர். ஆதலால் ஏனையோர் எல்லாம் இறைவனை வழிபடுவதே கடனாகக் கொண்டிருக்கத் திருநாவுக் கரசரோ **உழவாரப்படை** என்னும் கருவி கொண்டு திருப்பணி புரிந்தார்.

எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் ஆங்கு முளைத்துக் கிளைத்துள்ள புல்களையும், முன் நிறைந்த செடிகளையும் வெட்டி எறிந்து துப்புரவு செய்தார்; கோயிலில் நீர் தெளித்து மெழுகி வழிபாடு செய்யும் வழக்கம் கொண்டிருந்தார். 'தொண்டின் தரம் ஏற ஏற இன்பம் ஏறும்' என்பது அவர் முழக்கம். 'திருக்கோயிலைப் பெருக்குவதால் உண்டாகும் இன்பத்திலும் மெழுகுவதால் இன்பம் ஒன்றுக்குப்

*பத்தாகப் பெருகும்; விளக்கு ஏற்றி வைத்தால் மேலும் இன்பம் பெருகும் என்று விளக்குகிறார் அப்பெரியார்.*

**பற்றே இல்லாத ஒரு நிலையும் உண்டு.** *அது* **தன்னலம், தன் வாழ்வு என்பதைச் சிறிதும் கருதாத ஒரு நிலை. உயிர்கள் அனைத்தும் என்னுயிரே என்று கருதும் பெருநிலை.** *அப்பெருநிலை வாய்க்கத் தொடக்கப் படியாக இருப்பது நல்லவற்றின்மேல் நயத்தக்க பற்றுச் செலுத்துதலாம். அதனைப் பற்றுதற்கு வாயிலாகத் தானே நீங்கள் பள்ளி வாயிலுக்கு வந்திருக்கிறீர்கள்! வாழ்க நற்குண நற் செயற் பற்றுகள்.*

**"அல்லவை தேய அறம் பெருகும்"**

*- திருவள்ளுவர்*

**"அறம் வளர்ந்திடுக! மறம் மடிவுறுக"**

*- பாரதியார்.*

**"விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றி யாகும்."**

*- நாவுக்கரசர்.*

☆ ☆ ☆

# 5. தூண்டலும் துலங்கலும்

வகுப்பில் கடைசியாக இருந்த மாணவன் முதல்வனாக மாறிவிடுகின்றான். விளையாட்டு மேடைக்கே செல்லாத ஒருவன் வெற்றிக் கேடயங்கள் பலப்பல பெறும் அளவுக்குச் சிறந்த ஆட்டக்காரன் ஆகிவிடுகின்றான். கணக்கில் மதிப்பெண் நூற்றுக்குப் பத்து எடுப்பதற்கும் இயலாமல் தவித்த ஒருவன் நூற்றுக்கு நூறு வாங்கும் அளவுக்கு உயர்ந்து விடுகின்றான். இதில் ஏமாற்று இல்லை. வஞ்சம் இல்லை. **உண்மையாகவே ஊக்கத்தினால் அவனுக்கு ஒரு நல்ல திருப்பம் உண்டாகி இருக்கிறது** என்பது தான் பொருள்.

**நல்லதும் அல்லதும் :**

நல்ல திருப்பங்கள் போலவே சிலர் வாழ்வில் தீய திருப்பங்களும் ஏற்பட்டுவிடுவது உண்டு.

'இவனும் இந்நிலைக்கு வந்தானே' என்று வருந்திக் கூறுமாறு அவன் நிலைமை இறங்கிவிடும். நல்லதாயினும் சரி, அல்லதாயினும் சரி; எதிர்பாராத நிலையில் ஒரு தூண்டுதல் வேலை செய்திருக்கிறது. அதன் விளைவாகவே துலங்குதல் உண்டாகி இருக்கின்றது என்பது தெளிவு.

**தீயதைத் திருத்துதல் :**

தீய தூண்டுதலுக்கு ஆட்படாமல் தப்பிவிட வேண்டும். இல்லையேல் தீமை என்று நமக்குத் தெரியாமலே அதற்குள் வீழ்ந்து விடுவோம். தீமைக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அஃதாவது, தான் செய்வது தீயது என்று தன்னைக் கொண்டவர் உணராமலே - உணரவிடாமலே - அவரோடு ஒட்டிக் கொள்வது.. இத்தன்மையைத் தெளிவாக உணர்ந்துதான் திருவள்ளுவர், "கள்குடித்து ஆடும் ஒருவனை நெருங்கி 'நீ செய்வது தவறு' என்று எடுத்துக் காட்டித் திருத்த முயல்வது, ஆழமான நீருக்குள் மூழ்கிக் கிடப்பவனைக் கொள்ளித் தீயைக் கொண்டுபோய்த் தேடுவது போன்றது" என்கிறார். ஆகவே தீயதூண்டுதலுக்கு எவ்வகையாலும் ஆட்படுதல் கூடாது. அதுபோலவே, நல்ல தூண்டுதல் உண்டாகுமானால் நழுவவிடவும் கூடாது.

**சிலந்திப்பூச்சி :**

ஆறுமுறை படைகொண்டு சென்று தோல்வி கண்டவர் **இராபர்ட்டு புரூசு.** அவர் நாடு இழந்து, படை

இழந்து, சோர்ந்துபோய் மலைக்குகை ஒன்றில் ஒடுங்கிப் படுத்துக் கிடந்தார். அக்குகையின் ஒரு மூலையில் இருந்து அதன் எதிர் மூலைக்குத் தாவிப்பற்றி வலை பின்ன முயன்றது ஒரு சிலந்தி. ஆனால் ஒருமுறை இரு முறைகள் அல்ல; ஆறுமுறைகள் முயன்றும் சுவரை எட்டாமலே அது வீழ்ந்தது. எனினும் சோர்ந்து விடாமல் அது மேலும் முயன்றது. ஏழாம் முறையிலே தாவி வெற்றி கண்டது; வலையும் பின்னி முடித்தது. இதனை இமை கொட்டாமல் நோக்கிக் கொண்டே இருந்தார் புரூசு; சிலந்தியின் முயற்சி தமக்குப் பெரிய தூண்டுதலாக இருப்பதை உணர்ந்தார்; இரைதேடச் செல்லும் சிங்கம்போலத் தம் தோள்களை நிமிர்த்திக் கொண்டார்; படைகளை மீண்டும் திரட்டிக் களத்திற்குச் சென்றார்; வெற்றியோடு மீண்டார். எளிய சிலந்தி, உடைந்து போன உள்ளத்தை எவ்வளவு எளிதாகத் தேற்றிவிட்டது! தோல்வியை எவ்வளவு எளிதாக வெற்றியாக்கி விட்டது! **சிலந்தியின் தூண்டல் பெரிதா? அத்தூண்டலைப் பயன்படுத்திக் கொண்ட புரூசின் உள்ளம் பெரிதா? இரண்டும் ஒன்றில் ஒன்று பெரியது என்பதே தகும்.**

**காப்பிச்செடி :**

இடையன் ஆடுகளை மேய்ப்பதற்காகக் காட்டுக்கு ஓட்டிச் சென்றான். அவன் ஆடுகளுள் ஒன்று தனித்துச் சென்று ஒரு செடியைக் கடித்துத் தின்றது; பின்பு களிப்போடு துள்ளிக் குதித்தது.

அதனைக் கண்டான் இடையன். அவனுக்கு அதன் காரணம் விளங்கவில்லை. மறுநாளும் அவன் அவ்விடத்திற்கு ஆடுகளை ஓட்டிச் சென்றான். அதே ஆடு மறுநாளும் தனியேபோய் அச்செடியைக் கடித்துத் தின்றபின் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்து ஆடியது. ஆடு தின்ற அந்தச் செடிக்கு ஏதோ ஒரு தனியாற்றல் இருக்க வேண்டும் என அவன் எண்ணினான்: அச்செடியில் இருந்த பழத்தைப் பறித்துத் தன் வாயில் இட்டு மென்றான். அவனுக்கு ஒருவகைச் சுறுசுறுப்பு உண்டாகியது. அச்செய்தியை அவன் ஊரவர்க்கெல்லாம் பரப்பினான். அவன் கண்டுபிடித்துத் தந்த பழத்தின் விதையே நாம் இப்பொழுது சுவையாகப் பருகி வரும் 'காப்பி'யைத் தருகின்றது. அதனை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டான் ஆடு மேய்ப்பவன், 'அவன்', 'இவன்', என்பது இல்லை. எவனாக இருந்தாலும் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வானேயானால் அவன் முன்னுக்கு வரத் தவறான்.

**சின்கோனா :**

கொடிய காய்ச்சலால் அல்லல்பட்டுக் கிடந்தான் ஒருவன்; அவன் நடக்க வேண்டிய தொலைவோ மிகுதியாக இருந்தது; உடல்நிலை நடப்பதற்குச் சிறிதும் இடம் தரவில்லை. அவனுக்கு வாழ்வே வெறுத்து விட்டது. சாவு வராதா? என்றுகூட ஏங்கினான். உடல் வெப்பத்தால் நீர் வேட்கை மிகுந்தது. அளறும் சேறும் நிரம்பிய குட்டை

ஒன்று அவன் கண்ணில் புலப்பட்டது. அதன் நீரைக் குடித்துச் செத்தாலும் கவலை இல்லை என்று கருதிக் கையால் அள்ளி அள்ளிக் குடித்தான். அவனுக்கு அந்த நீரின் கசப்புத் தாங்கமுடியவில்லை: வயிற்றைக் குமட்டியது. ஆனாலும் குடித்தான். அவன் நினைத்தவாறு சாவு ஒன்றும் வந்துவிடவில்லை. காய்ச்சல்தான் செத்தது. அஃது அவனுக்கு வியப்பாக இருந்தது. அத்தண்ணீரில் கலந்திருந்த கசப்புத்தான் தன் காய்ச்சலைப் போக்கியது என உணர்ந்தான். குட்டைக்கு அருகில் நிற்கும் மரங்களின் இலை தழைகளும் கிளைகளும் குட்டையில் வீழுந்ததே கசப்புக்குக் காரணம் எனக் கண்டான். அவன் கண்டு பிடிப்பு வீண்போகவில்லை. குளிர் காய்ச்சலுக்கு மருந்தாகப் பயன்படும் **கொய்னா மாத்திரையை** நீங்கள் அறிவீர்கள்! மாத்திரையைச் செய்யப் பயன்பட்டது அந்த மரம்தான். அதன் பெயர் **சின்கோனா** என்பது.

தன் நோய் தணிந்தது என்னும் அளவில் அவன் கவலைப்படாது இருந்திருப்பானேயானால் அவன் கண்டு பிடிப்பு அவனோடு மடிந்து மண்ணாகியிருக்கும். ஆனால் அவன் பேருள்ளத்தால் அதைப் பலரும் அறியும்படி செய்தான். அது காலத்தையும், இடத்தையும் கடந்து பயன்படுகிறது. **தூண்டலால் துலங்குவோர் அதனை உலகுக்குப் பயன்படுத்துவோராகவும் இருத்தல் வேண்டும்** என்பதை அறிவீர்களாக!

## ஆப்பிள் பழம் :

மரத்தில் இருந்து ஆப்பிள் பழம் விழுவதைக் காணுகின்றான் ஒரு சிறுவன். "ஏன் இப்பழம் கீழே

விழவேண்டும்? பக்கங்களில் போனால் என்ன? மேலே ஏறினால் என்ன?" என்றெல்லாம் சிந்திக்கிறான். அச்சிந்தனை அவனை நெடுநாள் ஆராயத் தூண்டுகிறது. **"நிலத்திற்கு இழுப்பாற்றல் இருக்கிறது. அவ்வாற்றலே பொருள்களை மேலேயோ, பக்கங்களிலேயோ போகவிடாமல் தடுக்கிறது"** எனக் கண்டு பிடித்தான். அவனே பெரும் விஞ்ஞானியாகத் திகழ்ந்த ஐசக் நியூட்டன்.

நாமும் எத்தனையோ பொருள்கள் கீழே விழக் காணுகின்றோம். ஏன் அது நமக்குத் தூண்டலாக அமையவில்லை? தூண்டுதலை ஏற்பதற்கும் தகுதியான பக்குவம் உள்ளத்தில் இருக்கவேண்டும். மின்சாரப் பொத்தானை அழுத்தினால் விளக்கு எரிகிறது. வேறு இடங்களில் அழுத்தினால் எரிகிறதா? இல்லை. ஆகவே தூண்டல் துலங்க வேண்டுமானால் நல்ல உள்ளத் தொடர்பு உண்டாக வேண்டும். உண்டானதை ஒளிவிடச் செய்யத்தக்க அயரா உழைப்பும் வேண்டும்.

**கோழி முட்டை :**

பள்ளிக்குப் போயிருந்த மாணவனிடம் கோழி முட்டை இடுவது, அடைகாப்பது, குஞ்சு பொறிப்பது ஆகியன பற்றிக் கூறினார் ஆசிரியர். சொல்லித் தந்த ஆசிரியர்க்கு உண்டாகாத உணர்ச்சி பாடம் கேட்ட மாணவனுக்கு உண்டாகியது. வீட்டுக்கு வந்ததும் கோழி முட்டை ஒன்றை எடுத்துக்கொண்டு ஓர் இருட்டறைக்குள் புகுந்தான். தன் வயிற்றோடு ஒட்டி

முட்டையை வைத்துக் கால்களாலும் கைகளாலும் அணைத்துக் கொண்டு முடங்கிப் படுத்தான். எங்கெங்கோ தேடியலைந்த பெற்றோர்கள் அவனை அந்த அறையில் கண்டுபிடித்தனர். அவனை எழுப்பியபோது முட்டையுடன் இருந்தான். அவன் நிலைமை அவர்களுக்கு வியப்பாக இருந்தது. **"கோழி அடைகாத்துக் குஞ்சு பொறிக்கும் பொழுது அந்த வெப்பத்தை நான் தந்தாலும் குஞ்சு பொறிக்கத்தானே வேண்டும்"** என்ற அவன் சொல், அவர்களை விலாப்புடைக்க நகைக்க வைத்தது. ஆனால் அறிவியல் உலகம் அவ்விளைஞன் கருத்தை வாளா விட்டுவைக்கவில்லை. ஆராய்ந்து மின் வெப்பத்தால் முட்டையைப் பொறிக்க வைக்கும் பொறியைக் கண்டு பிடித்து விட்டது. இக்கண்டு பிடிப்பை அந்த இளைஞனுக்குப் படைத்த காணிக்கை என்று சொல்லலாம். ஆனால் ஓர் அன்பர் இருபத்தொரு நாள்கள் கோழி முட்டையைத் தன் மார்பிலே வைத்துக் கொண்டிருந்து குஞ்சைப் பொறிக்கச் செய்தார். அந்த இளைஞனுக்கு ஏற்ற காணிக்கை அன்றோ அது! குஞ்சு பொறிக்க முயன்ற அந்த இளைஞன் யாவன்? அவனே விஞ்ஞானி **எடிசன்!**

**யாக்கை :**

பூங்காவின் இடையே ஒரு தந்தையும் அவர்தம் இனிய மகளும் மாலைப்பொழுதில் உலாவினர். மகள் தம் இனிய குயிற் குரலால் **"பெற்ற தாய்தனை"** எனத் தொடங்கும் **இராமலிங்கர்** திருவருட்பாப்

பாடலைப் பாடினார். இனிக்கக் கேட்டுக் கொண்டு வந்த தந்தையார், "நீலா, உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்" என்னும் பகுதியில் உள்ள **'தேகம்'** என்னும் வடசொல்லுக்குப் பதில் **'யாக்கை'** என்னும் தமிழ்ச் சொல்லை அமைத்திருந்தால் எவ்வளவோ இனிமையாக இருக்கும் என்றார். உடனே மகள் நீலா, **"அப்பா, தனித்தமிழே இனிமை மிக்கது என்றால், இன்று தொட்டு நாம் தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும்"** என்றார். அவ்வேண்டுதல் வறிதே போயதா? **சுவாமி வேதாசலத்தை மறைமலையடிகள் ஆக்கியது; சமரச சன்மார்க்க நிலையத்தைப் பொதுநிலைக் கழகம் ஆக்கியது; ஞானசாகரம் என்னும் இதழை அறிவுக்கடல் ஆக்கியது; நீலாவென்னும் நீலாம்பிகையாரைத் தனித்தமிழ்ச் செல்வியாகவும், மறைமலையடிகளாரைத் தனித் தமிழ்த் தந்தையாகவும் தமிழுலகத்திற்குத் தந்தது!**

**மட்டை :**

பாலாற்றங் கரையிலே ஒரு பெரியவர் நடந்து சென்றார். ஆங்கே இருந்த ஒரு தென்னந் தோப்பில் வேலை செய்துகொண்டு இருந்த ஒருவன் தன்பேச்சின் இடையே **மட்டை** என்னும் ஒரு சொல்லைச் சொன்னான். அச்சொல் கரைவழியே சென்ற பெரியவர் கருத்தைக் கவர்ந்தது. மேலும் மேலும் அவரை எண்ணிப் பார்க்க வைத்தது. அதன் விளைவு என்ன? தமிழ் மொழிக்கு அருமையான ஒரு **'மொழி நூல்'** கிடைத்தது. மொழி நூல் படைத்த பெருமகனார் **மாகறல் கார்த்திகேய முதலியார்** என்பவர் ஆவர்.

**கோழிக்குட்டி :**

*இத்தாலி நாட்டுக் கிறித்தவத் தொண்டர்* **வீரமா முனிவர்** *ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது* **'கோழிக்குட்டி'** *என்றார். கூட்டத்தில் இருந்தவர்கள் கைகொட்டி நகைத்தனர். கூட்டம் முடிந்த பின்னர் நகைப்பின் காரணத்தை அவர் கேட்டு அறிந்தார். இன்னதை இன்னவாறுதான் சொல்ல வேண்டும் என்னும்* **மரபு நிலை** *அறியாமையால் வந்த பிழை எனத் தெளிந்தார். முறையாக இலக்கண இலக்கியங்களைக் கற்றார்.* **தேம்பாவணி** *முதலான இலக்கியச் செல்வங்களை அவர் வழங்கினார்.* **சதுரகராதி** *என்னும் பெயருடைய அகராதி நூல் இயற்றினார்;* **உரைநடைக்கு** *வித்திட்டார். கோழிக்குட்டி செய்த பயன் சிறிது அளவா? கோழிக்குட்டி வாழ்க!*

**திருக்குறள் :**

*தில்லிமாநகர்க்குச் சென்றிருந்தார் மன்னர்* **சரபோசி.** *அங்கே அவர் அரசுப் பொறுப்பாளரைக் கண்டு உரையாடினார். சரபோசி தமிழ்நாட்டுத் தஞ்சைப் பகுதியை ஆள்பவராக இருந்ததால்* **திருக்குறளை** *அறிந்திருப்பார் எனக் கருதிய அவர் திருக்குறளில் ஏதேனும் ஒரு பகுதியைச் சொல்லுமாறு வேண்டினார். சரபோசி தஞ்சை மன்னராக இருந்தாலும் அதுவரை திருக்குறளைக் கல்லாதவராக வும், காணாதவராகவும் இருந்தார்.*

ஆகவே அதைக் கேள்விப் பட்டிருப்பதாகச் சொல்லி, ஊருக்குப் போய் நூலை அனுப்பி வைப்பதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டு மீண்டார். வந்தவுடனே பேரார்வத்தோடு நூற்சுவடிகளைத் தேடித் தொகுத்தார். அவரால் தோற்றுவிக்கப் பட்டதே இன்று பல்லாயிரம் ஏட்டுச் சுவடிகளையும் நூல்களையும் கொண்டு விளங்கும் '**சரசுவதி மகால்**' என்னும் கலைக்கூடம் ஆகும்.

**என்ன பயன்?**

கும்பகோணத்தில் **இராமசாமி முதலியார்** என்பவர் முன்சீபாக இருந்தார். அவரை ஒரு சமயம் தமிழறிஞர் உ.வே. **சாமிநாதையர்** போய்ப் பார்த்தார். "என்னென்ன நூல்களைப் படித்திருக்கிறீர்கள்," என்று முதலியார் ஐயரை நோக்கி வினவினார். ஐயர் தாம் கற்ற நூல்களை நூற்றுக்கணக்கில் கூறினார். முதலியார், "இவற்றைக் கற்றதால் என்ன பயன்? பழைய நூல்களைப் படித்திருக்கின்றீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா? மணிமேகலை படித்திருக் கிறீர்களா? சிந்தாமணி படித்திருக்கிறீர்களா?" என்று தொடர்ந்து வினவினார். அவர் வினாவிய வினாக்களே **தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கும் சென்று சாமிநாதையரை ஏடு தேட வைத்தது; ஏடுகளைத் தொகுத்துப் போற்றத்தக்க நூல்கள் ஆக்கித் தமிழ் வளர்க்கவும் தூண்டியது.** சங்க இலக்கியங்களைக் காணும் போதெல்லாம் அவற்றை அச்சிட்டு வழங்கிய சாமிநாதையரை மறக்க

முடியாது! அவரைத் தூண்டியுதவிய இராமசாமி முதலியாரையும் மறக்க முடியாது.

**தமிழ் மதுரை :**

**பாலவநத்தம்** குறுநில மன்னர் **பாண்டித்துரைத் தேவர்** மதுரையில் ஒரு சொற்பொழிவாற்றுவதற்காக வந்திருந்தார். அப்பொழுது சில குறிப்புகளைக் காண்பதற்காகத் திருக்குறளும் கம்பராமாயணமும் எவரிடத்தில் இருந்தாவது வாங்கி வருமாறு அன்பர் ஒருவரை ஏவினார். அவரோ நூல் எங்கும் கிடைக்காமல் வெறுங் கையோடு மீண்டார். "**தமிழ்ச் சங்கம் இருந்த மதுரையில் தமிழுக்குச் சிறப்பளிக்கும் திருக்குறளும் கம்பராமாயணமும் கிட்டவில்லையே!** இந்த நிலைமையை ஒழிக்க வேண்டும்" எனக் கருதினார். கருதியதை நிறைவேற்றுதற்கு ஏற்றவாறு திட்டமிட்டுச் செயலாற்றினார். அவரால் உருவாக்கப்பட்டதே மதுரையில் இந்நாள் விளங்கும் **நான்காம் தமிழ்ச்சங்கம்** ஆகும்.

**கலிங்கப்போர் :**

ஆக்கப் பணிகளை உருவாக்கிய தூண்டுதல் களைப் போலவே அழிவுக் கொடுமையை அகற்றிய தூண்டுதல்களும் உண்டு.

கலிங்கப் போரில் கணக்கற்ற உயிர்களைக் கொன்று குவித்த **அசோக மன்னன்** மனம், ஒரு நொடிப்

*பொழுதில் எவ்வளவோ மாற்றம் கண்டு விட்டது.* **'கொலைக் கருவிகளைத் தீண்டேன்'** *என்று உறுதி கொள்ள வைத்த இடம் கலிங்கப் போர்க்களம் தானே? வேட்டை யாடுவதைக் குற்றமாக்கிய கோமன்னன் அவனே! அவன் அருளாட்சிக்கு அடையாளமாக இருந்த* **சக்கரமே** *இந்தியக் குடியரசின் அடையாளமாக இப்பொழுது இருக்கின்றது. இஃது ஒன்றே அம்மன்னன் அருளாட்சியின் வெற்றிக்கு அடையாளம்!* **'சுடுகாட்டில் கொள்ளும் உறுதி உருப்பெறாது'** *என்று பலரும் கூறுவர். ஆனால் அத்தகைய நிலையற்ற உள்ளம் கொண்டவனல்லன் அசோகன்; கொண்ட உறுதியை நிலைநாட்டிய மாமன்னன். நிலைபெறாச் சுடுகாட்டு உறுதி கொண்டோரைக் கண்டு அவன் புன்முறுவல் கொண்டான்.*

**தூண்டலால் துலங்குக :**

**அன்புள்ள மாணவர்களே, எதிர்பாராத் தூண்டல்கள் எவருக்கும் வாய்க்கும். அவ்வாறு உங்களுக்கு வாய்க்கும்போது இடைவிடா முயற்சியாலும், இணையற்ற ஊக்கத்தாலும் கடமை புரிந்து வெற்றி வீரராகத் திகழ்வீர்களாக! மேலே எடுத்துக் காட்டப்பெற்ற பெருமக்களைப்போல உங்களுக்கும் எதிர்கால வரலாற்றுப் பெருநூலில் தனிப் பேரிடம் இருக்குமாறு வாழ்வீர்களாக!**

☆ ☆ ☆

# 6. முயற்சியும் முன்னேற்றமும்

முன்னேற்றம் என்னும் எழில்மிக்க மாடத்தில் இருந்து நீங்கள் இன்பவாழ்வு வாழவேண்டுமானால் முயற்சி என்னும் கட்டடத்தைக் கட்டியே தீரவேண்டும். முன்னேற்றம் என்னும் தண்ணிய அருவியில் உடலும் உள்ளமும் சிலிர்க்க நீங்கள் நீராட வேண்டுமானால் முயற்சி என்னும் மலையில் அயராமல் ஏறிச் சென்றே தீரவேண்டும். ஆகவே, முன்னேறத் துடிக்கும் நீங்கள் முயற்சிப் படிகளில் தளராமல் ஏறிச் செல்வீர்களாக!

## முயற்சியே உயர்ச்சி தரும் :

*மூச்சை அடக்கி நீரின் நெடிய ஆழத்துள் போக முடியாதவன் விலைமதிக்க முடியாத முத்துகளைப் பெற முடியாது: அரும்பாடுபட்டுச் சுரங்கத்தைத் தோண்டிக் கொண்டு ஆயிரக்கணக்கான அடிகளுக்குக் கீழே போனால் அல்லாமல் தங்கக் கட்டிகளையும் வைரத்துண்டங்களையும்*

பெயர்த்தெடுக்க முடியாது. ஆகவே, **'முயற்சியே மூச்சு'** எனக் கொண்டு உயர்ந்து ஓங்குவீர்களாக.

**ஏறுநடை ஏந்தல் :**

எரியும் விளக்குத் திரியினைத் தலைகீழாகத் திருப்பிப் பிடித்தாலும், மேலே தாவிக் கொழுந்துவிட்டு எரிதலே **தீயின் இயற்கை.** அவ்வியற்கை போல் எத்துணைத் தடைகளும் குறுக்கீடுகளும் அல்லல்களும் உண்டானாலும் அயராது முயற்சியில் ஈடுபடுபவனே எண்ணியதை முடித்து ஏறுநடை நடக்கும் ஏந்தல் ஆவான்.

**கருமமே கண்ணாயினார் :**

கருமமே கண்ணாகக் கொண்டவர் மெய் வருத்தம் பாரார்: பசி நோக்கார்: கண் துஞ்சார்: எவ்வெவர் செய்யும் தீமையையும் பொருட்டாக எண்ணார்: காலநேரம் கருதார்: பிறர் பழிப்பதையோ புகழ்வதையோ செவியில் கொள்ளார்! இத்தகைய கருமக் கண்ணர் கருதியனவெல்லாம் கைகூடும். அவை தவறமாட்டா.

**சோம்பர் உடையவர் தேம்பித் திரிவர் :**

உப்புமலையில் ஏறியிருந்து உணவு உண்டாலும், அதில் உப்பை அள்ளிப் போட்டுக்கொண்டு உண்டால் தானே சுவைக்கும். அதுபோல் ஆக்கி வைத்ததை உண்பதற்கும், தேடி வைத்ததைக் காப்பதற்கும் முயற்சி வேண்டும். முயற்சி இல்லாத சோம்பன் வாழ்வு குடியைக்

கெடுத்து விடும். **'சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்'** என்பது ஔவையார் வாக்கு.

**வாயும் வயிறும் :**

"உழைக்காமல் உண்பதற்கென ஒரு கூட்டத்தையும் உழைத்துவிட்டு உண்ணாமல் இருப்பதற்கென ஒரு கூட்டத்தையும் இறைவன் படைக்கவில்லை. அதுவே அவன் கருத்தானால் **உழைக்காமல் உண்பவருக்குக் கால் கைகளைப் படைக்காமல் வாயையும் வயிற்றையுமே படைத்திருப்பான். உழைத்துவிட்டு உண்ணாமல் இருக்க வேண்டியவருக்கு வாய் வயிறுகளைப் படைக்காமல் கால் கைகளைமட்டுமே படைத்திருப்பான்**" என்று ஆபிரகாம் லிங்கன் கூறுகிறார். உழையாச் சோம்பர் உள்ளத்தில் பாய்ச்சும் கூரம்பு போன்றது இது! உண்மை உழைப்பாளர்க்கு வழங்கும் பாராட்டுப் பட்டயமும் ஆகும் இது! நீங்கள் இதனை எண்ணிப் பார்த்துத் தளரா முயற்சியில் ஈடுபட வேண்டும்.

**வாழ்வு வகை :**

மாந்தர் வாழும் வாழ்க்கை நெறியை நன்கறிந்த பெருமக்கள் அதனை ஐவகைப் பாகுபாட்டில் அடக்குவர். அவை **கொலை வாழ்வு, கொள்ளை வாழ்வு, முயற்சி வாழ்வு, குழு வாழ்வு, தாய்மை வாழ்வு எனபன.**

**கொலை வாழ்வு :**

புலி, கரடி முதலாய காட்டு விலங்குகளிடம் கனிவு இல்லை: அருள் இல்லை. அவை அஞ்சி அஞ்சி

ஓடி ஒளியும் விலங்குகளைத் தப்பிவிடாமல் தாக்கியழித்துத் தம் வயிற்றை நிரப்பும். தம் வயிற்றை நிரப்பும் செயல் ஒன்றே அவற்றின் குறிக்கோள். இத்தகு குறிக்கோளே தம் குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர் கொலை வாழ்வினர் ஆவர்.

**கொள்ளை வாழ்வு :**

கொள்ளை வாழ்வுக்குச் சான்றாகக் குரங்கைக் கொள்ளலாம். தான் உழாமல், விதைக்காமல், களை பறிக்காமல் காவல் புரியாமல் எவரோ பாடுபட்ட பயிர் வகைகளையும் பழத் தோட்டங்களையும் அழித்துக் கெடுப்பது குரங்கின் இயல்பு. அக்குரங்கைப் போல் தாம் உழைக்காமல் பிறர் உழைப்பின் பயனைக் கொள்ளையடிப்பவர்களும் அட்டைபோல் உறிஞ்சிச் சேர்த்து வாழ்பவர்களும் உளர். அவர்கள் கொள்ளை வாழ்வினர் எனப்படுவர்.

**முயற்சி வாழ்வு :**

மூன்றாவதாக வருவது முயற்சி வாழ்வு. இவ்வாழ்வு ஏற்றமிக்க ஒன்றாகும். அன்றியும் மேலே வர் இருக்கும் குழு வாழ்வுக்கும், தாய்மை வாழ்வுக்கும் நிலைக் களமாக இருப்பதும் இதுவே ஆகும்.

முயற்சி வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக இருப்பது தூக்கணாங்குருவி ஆகும். அது தானே

அரிதில் முயன்று குச்சி, சருகு, புல், வைக்கோல்களைத் தொகுத்துக் கூடு கட்டி வாழும் வாழ்வுடையது. அதுபோல், கொலை, கொள்ளை, சுரண்டல் ஆகிய தீய வாழ்வு முறைகளை நீக்கித் தம் முயற்சியால் வாழ்பவர், 'முயற்சி வாழ்வினர்' ஆவர்.

**குழு வாழ்வு :**

குழு வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு 'தேனீ' ஆகும். ஆண் ஈ, பெண் ஈ, உழைப்பாளி ஈ என முப்பிரிவுகளாக அமைந்திருந்தும் அவை, ஒன்றுபட்டுப் பொதுப்பணி புரிகின்றன. அவை தம் பணிகளைத் தவறாமல் புரிந்து, ஒன்றுபட்டு வாழ்தலால் தேனீயின் வாழ்வு குழு வாழ்வாகின்றது. அது குடியரசும் முடியரசும் இணைந்து செயல்படும் குடிக்கோன் ஆட்சிக்கு ஒப்பானது.

**தாய்மை வாழ்வு :**

இறுதியாக அமைந்த தாய்மை வாழ்வு இணையற்றதாகும். தாய்மை வாழ்விற்குப் புறாக்களை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். குஞ்சுகள் கூட்டில் இருக்கும் போது தாய்ப் பறவை வெளியே சென்று உணவைத் தேடிக் கொண்டுவந்து அக் குஞ்சுகளுக்கு ஊட்டி வளர்க்கிறது. அதுபோல் வறியவர்க்கும் வாய்ப்பற்றவர்க்கும் பகுத்துண்டு வாழும் மக்கள் வாழ்வு தாய்மை வாழ்வாகும். இவ்வைந்து வகை வாழ்வுகளுள் **முயற்சி வாழ்வில் நீங்கள்**

முதற்கண் உங்களை ஈடுபடுத்திக் கொள்வீர்களாக. அவ்வீடுபாடு வரவரக் குழு வாழ்வில் புகுத்தித் தாய்மை வாழ்வில் நிலைபெறச் செய்யத் தவறாது. இதனால்தான் ' முயற்சி திருவினையாக்கும்' என்று முப்பால் மொழிகின்றது.

**மடி என்னும் மாசு :**

*அகல் விளக்கில் திரியிட்டு விளக்கேற்றுகிறோம். அத்திரியில் அடிக்கடி 'கருக்கு' உண்டாகி விடுகின்றது. அதனைக் கண்காணிப்புடன் தட்டிவிட்டுத் தூண்டினால் அன்றித் திரி சுடருடன் எரியாது; கருக்கைத் தட்டாமல் நெடும் பொழுது விட்டு விட்டால் சுடர் அணைந்து போகும்.* "குடும்பம் என்பது ஓர் அகல்விளக்குப் போன்றது. அக் குடும்பத்தில் இருப்பவர் திரி போன்றவர். திரியில் பற்றும் கருக்குப் போன்றது சோம்பல். அச்சோம்பல் பற்றினால் குடும்பம் என்னும் குன்றா விளக்கு எரியாது! அணைந்துபோகும்," *என்று உவமைப் படம் பிடித்துக் காட்டுகிறார்* வள்ளுவப் பெருந்தகை.

**கெடுவார் அணிகள் :**

*"நான் கெட்டே போக வேண்டும்" என்று முடிவுகட்டிக் கொண்டவன் அணிய வேண்டிய அணிகள் "இவை" என்று நான்கு அணிகளைக் குறிப்பிடுகிறார், வாழும் வகை உரைக்க வந்த வள்ளுவனார்: அவ்வணிகள் எவை?* நெடுநீர், மறவி, மடி, துயில் *என்பன அவை. நெடுநீர் என்பது உரிய*

காலத்தில் செய்யாமல் காலம் கழித்துச் செய்தல். மறவி என்பது மறதி. மடி-சோம்பல். துயில்-செய்ய வேண்டிய செயல்களை மறந்து தூங்குதல். நீங்கள் இந்த நான்கு அணிகளை அணியவும் வேண்டா: அவற்றை ஏறிட்டுப் பார்க்கவும் வேண்டா.

**உரித்த வாழைப்பழம் :**

சோம்பல் ஒருவனை ஆட்படுத்தி விடுமானால் அதில் இருந்து அவன் மீள்வது அரிது. இரண்டு சோம்பேறிகள் ஓர் அம்பலத்தில் (மடத்தில்) படுத்திருந்தனர்; கூரை வேய்ந்த அம்பலம் அது. அதில் ஒருபக்கம் தீப்பற்றிக் கொண்டது. ஒரு சோம்பேறி தீப்பற்றுவதைத் தன் கண்களால் கண்டான். எனினும் விரைந்து எழுந்திருக்காமல் படுத்துக் கொண்டே "அம்பலம் வேகிறது அப்பனே" என்றான். அடுத்துக் கிடந்த சோம்பன், "அதையும் தான் சொல்வானேன்; வாயும் தான் நோவானேன்" என்று புரண்டு படுத்துக் கொண்டான். முடிவு என்ன ஆகியிருக்கும்? பிடி சாம்பல் தான். இம்மடத்துச் சோம்பேறி போன்ற ஒருவன் தான், 'வாழைப்பழம் இனாமாக அள்ளிக் கொடுக்கிறார்கள். (சூறை இடுகிறார்கள்)' என்று ஒருவன் சொன்னபோது, "உரித்துப் போடுகிறார்களா? உரிக்காமல் போடுகிறார்களா?" என்று வினாவினானாம்! வாழைப் பழத்தை உரிக்கக்கூட அவனுக்கு விருப்பம் இல்லை. அவ்வளவு சோம்பல்! முயற்சியாளன் இத்தகையவன் முகத்திலேயும் விழித்தல் கூடாது.

**எலியும் புலியும் :**

**சோழன் நல்லுருத்திரன்** என்பவன் ஒரு மன்னன். அவன், முயற்சியைப் பற்றிப் பாடலொன்று பாடியுள்ளான். எலியும் புலியும் அவன் கருத்தில் தோன்றுகின்றன. அவற்றைக் கொண்டு முயற்சியை வலியுறுத்தியுள்ளான். "சிறிய வயலில் விளைந்த நெல்லே ஆயினும் ஒளிந்து மறைந்து வந்து எவரும் அறியாமல் கதிரைக் கொண்டுபோய்த் தன் வளையில் நிரப்பி வைத்துக் கொள்ளும் **கரவு வாழ்க்கை உடையது எலி.** தான் பசிகொண்ட காலத்தில் அதனைத் தீர்த்துக் கொள்வதற்காக வேட்டையாட வல்லது புலி. அதற்கு எவ்வளவு பசியுண்டானாலும் புல்லைத் தின்னாது. அது மட்டும் அல்லாமல் பன்றி, மான் முதலியவற்றைப் பசித்துயருக்காக அடித்து வீழ்த்தியபோதும் அதன் வலப்பக்கமாக வீழாமல் இடப்பக்கமாக வீழுமானால் அன்று முழுமையும் மானங் கருதி இரை உண்ணாப் பெருமிதமும் கொண்டது புலி. மறுநாள் காலையில் முழக்கத்துடன் புறப்பட்டு ஏதேனும் ஒரு விலங்கை வலம்பட வீழ்த்தித் தின்னும் வல்லாண்மையும் உடையது. இப்புலியைப் போன்ற நன்முயற்சியாளர் கூட்டுறவே எனக்கு அமைவதாக. எலி போலும் புன் முயற்சியாளர் கூட்டுறவு எனக்கு என்றும் இல்லாது ஒழிவதாக!" என்று உருத்திரன் தான் பாடியபாடலில் குறிப்பிடுகின்றான்.

தனக்கு நட்பாளராக நன்முயற்சியாளரே இருத்தல் வேண்டும் என்பதில் நல்லுருத்திரன் மிக

உறுதி கொண்டிருந்தான். **"உன் நண்பன் எவனென்று சொல்; உன்னைப்பற்றிச் சொல்லி விடுகிறேன்"** என்பது மேலைநாட்டுப் பழமொழி. **"இனம் இனத்தைச் சேரும்"** என்பது நம் நாட்டுப் பழமொழி. நீங்கள் முன்னேறும் முயற்சியாளராக இருந்தால் அத்தகையவர் தொடர்பையும் துணையையும் கொள்ள வேண்டுவது கடமை.

**எண்ணித் துணிக :**

"முடியாது என்பது என் அகராதியில் இல்லை" என்கிறான் **நெப்போலியன்.** ஆம்! அவன், இறுமாப்பால் அவ்வாறு சொல்லவில்லை. அவன் தன் முயற்சியை அவ்வளவு நம்பினான். ஓர் அறைக்குள் கிடந்து ஓவியம் வரைபவனாக இருக்கும் போதே, "ஐரோப்பாவின் படத்தை மாற்றி அமைப்பேன்" என்று **இட்லர்** கூறவில்லையா! கூறியவாறு மாற்றியமைத்து விட்டானே: எப்படி? திட்டமிட்ட முயற்சியால்தான். அவன் முயற்சி அழிவு வழியில் சென்றதால்தான் அடிபட்டு வீழ்ந்தது. இல்லையேல் பிறருக்கு எடுத்துக் காட்டான முயற்சியாக விளங்கி இருக்க முடியும். ஆகவே, முயற்சியில் தலைப்படும் நீங்கள், **"அழிவு முயற்சியா? ஆக்க முயற்சியா?"** என்று எண்ணிப் பார்த்தே உங்கள் காலடிகளை எடுத்து வைத்தல் வேண்டும்.

**நாற்பது கோடி :**

"எனக்கு நாற்பது வயது ஆக வேண்டும்: அதற்குள் நாற்பது கோடி தாலர் தேடி முடிக்கவும் வேண்டும்" என்று ஏழே வயதான ஏழைச் சிறுவன்

'ஆண்ரூ' முடிவு செய்து கொள்கிறான். அவன் திட்டப்படி நாற்பதாம் வயதில் சொத்தைக் கணக்கிட்டுப் பார்த்தான். ஐம்பத்தாறு கோடி தாலர் இருந்தது. எப்படி 'ஆண்ரூ' வினால் திட்டமிட்டவாறு தேட முடிந்தது? திட்டமிட்டுக் கையைக் கட்டிக் கொண்டு அவன் இருந்து விடவில்லை: தன் ஏழ்மையைக் கண்டு கலங்கி விடவில்லை: சுற்றுச் சார்பில் வந்து குவிந்த தொல்லைகளைக் கண்டு துவண்டு விடவில்லை! துணிந்து நடந்தான் திட்டமிட்டவழியில்! 'தந்தி' அலுவலகத்தில் ஏவல் இளைஞனாக இருந்து மேலாளர் அளவுக்கும் தன் முயற்சியாலேயே வளர்ந்து தந்தித் துறையிலே புதிய கண்டுபிடிப்பும் அவனால் செய்ய முடிந்தது. அதனால் கோடிக் கணக்கில் தாலர்களைக் குவித்தான். கொண்ட கொள்கையை முடித்தான்.

**எழுத்தரும் எழுத்தாளரும் :**

ஓர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தவர் தாம் **பெர்னாட்சா!** அவ்வலுவலகத்தில் இருக்கும்போது "என் முன்னேற்றத்திற்கு இப்பணி பொருந்துமா?" என்று எண்ணினார்: இப்பணியால் ஏற்றம் எய்த முடியாது எனக் கண்டார்: வெளியேறினார். நினைப்பெல்லாம் நாடகத்தில் சென்றது. நாடகம், நாடகத் திறனாய்வு என்று எழுதி எழுதிக் குவித்தார். எத்துணையோ எதிர்ப்புகள் முன்னின்றன! **"எனக்கென எழுத்துலகில் ஓர் இடம் கிட்டுவது**

**உறுதி! அதில் ஐயம் எனக்கு இல்லாதபோது சோர்வடை வானேன்!"** என்று எண்ணிப் பணியாற்றினார். எதிர்ப்பு, இணைப்பாக மாறியது: தூற்றுதல் போற்றுதலாக் மாறியது: புகழ் ஏணியின் உச்சிக்கு ஏறினார்! பொருளும் தானே வந்து குவிந்தது!

**நாடக மன்னர் :**

நாடகச் சாலையின் முன் நிறுத்தும் குதிரைகளைப் பார்த்துக்கொள்ளும் தொழில் செய்தவர்தாம் **சேக்சுபியர்.** குதிரையைக் கட்டிப் போட்டுக் காத்துக் காசு வாங்குவதுடன் கடமை முடிந்ததாக அவர் கருதி யிருந்தால் அவர்க்கு உலகம் இவ்வளவு தலைவணக்கம் புரியுமா?

வாய்ப்புக் கிட்டிய பொழுதெல்லாம் நாடகக் காட்சிகளைக் கண்ட சேக்சுபியர், ஒவ்வொருவர் நடிப்பைப் போலவும் நடித்துப் பழகினார். ஒவ்வொருவர் உரையாடலையும் மனப்பாடம் செய்தார். எதிர்பாராத நிலையில் நடிக்க வராத ஒரு நடிகருக்காக நாடக மேடையில் புகுந்தார்! தொடர்ந்து நடித்தார். தாமே கதை எழுதினார்: உரையாடல் எழுதினார்: நடித்தார்: ஏன்? நாடக இயக்குநராகவும், அரங்க உரிமையாளராகவும் வளர்ந்தார்.

**முயற்சியின் வெற்றி :**

முயற்சியாளன் கையில் பட்ட இரும்பும் பொன்னாகும்: மண்ணும் பொன்னாகும்: கல்லும்

கலை பேசும்: மூங்கில் குழலும் கோடிக்கணக்கான செல்வத்தைக் குவிக்கும். ஆகவே **"பிறப்பிலே ஒருவன் கொண்டு வருவது நூற்றுக்குப் பத்துப் பங்கு என்றால் தன் முயற்சியால் அமைத்துக் கொள்ளுவது தொண்ணூறு பங்கு"**, என்கிறார் ஒருவர். 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்றும், 'நூற்றுக்கு நாற்பது வெற்றி' என்றும் கருதும் உலகிடையில் நூற்றுக்குத் தொண்ணூறான முயற்சியே வெற்றியின் நிலைக்களம் என்பதில் ஐயம் உண்டா?

**பாட்டியும் பேரனும் :**

'எனக்குக் கணக்குப் பாடம் வரவில்லை' என ஏங்குகிறான் சிறுவன்: 'எனக்கு வரவும் வராது' என்றும் சோர்வடைகிறான். அவன் பாட்டிக்குப் பேரனின் பேச்சும் செயலும் பிடிக்கவில்லை. அவனிடம், "இந்தத் தடித்த இரும்புக் கம்பியைத் தேய்த்துக் குடைக்கம்பி ஆக்கப் போகிறேன்," என்றாள். "ஒரு சின்னஞ்சிறு குடைக் கம்பிக்காக இப் பெரிய இரும்புக் கம்பியைத் தேய்க்க வேண்டுமா? தேய்க்க முடியுமா?" என்று பலப்பல நினைத்தான் பேரன். பாட்டி தன் பணியைத் தொடர்ந்தாள். நாள்கள் சில சென்றன: இரும்புக் கம்பி குடைக்கம்பியாக மாறிற்று! பேரன் வியந்தான். "பையா! பெரிய இரும்புக் கம்பியையே குடைக்கம்பியாக மாறும் அளவு தேய்த்து விட முடியுமானால், எனக்கு வாராது என்று நீ கூறும் அந்தக் கணக்குப் பாடத்தைத் தானா

வரச்செய்துவிட முடியாது?" என்று நன்றாக உள்ளத்தில் தைக்குமாறு கேட்டாள். பாட்டியின் கேள்வி பேரனுக்கு நல்லதொரு திருப்பத்தை உண்டாக்கியது! இத்திருப்பம் "எனக்கு இந்தப் பாடம்வராது" என்பவர் அனைவருக்கும் உண்டாக வேண்டும். அப்பொழுது தான் இச்செய்தியைக் கேட்டதற்குப் பயன் உண்டு.

**நெல்லும் புல்லும் :**

**புல் எளிதாக முளைத்துவிடும்; நாம் நீர் பாய்ச்சாவிடினும், உரம் போடாவிடினும் வளர்ந்து விடும். ஆனால் நெல்லை நாம் முயன்று கண்காணிப்போடு வளர்த்தால்தான் வளர்ந்து பயன் தரும்.** நல்லவற்றுக்கும் அல்லவற்றுக்கும் உள்ள வளர்ச்சி வேற்றுமை இதுதான். தேவையற்றது, நம் முயற்சியில்லாமல் தானே செழித்து வளரும். நல்லது, நாம் முயன்று முயன்று வளர்த்தால் தான் வளரும். அம்முயற்சியில் இடையீடுபட்டாலும் தளர்த்தாலும் கெட்டுப்போகும். **"நூறு நாள் ஓதி, ஆறு நாள் விட்டால் போதும்! கற்றவை எல்லாம் மறந்து போகும்."**

**நூலகத் திறவுகோல் :**

**பெட்ரார்க்** என்பவர் ஒரு கவிஞர்: இத்தாலியைச் சேர்ந்தவர். அவருக்குப் படிப்பில் இருந்த ஆர்வத்தையும் முயற்சியையும் அளவிட்டுரைக்க இயலாது. அவர் தமக்கெனத் தனி நூலகமே நிறுவியிருந்தார். அவர்க்குக் கிடைத்திருந்த நண்பர்

ஒருவர் 'நூலகத் திறவுகோலைத் தரமுடியாது' என எடுத்துக் கொண்டு போய்விட்டார் பாவம்! பெட்ரார்க்கினால் ஒன்றும் செய்ய முடியவில்லை; படிக்காமல் பொழுதை எப்படிப் போக்குவது என்றே அவருக்குப் புரியவில்லை. ஒவ்வொரு நொடி கடப்பதும் பலநாள்கள் ஆவதுபோல் அவருக்குத் தோன்றியது; உள்ளத்தில் உண்டாகிய துயர் உடலையும் வாட்டியது. சோர்ந்து படுத்தார்; தலை வலித்தது; காய்ச்சல் உண்டாகியது; இன்னும் இரண்டு மூன்று நாள்கள் கூட ஆகிவிடவில்லை. பத்து நாள்கள் கழித்தே திறவு கோலைத் தரப்போவதாகக் கூறிச் சென்றிருந்தார் நண்பர். என் செய்வார் பெட்ரார்க்!

பெட்ரார்க் படும் துயரைக் கேட்டறிந்தார் அவர் நண்பர். தாம் செய்த தவற்றைப் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டு திறவு கோலைத் தந்தார்; நூலகத்துள் புகுந்த போதே அவரைப் பற்றிய உள்ளத் துயரும், உடற் பிணிகளும் வெளியேறின!

**வெற்றி என் கைகளில் :**

ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும் **உங்கள் விருப்புக்கும் இயல்புக்கும் பொருந்திய முயற்சி இன்னதென முதற்கண் தெளிய வேண்டும். அம் முயற்சியை நிறைவேற்றுதற்கு ஏற்ற வழி துறைகளை ஆராய வேண்டும்; அத்துறைகள் பற்றிய அறிஞர்கள் நூல்களையும் அத்துறைகளில் ஈடுபட்டு வெற்றி கண்ட**

பெரியவர்களின் வரலாறுகளையும் நிரம்பக் கற்க வேண்டும். 'வெற்றி என் கைகளிலே' என்னும் உறுதியும், மலையே உருண்டு வரினும் நிலை குலையேன்' என்னும் ஊக்கமும் கொள்ள வேண்டும். அப்பொழுது உங்களுக்கு உதவுவதற்காகத் தெய்வமே தன் ஆடையை வரிந்து கட்டிக் கொண்டு முன் வரும் !

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" - *திருக்குறள்.*

☆ ☆ ☆

# 7. முட்டுக் கட்டை

"இளம் பருவத்தினராகவுள்ள எங்களால் என்ன முயற்சியை எடுத்துக் கொள்ள முடியும்? என்ன முன்னேற்றத்தைக் காட்ட முடியும்? எந்த ஒன்றுக்கும், ஏற்ற பருவம் வேண்டாவா?" என்று உங்களுள் சிலர் எண்ணக்கூடும். அவ்வாறு எண்ணினால் அது பெருந்தவறாகும்.

**சிறுமா மனிதர் :**

முயற்சி, முன்னேற்றம் இவற்றுக்கும், செயற்கரிய செயல்களைச் செய்தற்கும் இளமை எப்பொழுதும் முட்டுக்கட்டையாக இருந்தது இல்லை. உங்கள் வயதுக்கும் குறைந்தவர்களான பெருமக்கள் '**சிறு பருவப் பெரியர்**' என்றும் '**சிறுமா மனிதர்**' என்றும் பாராட்டப்பெற்று இருக்கின்றனர். வயதால் சிறுவர்களாக அவர்கள் இருந்தாலும் அறிவாற்றல்

களால் பெரியவர்களாகத் திகழ்ந்தார்கள். ஆகவே, இளமைப் பருவம் பெருஞ்செயலுக்குத் தடையானதன்று என்று நீங்கள் எண்ணி உறுதி கொள்ளவேண்டும்.

**தாழ்வு மனம் :**

சில இளைஞர்களுக்குத் தங்கள் திறமைமீது நம்பிக்கை உண்டாவது இல்லை. அவர்கள் "நம்மால் இதைச் செய்ய முடியுமா? நாம் எப்படி இதில் தேர்ச்சிபெற முடியும்? நமக்குப் புரியாத, நம்மால் செய்ய இயலாத செயல்கள் இவை" என்றெல்லாம் தாழ்வு மனப்பான்மை கொண்டுள்ளனர். இத்தாழ்வு மனப்பான்மை முட்டுக்கட்டையாகும். அதனை முளையிலேயே கிள்ளியெறியவேண்டும். **உங்களுக்குள் ஒளிந்துகிடக்கும் ஆற்றல்கள் பலப்பல. உங்களை நீங்களே உணரும் போதும், பலப்பல வாய்ப்புக்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளும்போதுமே தெளிவாக இதை உணர்வீர்கள்.**

**தன்னை உணர்தல் :**

**அனுமானைப்** பற்றி ஒரு கதை சொல்வார்கள். அனுமான் காற்றுக்கடவுளின் மைந்தன்: விண்ணில் பறக்கும் ஆற்றல் வாய்ந்தவன்: ஆனால் அவன் தன் ஆற்றலைத் தான் அறியாமல் இருந்ததால் மற்றவர்களைப் போலவே இருந்தான். ஒருநாள் ஒரு பெரியவர், அவன் ஆற்றலை உரைத்தார். "**நீ நினைத்தால் விண்ணிலேயும் பறக்க முடியும்**" என்று

தூண்டினார். உடனே, வானில் பறந்தான் அனுமான். இக்கதையின் கருத்து என்ன? ஆற்றல் சிலரிடம் அடங்கிக் கிடக்கிறது. அவர்கள் அவ்வாற்றல் தம்மிடம் இருப்பதை அறிந்து கொள்வதில்லை: அறிந்து கொள்வார்களே யானால் அல்லது தக்கவர்கள் தக்க பொழுதில் தூண்டுவார்களே யானால் செயற்கருஞ் செயல் செய்வார்கள் என்பதே இதன் கருத்தாகும்.

**உணர்க ! உணர்க !**

அன்புள்ள மாணவர்களே, உங்கள் ஆற்றலை நீங்கள் உணருங்கள். உணர்வீர்களே யானால் எத்துணையோ பெரும் பெரும் கவிஞர்களும், அறிஞர்களும், கலைஞர்களும், தொழில் வல்லார்களும், தொண்டர்களும் உங்களுள் அடங்கிக் கிடப்பதை அறிவீர்கள்! எதிர்கால உலகுக்கு இணையற்ற நன்மைகளையெல்லாம் வழங்குவீர்கள்.

**இளமை தடையா?**

மூன்றாம் வயது தொடங்கிப் பதினாறாம் வயதுக் குள்ளாகவே பத்திச் சுவை சொட்டும் பல்லாயிரம் பாக்களைப் பாடினார் திருஞான சம்பந்தர்: தம் பதினெட்டாம் வயதுக்குள் 'தம்பிரான் தோழ'ராகித் தண்ணறுந் தேனொழுகும் தேவாரப் பதிகங்கள் பன்னூறு பாடினார் —**சுந்தரர்!** கன்னிமைப்

பருவத்திலேயே கனிவு கொண்ட கடவுட் பாக்களை விரும்பிப் பாடினார், **ஆண்டாள் அம்மையார்!** பத்தாம் அகவை வருமுன்னரே நாட்டுப் பற்றூட்டும் புதுவகைக் கவிதைகளைப் பொழிந்தார் **பாரதியார்.** ஆங்கிலப் பேரறிஞர் **சான்சன்** (Johnson) தம் நான்காம் வயதிலேயே முழுமுழு நூலாக மனப்பாடம் செய்யத் தொடங்கிவிட்டார். தேன் ஒழுகும் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பாடிய மாணிக்கவாசகர் இம்மண்ணுலகில் வாழ்ந்ததெல்லாம் **முப்பத்திரண்டு** ஆண்டுகளே யாகும். இந்திய மண்ணிலே பிறந்து அமெரிக்கா, சப்பான் முதலாய வெளி நாடுகளில் எல்லாம் இந்து சமயக் கொடியை எட்டா உயரத்தில் பறக்கவிட்ட **விவேகானந்த அடிகள்** வாழ்ந்தது முப்பத்தொன்பது ஆண்டுகளேயாம்.

படைகொண்டு உலகை வலம் வருவதற்காக **அலெக்சாண்டர்** புறப்பட்டபோது அவருக்கு வயது இருபத்து ஒன்றேதான். இளம் பருவத்திலேயே பகைவர் பலரை வென்றான் **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.** பகைவர்கள் கோட்டையைச் சூழ்ந்து கொண்டு தீயூட்டியபோது இளைய **கரிகாலன்** வலிய களிறுபோல வெளியேறி வெற்றிக் கொடி நாட்டினான். பதின்மூன்றாம் வயதிலேயே பட்டத்திற்கு வந்து, நாடு பாராட்டுமாறு ஆட்சிபுரிய முடிந்தது **அக்பரால் !** இத்துணைச் சிறுமா மனிதர்களின் திறங்களை

அறிந்து கொண்ட பின்னர், நீங்கள் "எங்கள் இளமைப் பருவம் முன்னேற்றத் திட்டத்திற்கு இடந்தருமா?" என்னும் ஐயம் நீங்கி வாழ்வீர்களாக.

**வறுமை கொடிது :**

"கொடிது கொடிது வறுமை கொடிது: அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்று தனிப்பாடல் ஒன்று கூறுகிறது. அதுபோல் "இளமையிலே வறுமையின் கொடிய பிடிக்கு ஆட்பட்ட எங்களால் ஏற்றம் எய்த முடியுமா?" என்று சிலர் எண்ணுவது புலனாகின்றது.

வறுமை கொடியதுதான்: "இன்று வந்து துன்புறுத்திச் சென்ற வறுமை நாளையும் வருமோ?" என்று ஏங்க வைப்பது தான். "எரியிடையில் உறக்கம் வந்தாலும் வரும்: வறுமை இடையில் உறங்க முடியுமா?" என்று வினாவுகின்றார் திருவள்ளுவர். ஆனால் வறுமையைக் கண்டு வாய்திறந்து சிரித்து நல்வாழ்வு வாழ்ந்தவர்கள் இலரா? அவர்களையெல்லாம் ஏறிட்டுப் பார்க்க முடியாமல் தோல்வி கண்ட வறுமை உங்களைத்தானா வீழ்த்திவிடப் போகின்றது?

நோயால் வாடி நொந்துபோய்க் கிடந்தாலும் புலி தன் தலையை நாய் முகர்ந்து பார்க்க இடம் கொடுப்பது இல்லை. அதுபோல் ஊக்க மிகுதியாளரை வறுமை நெருங்குவதே இல்லை.

**வறுமைக்கு வறுமை :**

*வறுமை ஒன்றையே வாழ்வாகக் கொண்ட* **பெருஞ் சித்திரனாரும், பெருந்தலைச் சாத்தனாரும்** *வரலாற்றில் இடம் பெறத் தவறினார்களா?*

**ஔவையார்,** *செல்வச் சீரோடு வாழ்ந்ததாலா மன்னர்க்கு மன்னரும் மதித்துப் போற்றத் திகழ்ந்தார்?*

*தெரு விளக்கிலே படித்து உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகத் திகழ்ந்த* **சர். தி. முத்துசாமி ஐயருக்கு** *வறுமை தடையாக இருந்ததா? அமெரிக்க நாட்டின் தலைவர்* **வாசிங்டன்,** *பொதுவுடைமை உருசியாவை உருவாக்கிய புரட்சி வீரர்* **லெனின்,** *மூலதனம் என்னும் இணையற்ற நூலைப் படைத்து மார்க்சியம் எனும் தத்துவத்தை உருவாக்கிய காரல் மார்க்சு, சமுதாய ஒப்பந்தம் என்னும் நூலைப் படைத்துப் பெரும் புரட்சி யுண்டாக்கிய* **ரூசோ** *ஆகியவர்கள் எல்லாம் மாளிகையிலே பிறந்து செல்வச் செழிப்பிலே வளர்ந்தவர்களா? 'அடுத்த வேளைக்கு என்ன செய்யலாம்' என்று ஏங்கி வாழ்ந்த ஏழைக் குடியில் பிறந்தவர்களே அவர்கள். ஆகவே வறுமையை எண்ணி வாட்டம் கொள்ளாதீர்கள். "வறுமை என்பது இது கிடைக்கவில்லையே அது கிடைக்கவில்லையே என்று நினைக்கும் நினைவே ஆகும்; செல்வம் என்பது உள்ளத்தின் நிறைவே யாகும்," என்பன தமிழ்ச் சான்றோர்கள் தெளிந்து*

உரைத்த கருத்துக் குவியல்கள். அவர்கள் வழியில் வந்த நீங்கள் வறுமையைக் கண்டு அயர்ந்து விடாமல் வறுமைக்கு வறுமை உண்டாக்கி வாழ்வீர்களாக.

**உறுப்புக் குறை :**

இன்னும் ஒருசிலர், "நாங்கள் உறுப்புக் குறையாளர்களாகப் பிறந்துள்ளோம். எங்களால் எப்படி மற்றவர்களைப் போல் முன்னேற்றத் திட்டங்களை நினைக்கவும் செய்து முடிக்கவும் முடியும்?" என்று கருதுகின்றனர். "வள்ளுவர் பிறந்த நாட்டிலே இந்த எண்ணம் உண்டாவதற்கே இடமில்லை," என்று அழுத்தமாகக் கூற விரும்புகிறோம்.

"உறுப்புக்கள் சீர்பெற அமையாமை குற்றம் ஆகாது: ஆனால் செவ்வையாக உறுப்புக்கள் அமைந்தும் அவற்றைத் தக்க வழிகளில் பயன் படுத்தாது இருப்பதுதான் குற்றம்" என்பது வள்ளுவநெறி.

**சங்கப் புலவர் :**

சங்க காலத்தில் உறுப்புக் குறையுடைய புலவர்களும் வேந்தர்களும் பலப்பலர் இருந்திருக் கின்றனர். அவர்களெல்லாம் தங்கள் உறுப்புக் குறைகளைக் கண்டு ஒடுங்கிவிடவில்லை. உலகம் புறக்கணித்து ஒதுக்கிவிடும் என்று எண்ணவும் இல்லை. 'முடவர், குருடர்' என்று தம்மைப் பிறர்

அழைப்பதைக் கேட்டு இந்நாளில் வருத்தம் அடைவது போல் அவர்கள் அடைந்தது இல்லை. உறுப்புக் குறைகளையே பெயராக இட்டு அழைத்ததையும் வேறுபாடு சிறிதும் இல்லாமல் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தனர். இந்நிலைமையே தம் உறுப்புக் குறையை முன்னேற்றத்தடை என்று அவர்கள் கருதினர் அல்லர் என்பதைப் புலப்படுத்தும்.

**குறையில் நிறை :**

சங்கப் புலவருள் ஒருவர் **நெடுங் கண்ணர்;** இன்னொருவர் **பெருங் கண்ணர்;** வேறொருவர் **காரிக் கண்ணர்;** மற்றொருவர் **கதக் கண்ணர்;** பிறிதொருவர் **பூங் கண்ணர்;** மேலும் ஒருவர் **பூதக் கண்ணர்;** ஒருவரோ **குண்டு கண்ணர்.** இப்படி இன்னும் கண்ணால் பெயர் பெற்றவர்கள் பலர். வேந்தன் ஒருவன் **முடவனாக** இருந்தான். அவன் பெயர் **முடத்திருமாறன்.** இன்னும் **முடக்கொல்லர், முடக்கொற்றர், முடத்தாமக் கண்ணியார், முடமோசியார், ஐயூர் முடவர்** என்னும் பெயருடைய புலவர்கள் பலர் இருந்தனர். கண் குறையும், கை, கால் குறையும் அல்லாமல் பிற உறுப்புக் குறை உடையவர்களும் மிகப் பலர் இருந்தனர். உறுப்பு நிறைவுடையவர்கள் எத்தகு ஏற்றத்தைப் பெற்றார்களோ அத்தகு ஏற்றத்தைப் பெற அவர்கள் தவறவில்லை.

**அந்தகக் கவிராயர் பார்வை இல்லாதவர். அவ்வாறே இரட்டைப் புலவர்களுள் ஒருவரும், மாம்பழக் கவிச்சிங்க நாவலரும்**

அத்தகையவரே! இலியாத, ஒடீசசு என்னும் பெருங் காவியங்களை இயற்றிய புலவர் ஓமரும் அன்னவரே. ஐந்தாண்டளவும் **ஊமையாக** இருந்த **குமர குருபரர்** பதினான்கு நூல்கள் இயற்றிப் பெருத்த அளவில் சமயப்பணி புரிந்தார்.

இவர்களை யெல்லாம் வெல்லும் வகையில் தோன்றியவர் **கெலன் கெல்லர்** என்பவர்.

**கெலன் கெல்லர் (Hellen Keller)**

"நான் என் ஆறாம் திங்களிலேயே 'நலமா?' என்று கேட்கத் தொடங்கிவிட்டேன்; எனக்கு ஒரு வயது ஆகும்போதே நடக்கத் தொடங்கிவிட்டேன்" என்று சொல்கிறார்கள். இன்பே உருவான அந்தப் பருவம் நீடிக்கவில்லை. ஓர் இளவேனில் காலமும் கோடைக்காலமும் சென்றன. இவையே இன்பமான வாழ்வு வாழத் துடித்த குழந்தையாகிய எனது உளம் நிறைந்த நாட்கள்.

"பிப்ரவரித் திங்கள் வந்தது; அதனுடன் எனக்கு நோயும் வந்தது; படுத்துவிட்டேன்; என் கண்களையும் காதுகளையும் கெடுத்துவிட்ட நோய் அது. புதிதாகப் பிறந்த குழந்தை போல் நினைவற்றுக் கிடந்தேன். வயிற்றிலும் மூளையிலும் அடைப்பு உண்டாகிவிட்டது. நான் பிழைக்கவே மாட்டேன் என்று மருத்துவர் எண்ணினாராம். ஆனால் ஒருநாள் எதிர்பாராமல் காய்ச்சல் இறங்கிவிட்டது. இதைக் கண்டு என் குடும்பத்தார் மகிழ்ந்தனர்.

எனக்கு இனிக் கண் திறக்காது, காது கேட்காது என்று அவர்களில் எவருக்கும் தெரியாது: ஏன் - மருத்துவருக்குக் கூடத் தெரியாது" என்று தம் வரலாற்றைக் குறிப்பிடுகிறார் கெலன் கெல்லர். **ஒன்றரை வயதிலேயே கண் குருடாகி, காது செவிடாகி, வாயும் ஊமையானவர் அவர்.** அவர் நிலைமையை அறிந்தவர்கள் அனைவரும் அவர் வாழ்வே அடியோடு தொலைந்துவிட்டது: இருண்டே போய்விட்டது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். ஆனால் கெல்லரும் அவர் வீட்டாரும் அந்த முடிவுக்கு வந்துவிடவில்லை.

கெல்லர் ஒரு குருடர் பள்ளிக்குச் சென்றார். குமாரி **சல்லிவன்** என்னும் பெயருடையவர் அவருக்கு ஆசிரியராக அமைந்தார். அவரும் கண்ணொளியற்ற குருடர் ஆவர். ஆயினும் "குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடிக்" குழிக்குள் விழவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த **மார்க் டுவெயின்** என்னும் ஆசிரியரால் **"இந்த நூற்றாண்டின் பெரியவர் என்று பாராட்டத்தக்கவர் இருவர். அவர் நெப்போலியனும், கெலன் கெல்லரும் ஆவர்"** என்று பாராட்டும் பேறு பெற்றார்.

**இணையிலாப் பேறு :**

கண்ணொளியுடைய மனிதன் கற்பதைப்போல் பன்னூறு மடங்கு நூல்களைக் கற்றவர் கெலன் கெல்லர். செவியுணர்வு பெற்றவர்களைவிட மிகுதியான செய்திகளையும்

இசையையும் கேட்டுத் தெரிந்திருக்கிறார் அவர். பேச்சுத்திறம் உடையவர் களைப் போலவே இனிய சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கிறார். எப்படி அவரால் செய்ய முடிந்தது? அயரா முயற்சி, தன்னம்பிக்கை என்பனவற்றால் தாம் இயற்றினார்.

**'கண்களைக் கெடுத்தவன் மதியைக் கொடுப்பான்'** என்பது பழமொழி. ஒரு குறை மற்றொரு நிறையைத் தந்திருக்கும்! ஆகவே, 'எங்களால் என்ன செய்ய முடியும்? எங்கள் வாழ்வே பாழாகிவிட்டது' என்று எவரும் ஏங்க வேண்டுவது இல்லை.

**பகடு : (காளை)**

அறிவும் உள்ளத்தே அடங்கிக் கிடப்பது: ஆற்றலும் உள்ளத்தே அடங்கிக் கிடப்பது: உலையா முயற்சியும் ஊக்கமும் உள்ளத்தேதாம் அடங்கிக் கிடப்பன. அவற்றை வெளிக்கொணரும் ஆற்றல் கைவந்தவர்கள் வெற்றி காணுகிறார்கள். பிறர் தோல்வி அடைந்து துவண்டு வீழ்கிறார்கள். வெற்றி வாழ்வு வாழ விரும்புபவர்கள் அனைவருக்கும் எடுத்துக் காட்டாகக் **காளைமாடு** இலங்குகிறது. துன்பத்திற்கும் துன்பமூட்டும் துணிவு, காளைக்கு உள்ளமையைப் பெருமக்கள் பலர் பாராட்டியுள்ளனர். ஆனால் அவற்றுள்ளும் சண்டிகள் உண்டு என்பதை மறந்துவிட முடியாது. "தின்னுமாம் ஒரு படப்பு: திரும்பாதாம் ஒரு மடக்கு" என்பது தின்று கொழுத்து உழைக்காத மாட்டுக்குத் தீட்டி வைத்த பாராட்டுப் பட்டயம்.

வண்டி தாங்காத அளவுக்குச் சுமை ஏற்றப்பட்டு இருக்கிறது; 'அச்சு முறிந்து விடுமோ?' என்று ஐயப்படும் அளவுக்குச் சுமை உள்ளது; செல்லும் வழியோ அளறும் சேறும் மல்கியது; மேலே மணல்; அதன் கீழே அளறு; சக்கரம் மணலுக்குக் கீழே பதிகின்றது; பாரச்சட்டம் பதியும் வரை வண்டி மணலுள் ஆழ்ந்து போகின்றது. ஆயினும் வண்டியைக் காளைகள் விடாமல் இழுக்கின்றன. ஆற்றல் எல்லாம் கூட்டி இழுக்கின்றன!

மணலைத் தாண்டி மேட்டில் ஏற வேண்டும்; எளிதில் ஏற முடியாத நிலையில் உள்ளது மேடு; அயர வில்லை மாடுகள்; முன்னங்கால்களை நிலத்தில் ஊன்றி, தலையைக் கீழே சாய்த்துக் கொம்பையும் காதுகளையும் நிமிர்த்தி, முயற்சியோடு வண்டியை இழுத்து மேடேறுகின்றன. அவற்றுக்கு உண்டாகிய தடைகள், அல்லல்கள், சுமைகள் தாம் எத்துணை! எத்துணை! இத்துணை இடுக்கண்களையும் கடந்து வெற்றி கொள்ளும் ஆற்றல் இருப்பதால் தான் காளைகள் புலவர்களால் புகழப்படுகின்றன.

"காளை போன்றவனை எந்த இடர்ப்பாடும் நெருங்கித் துயரூட்டாது. துயரூட்ட வந்த அந்த இடர்ப்பாட்டையே அவன் துயரூட்டித் தொலைப்பான்" என்று வள்ளுவர் கூறுகின்றார். "மணற்பரக்கவும் கல் பிளக்கவும் நடக்கவல்ல பெருமிதமிக்க பகட்டுக்கு நடத்தற்கு அரிய வழியும் உண்டோ?" என்று ஔவையாரும் பாராட்டுகின்றார்.

**இறக்கமும் ஏற்றமும் :**

'தாய் எவர்? தந்தை எவர்? உடன் பிறந்தார், உற்றார் எவர்?' என்று அறியக் கூடாமல் ஆதரிப்பார் எவரும் இன்றி உலகில் இருந்தவர்களில் எத்துணையோ பெயர்கள் பிற்காலத்தில் அறிஞர் களாகவும் கலைஞர்களாகவும் செல்வர்களாகவும் தொழிற்கூடத் தலைவர்களாகவும் ஆள்வோர்களாகவும் விளங்கி வரலாற்றில் நிலையான ஓரிடத்தைத் தமக்கென உருவாக்கி விட்டுப் போயிருக்கிறார்கள். தேடிய செல்வம் எல்லாம் இழந்து தெருவிலே போக நின்றவர்கள் கோடிகோடியாகத் தேடிக் குவித்திருக் கிறார்கள். ஏற்றிருந்த ஓர் எளிய பொறுப்பிலே யிருந்தும் வெருட்டியடிக்கப் பெற்று வீதியே தஞ்சமாக வந்த பலர், மூக்கிலே விரல் வைத்து நோக்குமாறு உயர்வு எய்தியிருக்கிறார்கள். பகடு போன்ற உலையா முயற்சியாளர்கள் இவர்கள்.

**உடையா உள்ளம் :**

வாழ்வில் எந்த ஒன்று உடைந்து போனாலும் மீண்டும் ஒன்று கூடி விடலாம். கண்ணாடி உடைந்தால் கூட, நொறுக்கிக் கண்ணாடியாக மீண்டும் உருவாக்கி விடலாம். ஆனால் **உள்ளம் உடைந்தால் ஒட்டவோ, ஒருப்படுத்திவிடவோ இயலாது.** எனவே, உள்ள உறுதிதான் சிறந்த செல்வமாகும். அஃதின்றேல், பிற செல்வங்களால் பயனில்லை.

*இதைத் தெளிவாக உணர்ந்தவர்கள் வீடோ, நிலமோ, பதவியோ, வாய்ப்போ இழந்த பொழுதுகளில் எல்லாம் தங்கள் உள்ளத்தை மட்டும் உடையாமல் காத்தனர். அதனால் இழந்தவற்றை யெல்லாம் ஒன்றுக்குப் பத்தாகவும் நூறாகவும் தேடினார்கள். அத்தகைய* **உடையா உள்ளம் உங்கட்கு வர வேண்டும்! நீங்கள் உயர்வு எய்தவேண்டும் !**

> **"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
> **நில்லாது நீங்கி விடும்."**

☆ ☆ ☆

# 8. எடுத்துக்காட்டான இளமையர்

இனிய மாணவர்களே! உங்களைப் போன்ற இளம் பருவத்திலேயே அரிய செயல்களைச் செய்து பாராட்டுப் பெற்ற மாணவர்கள் சிலரை நீங்கள் அறிந்து கொள்வது நலமாகும். அவ்வாறு அறிவது அவர்கள் சென்ற வழியில் நீங்கள் செல்லுதற்குத் துணையாகும்.

**ஆசிரியர்க்குப் பெருமையளித்தவன் :**

**கும்பகோணத்தில்** இப்பொழுதுள்ள அரசினர் கல்லூரி, தொடக்கத்தில் மாநிலப் பள்ளி என்னும் பெயருடன் இருந்தது. ஆங்குத் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றிய **சுவாமிநாத தேசிகர்** என்பார் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் வேலை பெற்றுச் சென்றார். அவ்விடத்திற்குத் தகுதியான ஒருவரை நியமிக்க வேண்டியிருந்தது.

அப்பள்ளியில் தலைமையாசிரியருக்கு அடுத்த நிலையில் கோபால ராவ் என்பவர் ஆசிரியராக இருந்தார். அவர் தமிழில் தேர்ச்சி உடையவராக இருந்ததால் தேசிகர் இருந்த இடத்திற்கு வேறொருவர் வரும்வரை தமிழ் வகுப்புக்கள் சிலவற்றைத் தாமே நடத்தி வந்தார். ஒருநாள் அவர், **'செல்வுழி'** என்னும் சொல்லை எப்படிப் பிரிப்பது என ஒரு மாணவனை வினாவினார். அவன் **செல்+உழி** என்று பிரித்துச் சொன்னான்.

" 'செல்வுழி' என்பதில் வகரம் இடையில் வந்திருக்கிறதே அதற்குப் பெயர் என்ன?" என்று மீண்டும் வினாவினார். அந்த மாணவன் விடை தரவில்லை. வேறு சிலரை வினாவியும் அவர்களும் விடை தரவில்லை. **தேவாசி** என்னும் பெயருடைய ஒரு மாணவன், "செல்வுழி என்பதில் இடையே வந்த வகரம் **எழுத்துப் பேறு**. 'விண் வத்து' என்பதில் விண், அத்து என்னும் இரண்டு சொற்களும் சேரும்போது இடையே வந்த வகரமும் இது போன்றதே" என்று கூறினான்.

கோபால ராவ் வியப்படைந்து "வகர மெய்யை உடம்படுமெய் என்று ஏன் சொல்லக் கூடாது?" என்றார்.

"உயிரீற்றின் முன் உயிர் வந்தால் இரண்டும் நின்றவாறே சேரா. ஆதலால் அவற்றை உடம்படுத்து தற்கு வரும் 'யகர வகர' மெய்களை மட்டும் உடம் படுமெய் என்று சொல்வர். இது வேறு வகையில் தோன்றிய எழுத்து ஆதலின் 'எழுத்துப்

பேறு' என்று தான் சொல்லவேண்டும்" என்று மேலும் தெளிவாகச் சொன்னான்.

வகுப்பில் சொல்லித் தராத பாடங்களையும் திறமையாகச் சொன்ன தேவாசியிடம் "இதற்குமுன் நீ எங்கே படித்தாய்? எவரிடம் படித்தாய்?" என்று வினாவினார் கோபாலராவ். தான் திருவரங்கம் பள்ளியில் வித்துவான் தியாகராசச் செட்டியாரிடம் பயின்றதாகக் கூறினான் அம்மாணவன்.

தகுதியான தமிழாசிரியர் ஒருவர் தம் பள்ளிக்குக் கிடைக்க வேண்டுமென எண்ணியிருந்த கோபால ராவ், தியாகராசச் செட்டியாருக்குக் கடிதம் எழுதி வருவித்து, ஆசிரியப் பொறுப்பிலே இருத்தினார்.

ஒரு மாணவனே ஆசிரியருக்குச் சிறந்த பெருமையை உண்டாக்கியதுடன், அவருக்கு வேலையும் வாங்கித் தந்தான் என்றால் அவனை எடுத்துக் காட்டான மாணவன் என்பதில் தவறு இல்லை அன்றோ!

**பள்ளிக்கூடத்தை உயர்த்திய மாணவி :**

இன்னொரு மாணவியைப் பார்ப்போம். ஐந்தாம் வகுப்பிலே படித்துக் கொண்டிருந்தாள் அந்த மாணவி. அவள் படித்த பள்ளிக்குக் கல்வித்துறையைச் சேர்ந்த பெரிய அதிகாரி ஒருவர் வந்தார். அவரைச் சிறப்புச் செய்தற்கென ஒரு கூட்டம் பள்ளியில் நடந்தது. அதில் நாம் குறிப்பிட்ட மாணவி ஒரு பாட்டுப் பாடினாள். அப்பாடற்

கருத்தும் அவள் பாடிய முறையும் இசையின் மேம்பாடும் அதிகாரியைக் கவர்ந்தன. அப்பாட்டை மீண்டும் பாடுமாறு அவர் வேண்டினார். சிறுமியும் பாடினாள். அவர் அச்சிறுமியை அன்புடன் அழைத்து மிக மிகப் பாராட்டினார். "உனக்கு ஏதாவது பரிசு வழங்க விரும்புகிறேன். நீ விரும்புவதைக் கேள்" என்றார்.

சிறுமி எதையும் கேட்கவில்லை. பன்முறை வலியுறுத்தினார். ஆகவே, "நான் கேட்கும் பரிசைத் தாங்கள் தவறாமல் தருவீர்களா?" என்றாள் சிறுமி. "உறுதியாகத் தருவேன், நம்பு" என்றார் அதிகாரி.

சிறுமிக்கு ஏற்ற வண்ணம் சட்டை, பாவாடை, புத்தகம் இப்படி ஏதாவது கேட்பாள் என்றே பலரும் எண்ணினர். ஆனால் அவளோ, "ஐயா, நான் இந்தப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறேன். அதற்கு மேல் இங்கே வகுப்பு இல்லை. ஆதலால் அடுத்த ஆண்டு இப்பள்ளியை விட்டு வேறு பள்ளிக்கு நான் செல்ல வேண்டும். ஆனால் ஐந்து கல்லுக்கு அப்பால் இருக்கும் அந்தப் பள்ளிக்குப் பெண் பிள்ளையாகிய என்னை என் பெற்றோர்கள் அனுப்பமாட்டார்கள்; அதனால் என் படிப்புத் தடைப்பட்டுப் போகும். அவ்வாறு ஆகாமல் தாங்கள் இப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை நடத்த அனுமதி கொடுத்தால் எனக்கு மட்டும் அன்றி, இந்த ஊர்ச் சிறுவர் சிறுமியர் எல்லாருக்கும் பெரு நன்மை உண்டாகும்," என்றாள்.

சிறுமியின் வேண்டுகோளால் அதிகாரி மெய்ம் மறந்து போனார். அந்த இளைய உள்ளத்தில் இருக்கும் அறிவாற்றலையும் கல்வி ஆவலையும், பொது நலத்தையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தார். எட்டாம் வகுப்பு வரை நடத்த அனுமதி வாங்குவதற்குரிய அத்தனை ஏற்பாடுகளையும் செய்வதாக ஏற்றுக் கொண்டார். சிறுமி பெருமகிழ்ச்சி அடைந்தாள்.

அப்பள்ளித் தலைமை ஆசிரியர் அத் தொடக்கப் பள்ளியை உயர் தொடக்கப் பள்ளி ஆக்குவதற்குப் பல்லாண்டுகள் முயன்று பார்த்தார். அவரால் நினைத்ததை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் **பள்ளிச் சிறுமி சரியான பொழுதில், சரியான இடத்தில், சரியான முறையில் சொல்லி நிறைவேற்றிவிட்டாள். தொடக்கப் பள்ளியை உயர் தொடக்கப் பள்ளியாக ஒரு மாணவி மாற்றியமைத்தாள் என்றால் அவளை நமக்குத் தகுதியான வழிகாட்டியாகக் கொள்ளலாம்,** அன்றோ! இந்நிகழ்ச்சி கராய்ச்சியின் அருகே உள்ள ஒரு சிற்றூரில் நிகழ்ந்ததாகும்.

ஆசிரியர்க்கு வேலை வாங்கித் தந்தான் ஒரு மாணவன்: மேல் வகுப்புகளுக்கு அனுமதி வாங்கித் தந்தாள் ஒரு மாணவி: இன்னொரு மாணவனைப் பார்ப்போம். அவன், தான் படித்துக் கொண்டிருந்த பள்ளிக்குக் கட்டடம் கட்டித் தந்தவன் ஆவான்.

**பள்ளிக் கட்டடம் கட்டியவன் :**

**கென்றி போர்டு (Henry Ford)** என்னும் பெயர் உடைய பெருஞ்செல்வர் ஒரு பள்ளிக்குச் சென்று

பார்வையிட்டார். ஒரு வகுப்பினுள் நுழைந்து மாணவர்கள் திறமையைச் சோதிக்க விரும்பினார். “மாணவர்களே, உறுதிக்கடன் பத்திரம் எப்படி எழுதுவது என்பதை நீங்கள் அறிவீர்களா? அறிந்துள்ளீர்கள் என்றால் மாதிரியாக ஒன்று எழுதுங்கள்,” என்றார்.

வகுப்பில் இருந்த மாணவர்களுள் பலர் எழுதிக் கொண்டு போய், போர்டினிடம் கொடுத்தனர். அவற்றுள் ஒரே ஒரு பையன் எழுதியிருந்த பத்திரம் போர்டின் நெஞ்சத்தில் ஆழமாகப் பதிந்தது. திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தார். பின்னர் ஒரு காசோலையை எடுத்து அதில் தம் கையெழுத்து இட்டுப் “பள்ளிக் கட்டடத்திற்கு வேண்டிய தொகையை இதில் எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று ஆசிரியரிடம் தந்தார்.

ஆசிரியர்க்கு எதுவும் விளங்கவில்லை. அவர் பள்ளிக் கட்டடத்தைப் பற்றிப் போர்டிடம் எதுவும் சொல்லவும் இல்லை: நன்கொடை கேட்கவும் இல்லை ! கேட்கும் எண்ணமும் தோன்றவில்லை. அவ்வாறிருக்கக் காசோலை எதிர்பாராமல் வந்தால் வியப்படைய மாட்டாரா?

“இடிந்துபோன கட்டடத்தைக் கட்ட முடிய வில்லை; பள்ளி வளர்ச்சிக்கு ஏற்றபடி புதுக்கட்டடம் கட்டவும் வாய்ப்பு இல்லை. ஆகவே, அக்கட்டடப் பணிக்காகப் போர்டினிடம் பத்தாயிரம் டாலர்

கடன் பெற்றுக் கொண்டேன்" என்று இம் மாணவன் எழுதியுள்ளான். அவன் எழுதியதில் உள்ள உண்மையும் நல்லெண்ணமும் என் நெஞ்சைத் தொட்டன. அதனால் மகிழ்வோடு இத்தொகையை வழங்குகிறேன்" என்று அவ்வள்ளல் கூறினார். மாணவனை மிக மிகப் பாராட்டினார் ஆசிரியர். பிள்ளைப் பருவத்துப் பேரறிஞன் அல்லனோ அவன்!

**எது பெரிது :**

வேந்தன் **குலோத்துங்கன்** புலவர் பேரவையில் இருந்தான். அப்பொழுது கூடியிருந்த புலவர்களை நோக்கி, "கடலிற் பெரிது எது? மலையிற் பெரிது எது? உலகிற் பெரிது எது?" என்று மூன்று வினாக்களை விடுத்தான். தெளிந்து கற்ற புலவர்களுக்கும் வேந்தன் விடுத்த வினாக்கள் வினாக்களாகத் தோன்றவில்லை. கூரிய அம்புகளாகவே தோன்றின. அவர்கள் விடை காண்பதற்கு இயலாது வருந்தினர். ஒருவாறு அவர்கள் கூறிய விடைகளும் வேந்தனுக்கு நிறைவளிக்கவில்லை. அதனால் தக்க விடை கண்டு பின்னொரு நாளில் கூறுமாறு வேந்தன் கட்டளையிட்டுச் சென்றான்.

வேந்தன் வினாக்களும் அவ்வினாக்களுக்குப் புலவர்கள் சரியான விடையளிக்காமையும்

அறிந்தான் ஓர் இளைஞன். **இராமதேவன்** என்பது அவன் பெயர். வினாக்களுக்கு உரிய விடைகளை எளிதில் கண்டான். அவன்: ஏடு ஒன்றை எடுத்து எழுதி வேந்தனுக்கு அனுப்பினான்.

வினாக்களுக்குச் சரியான விடைகள் இவையே என்பதைத் தெளிந்த வேந்தன் புலவர் பேரவையைக் கூட்டினான்.

**மலையிற் பெரிது :**

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

**கடலிற் பெரிது :**

"பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

**உலகிற் பெரிது :**

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று இராமதேவன் எழுதியனுப்பிய விடைகளைப் படித்தான் வேந்தன். அவையோர் "நன்று! நன்று!" என்று பாராட்டினர்; சரியான விடையனுப்பிய பெரும்புலவரைக் காண ஆவலுற்றனர்.

அரசனின் ஏவற்படி சிவிகை ஒன்று இராமதேவனை அழைக்கச் சென்றது.

இராமதேவன் **குன்றத்தூர்** என்னும் ஊரைச் சேர்ந்தவன். ஆகவே அவர்கள் நெடுந்தொலை நடந்து சென்றனர்; இளைஞன் இராமதேவனின் இளம்பருவத்தைக் கண்டு வியந்தனர்; எனினும் அரசன் ஆணைப்படி அழைத்துக்கொண்டு திரும்பினர்.

வந்திருக்கும் புலவர் வயதான முதியவராக இருப்பார் என வேந்தரும் பிறரும் எண்ணினர்: இராம தேவனைக் கண்டு திகைத்தாலும் உருவு கண்டு இகழாமல் பாராட்டி, மேலும் பலப்பல வினாக்கள் விடுத்தனர். அவற்றுக்குரிய விடைகளை இராமதேவன் கூறினார். அவையோர் அவருடைய புலமை முதிர்வைக் கண்டு மகிழ்ந்தனர். வேந்தர் இராமதேவனின் கூர்மையான அறிவு, தெளிவு, இறையன்பு, பணிவு ஆகியவற்றையெல்லாம் கருதித் தம் அமைச்சராக ஆக்கிக் கொண்டார். அந்த **இராமதேவனே பிற்காலத்தில் பத்திச் சுவை சொட்டச் சொட்டத் திருத்தொண்டர் வரலாறு எனும் பெரிய புராணத்தைத் தீந்தமிழில் பாடிய சேக்கிழார் பெருமான் ஆவார்.**

இவ்வாறு இளம் பருவத்திலேயே சீரும் சிறப்பும் எய்திய மாணவர்கள் மிகப் பலர். அவர்களைப் பற்றியெல்லாம் நீங்களே மிக விரிவாகப் பின்னால் தெரிந்து கொள்வீர்கள். இப்பொழுது உங்களுக்கு ஓர் ஐயம் உண்டாகின்றது. 'எடுத்துக் காட்டாகச் சொல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் எவ்வெக் காலத்தோ எங்கெங்கோ இருந்தவர்கள். எங்கள் காலத்தில், எங்கள் நிலையில் வாழ்பவர்களுள்

*அத்தகையவர்கள் இல்லையா?' என்பதே அவ்வையம் ஆகும். அதனைத் தெளிவாக்க வேண்டுவதும் இன்றியமையாததே ஆகும்.*

**அருளாளி :**

*ஒரு வீட்டின் தலைவாயிலில் ஒரு சிறுமி நிற்கிறாள். அவள் கையில் மண்சட்டி இருக்கிறது. இடுப்பிலே பழைய சாக்கு இருக்கிறது! பனிக் கொடுமையால் உடலில் நடுக்கம் இருக்கிறது. வீட்டின் உள்ளே இருந்த இளஞ்சிறுமி ஒருத்தி அச்சிறுமியைக் காண்கிறாள். அவள் உள்ளத்தில் அசைவு உண்டாகின்றது. அருள் பிறக்கின்றது. உடனே தன்னுடைய பாவாடைகளுள் ஒன்றைக் கொண்டு வந்து வெளியே நின்ற சிறுமிக்குத் தருகின்றாள். அந்த இளம் பருவத்தில் வரும் செயலா இது? ஒன்றுக்குப் பத்தாகப் பாவாடை வைத்திருந்தாலும் மேலும் விரும்பிப் புதிது புதிதாகக் கேட்கும் இளம் பருவத்தில் அப் பெருஞ்செயல் செய்தாள்.*

*இதுபோன்ற செயல் ஒன்றைப் பேரறிஞன்* **கார்லைல்** *தம் இளமையில் செய்ததாக அறிகிறோம்.* **மயிலுக்குப் போர்வை தந்த மன்னனையும், முல்லைக்குத் தேர் தந்த வேந்தனையும்** *அறிவோம். இவள் செயல்களை ஏன் அவற்றுக்கு ஒப்பான செயல் என்று கொள்ளக் கூடாது? ஆகவே கார்லைலும் பிறரும் எப்படி வழிகாட்டிகளோ அப்படியே இச்சிறுமியும் சீரிய வழிகாட்டியே என்பதில் ஐயமில்லை.*

**துணிவாளி :**

*சிறுவன் ஒருவன் திடீரென்று கால் வழுக்கிக் கிணற்றின் உள்ளே விழுந்துவிட்டான். அவனுக்கு நீந்தத் தெரியாது; நீரும் ஆழமாக நிரம்பிக் கிடக்கிறது; இறங்கத்தக்க படிக்கட்டும் கிணற்றில் இல்லை. இந்நிலையில் விழுந்தவன் மூழ்கித் திணறுகிறான்.*

*அவன் விழுந்த ஒலியைக் கேட்டு ஓடிவந்தான் ஓர் இளைஞன். தன் சட்டையில் இருந்த ஊற்றுக் கோலையும் காசையும் எடுத்து மேலே போட்டுவிட்டுக் கிணற்றுள் குதித்தான். நீருள் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தவனைத் தூக்கித் தன் மார்போடு அணைத்துக் கொண்டு சுவரைப் பற்றி நின்றான். மற்றவர்கள் கூடிக் கயிற்றைக் கட்டி கிணற்றுள் விட்ட பின்னர் அதன் வழியாக அவனைத் தூக்கிக் கொண்டு வந்தான்! அவனையா தூக்கிக் கொண்டு வந்தான்? போன உயிரை மீட்டுத் தூக்கிக்கொண்டு வந்தான் என்றே சொல்ல வேண்டும். ஆனால் என்ன? அவன் வெளியே போட்டுச் சென்ற ஊற்றுக்கோலையும் காசையும் எவனோ தூக்கிக் கொண்டு போய்விட்டான்.*

*கிணற்றில் வீழ்ந்தவனைத் தூக்கியவனும் மாணவன் தான்! கிணற்றின் மேலே கிடந்தவற்றைத் தூக்கிக்கொண்டு சென்றவனும் மாணவன்தான்.* **முன்னவனை ஏன் மாணவர்கள் எடுத்துக்காட்டாகக் கொள்ளக்**

**கூடாது? பின்னவனை ஏன் வெறுத்து ஒதுக்கித் தள்ளக்கூடாது? நல்லது வரவேண்டுமானால், அல்லது வளர இடம் தரக்கூடாது. அந்நிலை, இளம் பருவத்தில் வந்தால்தான் அவர்கள் வாழ்வு மன்பதை உலகில் மலர முடியும்.**

• *அலெக்சாண்டர் வெள்ளத்தில், பேர்கும்போது அவரைப் போரசு தூக்கிக் கொண்டுவந்து கரை சேர்த்து உதவினால்தான் வரலாறா? இம்மாணவ இளைஞன் செய்த செயல் வரலாற்றோடு ஒட்டாதா? இம் மாணவன் தன் இயல்பான பண்புக்கு ஏற்ப, வானூர்திப் படையிலே சேர்ந்து தொண்டாற்றி வருகின்றான். அவன் வாழ்க! அவன் துணிவு வாழ்வதாக!*

**பொருளாளி :**

*பாட்டி வீட்டுக்குப் போயிருந்தான் ஒரு மாணவன். பாட்டி அவன் செலவுக்கென நான்கு உருபாக்கள் வழங்கினார். பொருள் அருமை அறிந்த பேரன் அத்தொகையைக் கொண்டு ஒரு கோழி வாங்கினான். கண்காணிப்போடு வளர்த்தான். மூன்று நான்கு ஆண்டுகள் கடந்தன. இருபது கோழிகளுக்கு மேல் அவனுக்குச் சொந்தமாயின! நானூறு ரூபாக்களுக்கு மேல் கையிருப்பு! எழுநூறு ரூபாக்களுக்கு மேல் வங்கியிருப்பு. நான்கு ரூபாக்களை வழங்கிய பாட்டி, பேரன் ஊர்க்கு வந்து குடியேறும் நிலைமை உண்டாகிறது. அவருக்குத் தனி வீடு வாங்கவோ, பணவாய்ப்பு இல்லை.*

பேரன் உள்ளம் வேலை செய்தது: அறிவும் வேலை செய்தது. தன் கையிருப்பு நானூறு உருபாய்களையும் கொண்டு ஒப்பந்த முறையில் ஒரு வீட்டை வாங்கித் தந்து பாட்டியைக் குடியேற்றினான். இதைப் 'பார்க்கிலும் என்ன செயலை அவன் செய்ய வேண்டும்? திருவள்ளுவர் கூறியவாறு, இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் ஆகிய வழிகளைக் கடைப்பிடித்த அவன் மற்ற மாணவர்க்கு ஏன் வழிகாட்டியாக ஆக மாட்டான்?

**அறிவாளி :**

ஆசிரியர் சுவையாகப் பாடம் நடத்துகிறார். சிலம்பணிந்து சூர்ப்பநகை அழகு நடையிட்டு வருவதைக் கம்பர் "பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்க" என்று தொடங்கும் பாடலால் கூறுவதை ஆசிரியர் இனிமையாகப் பாடுகிறார். அந்த ஒலிநயம் காதுக்கு இனிக்கிறது. ஒரு மாணவன் எழுந்து, "சிலம்புடன் நடையிட்டு வருவதைக் கவிஞன் ஒலியால் காட்டி விடுகிறான்! வெறு நடையைப் பார்க்கிலும் மகளிர் பந்தடிக்கும் காட்சியை இப்படி ஒலிநயம் அமையப் பாடினால் எவ்வளவோ சிறப்பாக இருக்கும்," என்று தன் ஆவலை எழுப்புகிறான்; அவன் ஆவல் ஆசிரியர் உணர்வைத் தட்டுகிறது! ஐந்து பாடல்கள் அவ்வினிய இசையால் அமைத்துத் தருகிறார் ஆசிரியர். "அழகாக இருக்கிறது: தொடர்ந்து ஒரு

*நூலாகப் பாடுங்கள்"* என்று வேண்டுகிறான்! - ஆம்! அவன் வேண்டுதல் வீணாகிவிடாமல் ஒரு காவியமே உருவாகின்றது. **"குழந்தைகளின் கேள்வி முட்டாளையும் அறிஞன் ஆக்கிவிடும்"** என்பதில் எவ்வளவு உண்மை பொருந்திக் கிடக்கிறது!

**கற்றவாறு நிற்றல் :**

> **"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
> **நிற்க அதற்குத் தக"**

என்றார் வள்ளுவர். இதுகாறும் செயற்கரிய செயல் புரிந்த பல சீரியரின் வரலாறுகளை ஒருவாறு கற்றுணர்ந்தீர்கள். இனி அத்தகைய சீரியர் வழிநின்று சிறப்புற வேண்டுவது மாணவர்களாகிய உங்கள் கடன். அங்ஙனமின்றி நீவிர் கற்ற கல்விக்கும் வாழ்க்கை முறைக்கும் தொடர்பில்லை என்னும் நிலை இருக்குமானால் நீங்கள் கற்றவாறு நிற்பவராக மாட்டீர்கள்.

எனவே, கல்வியின் பயன் கைவரப் பெறவேண்டுமானால், மாணவர் என்னும் இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழவேண்டுமானால் கற்றவற்றைச் செயல் முறைக்குக் கொண்டுவரல் வேண்டும். குறிப்பாக வரலாறுகளைப் பயிலும் மாணவர்கள் தாமும் வரலாற்றுச் சிறப்பினைப் பெறல்வேண்டும் என்னும் ஆர்வத்தால் உந்தப்படல் வேண்டும்.

மாணவர்களாகிய நீங்கள் உடல் வளம் பெற்று வாழ்தல் வேண்டும். சுவரை வைத்தே ஓவியம் எழுத வேண்டும் என்பர் அறிஞர். ஆதலால், நல்லுடல் பெற்று வாழவே நீங்கள் விரும்புதல் வேண்டும். நல் உடலில் நல் உள்ளம் இருக்கும். நீண்ட வாழ்நாள் பெறுவதற்கு நல் உடலே காரணமாகும். இதனைத் திருமூலரும்,

**"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"**

என்று கூறுகின்றார். ஆதலால் நீங்கள் தொடர்ந்த உடற் பயிற்சியாலும், நல்லோர் கூட்டுறவாலும் நல்ல நூல்களைப் பயில்வதாலும் **நல்லுள்ளமும் நல்லுடலும் பெற்று நல்வாழ்வு வாழ்தல் வேண்டும்.**

**வாழிய உலகம் :**

**'இறைவன் தன் சாயலாக மாந்தனைப் படைத்தான்'** என்பது மறைமொழி. இதன் பொருள் மாந்தனிடம் தெய்வத்தன்மை அடங்கிக் கிடக்கின்றது என்பதே! அதனால்தான் **'ஊனுடம்பு ஆலயம்'** என்று கூறும் திருமூலர், **"உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டான்"** என்றும் கூறுகிறார். ஆகவே **உடலோடு பிறந்தோம்; உடலுக்குள்ளே இறைவன் உறைகின்றான்; அவ்விறைவன் வாழும் உடலைக் கொண்டு என்றும் அழியா வாழ்வு வாழ்வதே நம் பிறவிப் பயன் என்னும் உணர்வோடு நல்வாழ்வு வாழ்வீர்களாக! வாழிய உலகம் !**

☆ ☆ ☆

# 9. பணப்பை

"ஐயா, இங்கே வாருங்கள்" என்று ஒளி படைத்த கண்ணும் உறுதிகொண்ட நெஞ்சும் உடைய தமிழ்ப் பெருமகன் ஒருவரை, ஒருவர் அழைத்துச் சென்றார். தன்னந் தனியான ஓரிடத்தை அடைந்து சுற்றுமுற்றும் பார்த்து விட்டுப் பேசினார் அழைத்துச் சென்றவர்: "ஐயா, இந்த இலக்கம் ரூபாக்களையும் அன்பளிப்பாகத் தருகின்றோம்: நீங்கள் வேறொன்றும் நினைக்க வேண்டாம்: இதை வாங்கிக்கொண்டு, நீங்கள் புதிதாகத் தொடங்கியிருக்கும் இயக்கத்தை மட்டும் விட்டு விட்டால் போதும், மேலும் மேலும் உங்களுக்கு எவ்வளவு உதவி வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கின்றோம்."

"பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும்", "ஈட்டி எட்டு மட்டும், பணம் பாதாள மட்டும்", "பணம்

பத்தும் செய்யும்" என்பனவெல்லாம் வழக்கிடைக் காணும் பழமொழிகள்! ஆனால் 'பணம்' என்றவுடனே' தலையசைத்து விட்டாரா?

தமிழ்ப் பெருமகன் கூறினார்: "இந்த ஓர் இலக்கம் ரூபாக்களும் எனக்குக் கைக்கூலியா?. (இலஞ்சமா?) உயிரோடு உயிராக ஒன்றிவிட்ட உணர்ச்சியால் தொடங்கிய இயக்கத்தை உன் பிச்சைக் காசு கருதி விட்டுவிட வேண்டுமா? பணத்திற்காக வாயைத் திறக்கும் பண்பில்லாதவன் எவனாவது இருந்தால் அவனிடம் போய்ச் சொல் உன் காரியத்தை: சேசே! மானமற்ற பிழைப்பும் ஒரு பிழைப்பா?"

கண்களில் கனற்பொறி பறக்கக் கூறி விட்டுக் கடுகடுத்த நடையிலே புறப்பட்டார் திருக்கு மீசைக்காரத் தீந்தமிழர்.

என்ன இது? இப்படியும் உண்டா? ஓர் இலக்கம் உரூபா வலிய வந்தும், போ-பழிவழிப் பணமே போ- என்று எற்றித் தள்ளிவிட்டு ஏறு நடையிட்ட அந்த ஏந்தல் யாவர்? அவரே வ.உ. சிதம்பரனார்.

"சொந்த நாட்டினை வந்த நாட்டினர் ஆளவோ? நாம் ஆண் பிள்ளைகள் அல்லமோ? உயிர் வெல்லமோ?" என்று பறையறைந்து, "வெள்ளையனே வெளியேறு" என்று முழங்கிச் சுதந்திர நாட்டத்தை மூட்டிய வ.உ.சி. 'கப்பற் கம்பெனி' ஒன்றை ஆரம்பித்தார்! அப்பொழுது தான் இலக்க உரூபா தேடிவந்து, பழியோடு திரும்பியது

எதிர்ப்பின் இடையே-உலகெலாம் பரவி ஒரு கோலோச்சிய ஆங்கில ஆட்சியின் நேரடி எதிர்ப்பின் இடையே - தொடங்கப் பெற்றது 'சுதேசிக் கப்பல் இயக்கம்'. கப்பல் வேண்டுமே?

பம்பாயிலே, ஒரு கப்பல் வாங்க ஒப்பந்தம் செய்தார். அந்த ஒப்பந்தம் முறிந்துவிட்டது. எல்லாம் 'சூழ்ச்சிக்காரர்'களின் ஏற்பாடுகளால் தான்! கப்பல் கிடைக்கவில்லையே என்று தளர்ந்து விட்டாரா? மலையே புரண்டு வந்தாலும் நிலை குலையாத உள்ளம் படைத்தவர் அல்லவா சிதம்பரனார்! ஊக்கமாகக் கிளம்பினார்.

கொழும்பிலே போய், கப்பல் ஒன்றை ஒப்பந்தம் செய்தார். வாடகைக்கு! அப்படியாவது கிடைத்ததே என்னும் மகிழ்ச்சியிலே, தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு மிதக்க விட்டார் கப்பலை! அது வணிகக் கப்பலாகவா காட்சியளித்தது? - விடுதலைக் கப்பலாகக் காட்சியளித்தது. ஆனால் வாடகைக் கப்பல்தானே, சொந்தக் கப்பலாகி விடுமா?

மீண்டும் புறப்பட்டார், கப்பல் வாங்க - பணம் திரட்ட. மனைவி நிறை கருப்பமாக இருந்தார்: மகன் உலகநாதன் நோய்ப் படுக்கையிலே கிடந்து உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தான். "ஒரு முறையாவது வந்துவிட்டுச் செல்லுங்கள்" என்று நண்பர்கள் முறையிட்டுக் கடிதம் எழுதினர். "இறைவன் பெரியவன்: அவன் காப்பாற்றுவான்; நான் கப்பலுடன் திரும்புவேன்; இல்லையேல் கடலில்

விழுந்து சாவேன்" என்று கும்பிடு போட்டுக் கடிதம் எழுதிவிட்டுக் கருமமே கண்ணாக இருந்தார்.

"வாராது வந்த மாமணி வ.உ.சி." என்று உணர்ந்தவர்கள் ஓடி ஓடி வந்து ஆயிர ஆயிரமாகக் குவித்தனர். மீண்டும் பம்பாய் சென்றார் வீரர்-அங்கொரு கப்பல்; பிரான்சிலேயிருந்து ஒரு கப்பல்; ஆக இரண்டு கப்பல்களுடன் தூத்துக்குடி வந்தடைந்தார்! கங்கையும் கடாரமும் கொண்டு வாழ்ந்த சோழன் இராசேந்திரனே புதுப் பிறப்புப் பிறந்து தூத்துக்குடித் துறைமுகம் வந்தடைந்தது போன்று நாட்டுப் பற்றுடையோர் மகிழ்ந்தனர்; நாடாள்வோர் எரிந்து விழுந்தனர்-"எழுச்சி வலுத்து விட்டது அன்னிய ஆட்சிக்கும் 'தலைமுழுக்கு'த்தான்" என்று அறிந்து கொண்டு விட்டார்கள்!

எதிரிகள் இயலாதவர்களா? நயவழிகள் பயவழிகள் என்னென்ன உண்டோ அவ்வளவும் செய்து பார்த்தனர். பயவழிகள் வீரர்முன் மண்டியிட்டன; நயவழிகள் பண்புமலைமுன் நாடியொடுங்கின! வஞ்ச வழிகளையே, தஞ்சமாகக் கொண்டு ஒடுக்க முன்வந்தனர் அயலார்!

சுதேசிக் கப்பலில் ஏறுவதும், சரக்கு ஏற்றுவதும் குற்றங்கள் ஆக்கப்பட்டன; கப்பற் கம்பெனிக்குப் பணம் தருவோரும், பணிபுரிவோரும் பழிவாங்கப் பட்டனர்; ஆள்வோர் நினைத்தால் காரணங்களா கிடைக்கா? உறுப்பினர்களுக்கே இவ்வளவு இக்கட்டு என்றால், தலைவருக்கு? அந்தோ! நாட்டுப் பற்றுக் கொண்டு செய்யும் செயல்களுக்குப் பரிசும் பதவியும்

தந்து பாராட்ட வேண்டிய அரசு பழிப்பட்டம் சூட்டியது: குற்றக் கூண்டிலே நிறுத்தியது. "துரோகி" என்று பட்டயம் தீட்டித் தந்து சிறைக்குள் தள்ளியது.

உள்ளேயாவது ஓய்ந்திருக்க விட்டதா? கல்லுடைக்க வைத்தது. செக்கிழுக்கச் செய்தது. எல்லாவற்றையும் இன்பமாகக் கருதினார் வ.உ.சி. தாம் படும் துன்பங்கள் அனைத்தும் உரிமைக் கோயிலுக்குச் செல்லும் பாதைகளில் அமைந்த 'மைல்' கற்களே' என்று மகிழ்ந்தார்! உரிமைக் கொடி சிறிது சிறிது ஆக உயர்த்தப்படுவதாக உவந்தார். அது வீணாகி விட்டதா? இன்று, "ஆனந்த் சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று பள்ளுப் பாடி விட்டோம்! "விடுதலை விடுதலை விடுதலை" என்று முழங்கிவிட்டோம்.

அன்று வ.உ.சி. இலக்க உரூபாக்களைப் பொருட்டாய் எண்ணியிருந்தால் -தூ என்று காறித் துப்பாமல் இருந்தால் - அவர் வாழ் நாளெல்லாம் பொன்னாலும் பொருளாலும் பொலிந்திருப்பார்! ஆனால் என்றென்றும் "அழியாப் புகழ்," அவரை உரிமையாக்கிக் கொண்டிருக்குமா?

"நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்"

(நன்மையே தந்தாலும், நடுவு நிலைமை கடந்து உண்டாகும் செல்வத்தை அப்பொழுதே ஒழித்து விடுக) என்பது அன்றோ தமிழ் மறை.

☆ ☆ ☆

# 10. ஒரு நாடகம்

அரிச்சந்திரன் நாடகம் பார்த்தார் இளைஞர் ஒருவர். அவர் பெயர் கரம் சந்திரர். அரிச்சந்திரன் எத்தனை எத்தனை இன்னல்கள் அடைந்தும் பொய்யே சொல்லாது வாழ்ந்த உயர்வு, இளைஞர் உள்ளத்தைத் தொட்டு நன்றாகப் பதிந்தது. "இன்று முதல் நான் பொய் சொல்லவே மாட்டேன்" என்று உறுதி செய்துகொண்டார். நாடகம் படக்காட்சி இவற்றைக் கண்டு எத்துணைப் பேர்கள் இப்படி உறுதி செய்து கொண்டு இறுதி வரை காப்பாற்று வார்கள்?

கரம்சந்திரர் சிறுவராக இருக்கும்போது கெட்டவன் ஒருவனது உறவு ஏற்பட்டது. அவன் வலைக்குள் நன்றாக மாட்டிக் கொண்ட கரம்சந்திரர், யாருக்கும் தெரியாமல் மறைவான இடங்களில் சென்று புலால் உண்டார். வீட்டுக்குப் போய்

வழக்கம்போல் சாப்பிட முடியாது அல்லவா! அதனால் "வயிற்றுக்கு நன்றாக இல்லை; பசிக்கவில்லை" இப்படியெல்லாம் காரணம்-பொய்க் காரணம் - காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. காரணம் சொல்லி முடித்தவுடன் மனச்சாட்சி - அரிச்சந்திரன் கதை ஆகிய இரண்டும் கூடிச் சேர்ந்து "பெற்று வளர்த்துப் பேரன் புடையவராய் இருக்கும் தாயினிடமா பொய் சொல்லுவது?" என்று வாட்டும்! "எத்தனை நாள்களுக்குத்தான் உன் பொய் வெளிப்படாமல் இருக்கும்?" என்று இடித்துக் காட்டும். ஆம்! கரம்சந்திரர் மேலும் உறுதி செய்து கொண்டார்: "புலால் உண்பதும் புகை குடிப்பதும் ஆகிய தீய வழக்கங்கள் செலவினை உண்டாக்கிப் பொய்யும் பேசவைக்கின்றன. ஆதலால் இவற்றை இன்று முதல் தொடேன்."

இளைஞர் கரம்சந்திரர் ஒரு தொடக்கப் பள்ளியிலே படித்து வந்தார். அப்பள்ளியை மேற்பார்வையிடுவதற்காக அதிகாரி வந்திருந்தார். அவர் சில ஆங்கிலச் சொற்களைச் சொல்லி மாணவர்களை எழுதச் செய்தார். அவர் சொல்லிய ஆங்கிலச் சொற்களிலே கெட்டில் (kettle) என்பதும் ஒன்று. இச்சொல்லைக் கரம்சந்திரர் சரியாக எழுதவில்லை. அவர் சரியாக எழுதவில்லை என்பதை ஆசிரியர் பார்த்தார். வருந்தினார். அதிகாரி என்ன சொல்லுவாரோ என்பது அவர் கவலையாக இருந்தது. அதனால் கரம்சந்திரரின் காலை மிதித்து, அடுத்த பையனைப் பார்த்து எழுதுமாறு குறிப்பால் கூறினார்.

ஆனால் தெரியாத ஒன்றைத் தெரியும் என்று பொய்யாக நடிக்க விரும்பவில்லை இளைஞர் கரம்சந்திரர். அதனால் ஆசிரியர் குறிப்புப்படி அடுத்தவனைப் பார்த்து எழுதாமல் நின்றார். ஆசிரியர் மேலும் ஓரிரு தடவைகள் வற்புறுத்தியும் இளைஞர் எழுதாதது கண்டு வருந்திச் சோர்வு கொண்டார். ஆசிரியரே பார்த்து எழுதச் சொல்லும்பொழுது 'எழுதமாட்டேன்' என்னும் வலிய உள்ளம் மாணவருக்கு ஏற்படுவது எல்லோரிடமும் எதிர்பார்க்கக் கூடிய நிகழ்ச்சியா? இக்குணம் இளமையிலே வாய்த்துவிட்டபடியால் தான் அஃது உலகப் புகழ் வாங்கித் தந்தது. இந்தக் கரம்சந்திரர் யார்?

அவரே நம் காந்தியடிகள்!

காந்தியடிகள் தொடக்கத்தில் வழக்கறிஞர் தொழில் புரிந்தார். வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டவர்கள் பொய் சொல்லாமல் முடியாது என்பார்கள். ஆனால் காந்தியடிகளோ அந்த உரையையே பொய்யுரையாக்கி விட்டார்! அவர் பொய்மை கலவாத வழக்குகளையே தேர்ந்து எடுத்துக் கொண்டார். தாம் எடுத்துக் கொண்ட வழக்கில் 'பொய்'யும் கலந்திருக்கிறது என்று எப்பொழுதாவது உணர்ந்து விடுவாரானால் எதிரியினிடமே உண்மையை உரைத்து வழக்கினைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்.

ஒரு சமயம் தம் கட்சிக்காரன் ஒருவன் தம்மிடம் பொய் சொல்லியிருப்பதாக வழக்கு விசாரணையின்

போது அறிந்தார். உடனே நீதிபதியினிடமே வழக்கினைத் தள்ளி விடுமாறு வேண்டினார். இப்பண்பு வழக்கறிஞர்கள் அனைவரிடமும் வந்து விடுமானால் நாட்டிலே நடைபெறும் வழக்குகளில் நாலில் ஒரு பங்குகூட நடைபெறுமா? ஆனால் வழக்கறிஞர்கள் ஆயிரம் ஆயிரம் பேர்களில் ஒரே ஒரு காந்தி தானே தோன்ற முடிந்தது!

அடிகளுக்கு நண்பர் ஒருவர் இருந்தார். அவர் அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய வரிப்பணம் கட்டவில்லை. அரசினர் வழக்குத் தொடர்ந்தனர். காந்தியடிகளோ, தம் நண்பருக்காகப் பொய்யாக வழக்காடாது அவர் செய்திருக்கும் தவறான வழக்குகள் அத்துணையையும் வெளிப்படையாகக் கூறினார். அந்த மெய்யுரை ஒன்றாலே - சிறைத் தண்டனை, பொருள் தண்டனை என்னும் அளவில் நின்றது. காந்தியடிகள், பொய்யாமை போலும் புகழில்லை, அறமில்லை, இன்பமில்லை என்பதைத் தெளிந்து அறிந்தவர் அல்லவா!

**1919** -ஆம் ஆண்டில் ஆங்கில அரசை எதிர்த்து அறப்போர் தொடங்கத் திட்டமிட்டார் அடிகள். திட்டமிட்டபடியே நாடெங்கும் போராட்டம் நடைபெற்றது. அறப் போராட்டம் என்றால் தங்கள் எதிர்ப்பினைக் காட்டுவது ஒன்றே வேண்டுவது அல்லாமல் உயிருக்கோ, பொருளுக்கோ சேதம் ஏற்படுத்தும் வன்முறைகள் எவையும் கூடா! ஆனால் உணர்ச்சிக்கு ஆட்பட்ட போராட்டக்காரர்களில்

சிலர் வன்முறைகளைக் கையாண்டனர். இதனை அறிந்தவுடன் வருந்தினார் அடிகள். "அறப் போருக்குரிய பக்குவம் அடையாத மக்களை அறப்போரில் இறங்குமாறு ஏவியது இமயமலை போல்வதான பெருந்தவறு; போராட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்" என்று வெளிப்படையாகவே அறிக்கை வெளியிட்டார். போராட்டத்தை நிறுத்தி விடுமாறும் ஆணை யிட்டார். 'தாம் செய்தது தவறு' என்று மன்னிப்புக் கேட்கும் உலகத் தலைவர்கள் எத்தனை பேர்?

பொய்யா நோன்பினை வாழ்நாளெல்லாம் போற்றி ஒழுகினார் அடிகள். அதனால் புவியிலுள் ளோர் உள்ளத்தெல்லாம் புகழ் வடிவிலே சுடர்விட்டு விளங்குகின்றார்!

> **உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்**
> **உள்ளத்து ளெல்லாம் உளன்.**

(ஒருவன் தன் மனச் சான்றுக்கு ஏற்ப, பொய்யின்றி வாழ்வானாயின் அவன் உலக மக்களின் உள்ளங்களில் எல்லாம் நிலைபெற்றவன் ஆவான்.)

☆ ☆ ☆

# 11. பரிசு

ஒரு சாலை வழியே இரண்டு குதிரைகள் ஓடிக் கொண்டிருந்தன. அக் குதிரைகளின்மீது இரண்டு பேர்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் சென்று கொண்டிருந்த திசைக்கு எதிரேயிருந்து ஒருவன் நடந்து வந்தான். அவன் குதிரையில் வந்தவர்களுள் ஒருவரை இன்னார் என்று தெரிந்து கொண்டபடியால் சட்டென்று ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்று தன் தொப்பியை எடுத்துக் கைகளிலே வைத்துக் கொண்டு தலை தாழ்ந்து பணிவோடு வணக்கம் செய்தான். குதிரையில் இருந்த அவர் உடனே பதில் வணக்கம் செலுத்தி விடாது கீழே இறங்கி வந்து, வழிப்போக்கனைப் போலவே பணிவோடு நின்று, தொப்பியைக் கையிலே எடுத்து வைத்துக் கொண்டு வணங்கினார். இவ்வாறு நடக்கும் என்பதைக் குதிரையில் உடன் வந்தவனும் நினைக்கவில்லை:

வழிப்போக்கனும் நினைக்கவில்லை. வியப் படைந்தனர்.

குதிரையில் வந்த இருவரும் மீண்டும் தம் பயணத்தைத் தொடங்கினர். உடன் வந்தவன் போகும் பொழுதே கேட்டான்: "அந்த ஏழையை நீங்கள் இவ்வளவு பணிவுடன் வணங்க வேண்டுமா? குதிரையில் இருந்து கொண்டே வணங்கியிருக்கக் கூடாதா?"

"ஏழை செல்வன் என்ற வேற்றுமை பணிவுக்கு இல்லை: இருக்கவும் கூடாது. ஒரு நாட்டின் தலைவன் பணிவுடைமையிலும் தலைவனாக இருக்க வேண்டுமே அன்றித் தாழ்ந்து விடக் கூடாது. எந்தக் காரணம் கொண்டும் எந்தவோர் ஏழையும் பணிவில் என்னை வெற்றி கொண்டு விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது என் கடமை." என்றார் தாழ்ந்து வணங்கிய பெரியவர். வாயடைத்துப் போனான் உடன் வந்தவன்.

குதிரையிலிருந்து கீழே இறங்கி வணக்கம் செலுத்தியவர் எளிய பதவியில் இருந்தவரா? அரிதினும் அரிய பதவி - அமெரிக்க நாட்டின் தலைவர் பதவி! அவர் பெயர், ஆபிரகாம் லிங்கன்.

"அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்" என்பது பழமொழி. ஆனால் நல்லவன் கையில் நாட்டாட்சி இருக்கும் பொழுது நாடெய்தும் நலங்களுக்கு அளவும் உண்டா?

பணிவுமிக்க ஆப்ரகாம் ஒரு நாள் ஒரு தெருப்பக்கம் நடந்து போய்க் கொண்டிருந்தார். அங்கே ஒரு குதிரை வண்டிக்காரன் நின்றான். அவன் லிங்கனைக் கண்டதும் புன்முறுவலுடன் நெருங்கினான்; வணக்க மிட்டான். "ஐயா, உங்கள் பொருள் ஒன்று என்னிடம் நெடுநாள்களாகக் காத்திருக்கின்றது. இதுவரை தங்களைக் கண்டு பிடித்து அதனைக் கொடுக்க முடியவில்லை. இன்றுதான் கண்டு பிடித்தேன்; மகிழ்ச்சி" என்றான்.

இலிங்கனுக்குத் திகைப்பாக இருந்தது. ஏனெனில், இலிங்கன் அந்தக் குதிரை வண்டிக் காரனை இதற்கு முன் கண்டதுமில்லை. எந்தப் பொருளும் கொடுத்திருக்கவும் இல்லை. இலிங்கன் கேட்டார்: "என்னுடைய பொருள், உன்னிடம் என்ன இருக்கிறது?"

'இதோ' என்று மழுங்கிப் போயிருந்த கத்தி ஒன்றை நீட்டினான் குதிரை வண்டிக்காரன். இலிங்கனது திகைப்பு வியப்பாக மாறியது. "என்னுடையதா இது?" என்று கேட்டார்.

"ஆம்; உங்கள் பொருள்தான். எப்படி என்றால் நெடுநாள்களுக்கு முன்பு ஒரு பெரியவர் என்னிடம் இந்தக் கத்தியைத் தந்து 'நீ பார்க்கும் ஆள்களிலே எவர் அழகற்றவராக (அவலச்சணமாக) இருக்கி றாரோ அவரிடம் இதனை ஒப்படைத்து விடு' என்றார். நானும் அப்படிப்பட்ட ஒருவரைத் தேடித்தேடி அலுத்தேன். இன்றுதான், தாங்கள்

தான் அந்தப் பொருளுக்குரிய உடைமைக்காரர் என்பதைக் கண்டு பிடித்தேன்" என்றான் வண்டிக்காரன்.

இச் சொற்களை உணர்ச்சிமிக்க ஒருவன் - முன் கோபமுடைய ஒருவன் - கேட்டிருந்தால் என்ன செய்திருப்பான்? குதிரை வண்டிக்காரன் தன் பற்களைப் பொறுக்கி எடுக்க வேண்டிய நிலைமை ஆகாது இருக்குமா? ஆனால் ஆபிரகாம் என்ன செய்தார்?

"நண்பனே! மகிழ்ச்சி! என். பொருளை இதுவரை நீ பாதுகாப்பாக வைத்திருந்து, உரிய பொழுதில் ஒப்படைத்தும் விட்டாயல்லவா! என் பொருளைப் பெற்றுக் கொண்ட மகிழ்ச்சி எனக்கு மிகவுண்டு உனக்கு நன்றி" என்று கூறினார். "ஆபிரகாம் நீர் மனிதரல்லர்: மனித உருவிலே நின்ற தெய்வவுரு" என்று நமக்கு வாழ்த்தத் தோன்றுகிறது அல்லவா!

நெடு நெட்டையாகவும், மிகு ஒல்லியாகவும், படியாத் தலையராகவும் குழிவிழுந்த கன்னத்தராகவும் இருந்த ஆபிரகாம் அழகில்லாதவர் தான். உடல் உடை பற்றியோ, குளிப்பு தலை கோதுதல் பற்றியோ அவ்வளவாக அக்கறை கொள்ளாதவர் தான். காலிலே அணிந்து கொண்ட அடிபுதை அரணங்களை (பூட்சுகளை) யும் கால் உறைகளையும் எத்தனையோ நாள்களுக்கு ஒரு முறை கழற்றித் துடைப்பவர்தான். ஆனால் இந்த உடலழகினும்

பல்லாயிரம் பங்கு சிறந்ததான உள்ளத்தழகு ஆபிரகாமினிடம் நிரம்பிக் கிடந்ததே! உள்ளழகு இருக்கும் பொழுது புற அழகு இல்லாவிட்டால் தான் என்ன?

உலக அழகுப் போட்டியிலே பங்கு எடுத்துக் கொண்டு முதற் பரிசு பெற்றவன் என்ன உலகத்தார் நெஞ்சத்தை விட்டு அகலாது இடம் பெற்று விடுவானா? அன்றி அவனென்ன அழியாத அழகனா? அவனுக்கும் இருபதில் எழுச்சி, முப்பதில் முறுக்கு, நாற்பதில் நழுவல், ஐம்பதில் அசதி, அறுபதில் ஆட்டம், எழுபதில் ஏக்கம், எண்பதில் தூக்கம் என்னும் நிலைகள் ஏற்படாது ஒழியுமா? எச்சிலும் மூக்கும் கோழையும் குன்னலும் நோயும் நொம்பலும் உலக அழகனுக்கு விதிவிலக்காக முடியுமா? அழியா உடலா அவன் உடல்? பண்புடல் ஒன்றே அழியாவுடல்: அழகுமிக்க உடல்: அதனைப் பெற்றார் இலிங்கன். உலகத்தார் உள்ளத்தே அழியா எழுத்தில் எழுதப் பெற்று விட்டார்.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப் பிற"

(ஒருவனுக்கு அணிகலன் பணிவு உடைமையும், இன்சொல் உரைத்தலும் ஆகும். இவையன்றி வேறு அணி கலங்கள் உண்மையான அணிகலன்கள் ஆகா.)

☆ ☆ ☆

# 12. பட்டாடை

"அம்மா! பைத்தியம்: பைத்தியம்!" என்று சொல்லிக் கொண்டே வெளியேயிருந்து வீட்டுக்குள் ஓடி வந்தாள் சிறுமி ஒருத்தி: உட்புறத்தில் இருந்த தாய், குழந்தை கூக்குரலைக் கேட்டுத் துடிப்புடன் முன்புறம் வந்தார். மெலிந்த உடலும், கிழிந்த உடையும், தாடி மீசையுமாக இருந்த ஒருவரைக் கண்டார். தம்மை மறந்து போய்த் தம் குழந்தையி னிடம் "பாப்பா, பாரதி மாமா இல்லையா! அவர்தான்: வணக்கம் செலுத்து" என்றார். அம்மை யாரும் வணக்கம் செலுத்தி வரவேற்று இருக்கச் செய்தார்.

தூத்துக்குடியில் வழக்கறிஞராக வேலை பார்த்து வந்தார் பாரதியாரின் அன்பரும், தோழரும், உள்ளூர்க்காரருமான சோமசுந்தர பாரதியார். புதுச்சேரியிலிருந்து வெளியேறிய பின்

தம் நண்பரைப் பார்ப்பதற்காகத் தூத்துக்குடிக்கு வந்தார். அவர் வந்த பொழுதிலே சோமசுந்தர பாரதியார் வெளியே சென்றிருந்தார். அவர் மனைவியும் குழந்தையும் வீட்டில் இருந்தனர், குழந்தைதான் பாரதியாரின் தாடி மீசை உடைகளைக் கண்டு "பைத்தியம், பைத்தியம்" என்று அலறிக் கொண்டு ஓடி வந்தது.

சற்று நேரம் கழிந்தது கவிஞர் "காக்கை குருவி எங்கள் சாதி" என்ற பாடலை முழங்கினார். வேறு சில பாடல்களும் பாடினார் ஆ ஆ! அந்த இசை வெள்ளத்தில் எல்லோரும் மூழ்கி இன்புற்றனர். உடையில் அழுக்கு கிழிசல் உண்டு: உடலில் மெலிவும் களைப்பும் உண்டு. ஆனால் உள்ளத்தில் இருந்த ஊக்கமும் உணர்ச்சியும்? அவை பாரதியாருக்கே உரிமையானவை.

சோமசுந்தர பாரதியார், வீட்டுக்குள் கால்வைக்கு முன்னமே பாரதியார் தம் வீட்டுக்கு வந்திருப்பதை அறிந்து கொண்டார். அவர் என்ன பாரதியாரின் 'மணிக்குரலை' அறியாதவரா?

'பாரதி' என்று சொல்லிக் கொண்டு உணர்ச்சி மிக்கவராகக் கட்டித் தழுவினார். இன்பக் கண்ணீர் சொரிந்தார். பின், பாரதியார் கட்டியிருந்த கந்தலாடையை நோக்கினார். அடுத்த நொடியிலே - அந்தோ! சோமசுந்தரரின் எஃகு போன்ற வலிய உள்ளமும் நெகிழ்ச்சியடைந்தது: கண்ணீர்த் துளியும் வழிந்தது. "நாட்டுப் பணிக்காகத் தன்னை ஒப்படைத்து விட்ட இந்த நல்லோன் நிலைமை

இப்படியா இருக்க வேண்டும்? கோடி கோடியாக வெகுமதி பெற வேண்டிய பாடல்களைப் பாடும் இப்பாவலன் ஒரு பஞ்சையாகவா இருக்க வேண்டும்? அன்னைத் தமிழகமே, நீ உன்னை அழகு செய்ய வந்த புலமை மகனை இந்நிலைமையிலா விட வேண்டும்?" என்று உருகினார். உடனே, பட்டு வேட்டியும், பட்டுத் துண்டும் கொண்டு வந்து உரிமையாக ஏற்பட்ட உள்ளன்பால் தந்தார். எல்லோரும் பாரதியாருக்கு உடை தந்து விட முடியுமா?

"உன்னிடம் உடை வேண்டும் என்று எவன் கேட்டான்? இரப்பு வாங்கிக் கட்டும் இந்தப் பட்டாடைக்கு என் கிழிசலாடை கோடி கோடி கோடி தரம் மேல்; சே! இந்தா உன் உடை!" என்று முகத்திலேயே வீசி எறிந்து விட்டாலும் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை. பாரதியாரின் உணர்ச்சி அத்தகையது.

சோமசுந்தரருடன் சற்று நேரம் அளவளாவிப் பேசி விட்டு, பாரதியார் உலாவி வரச் சென்றார். உலாவிவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். அவர் தோளிலே கிடந்த சரிகைக் கரைத்துண்டைக் காணவில்லை. "என்ன பாரதி! துண்டு எங்கே?" என்று கேட்டார் சோமசுந்தர பாரதியார். "ஓ, அதுவா! இங்கே வா" என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே சாலை வழியே சென்றார். அங்கே படுத்துக் கிடந்த பிச்சைக்காரன் ஒருவன் மேல் தாம் தந்த துண்டு போர்த்தப்பட்டிருக்கக் கண்டார்.

சோமசுந்தரர் ஒன்றும் சொல்லவில்லை. பாரதியை நோக்கினார்; பாரதியார் சொன்னார் :

"மானத்தை மறைப்பதற்கு வேண்டிய கந்தலாடையும் இன்றி எத்தனையோ பேர்கள் வாழ்ந்து கொண்டிருக்க, நான் மட்டும் பட்டாடை கட்ட வேண்டுமா?" பாரதியாரின் இச் சொல் முழ ஆடை கட்டிய முனிவர் காந்தியாரை நினைவூட்டவில்லையா?

சற்று நேரத்திற்கு முன் பாரதியார் நிலைமை எவ்வாறு இருந்தது? அந்தக் கந்தலாடை தானே அவருக்கும் உரிமை? பேரன்பால் பெற்ற பட்டாடையைப் பேணிக் காத்துக் கொள்ள எண்ணம் இருந்ததா? ஈவும் இரக்கமும் உள்ள உள்ளம் அடுத்த பொழுதைப் பற்றியோ தன்னைப் பற்றியோ எண்ணிப் பார்க்கத் தவறி விடுகின்றது அன்றோ!

சோமசுந்தரர் நெக்குருக எண்ணினார். அஃது இதுதான்; "பாரதி நன்றாக இருக்க வேண்டுமானால் இப்பாருலகம் முழுமையும் நன்றாக இருந்தாக வேண்டும். எந்த மூலையில் வெந்துயர் இருந்தாலும் பாரதியாரால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது! துயரற்ற உலகம் வருமா?"

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற்(கு) ஒல்கார்
கடனறி காட்சி யவர்"

(பிறர்க்கு உதவுதலைத் தம் கடமை என்று அறியக் கூடிய அறிவினை உடையவர் உதவுவதற்கு முடியாத நிலையிலும் உதவி செய்வதில் தளர்ச்சி யடையார்)

☆ ☆ ☆

# 13. ஊரும் பேரும்

ஒரு பெருங்காடு. அக்காட்டிலே ஒரு புலவர் நடந்து சென்றார். அவரைத் தொடர்ந்து புலவர்கள் சிலர் சென்றனர், வழியோ கரடு முரடான காட்டுப் பகுதி: மலையடிவாரம்; மலையுச்சி. தொலைவும் மிக அதிகம். நடந்தவர்கள் அனைவரும் களைத்துப் போயினர். 'உட்கார்ந்து ஓய்வெடுத்தாக வேண்டும்' என்று சோர்ந்து விட்டனர்.

பெரிய பலாமரம் ஒன்றைக் கண்ட புலவர்கள் அதன் தண்ணிய நிழலிலே உட்கார்ந்தனர். வழிநடைக் களைப்பும் வயிற்றுப் பசியும் சோர் வினை உண்டாக்கி அயர்ந்து விடச் செய்தன. உட்கார்ந்து சாய்ந்த வண்ணமே கண்ணுறக்கமும் கொண்டு விட்டனர்.

வீரன் ஒருவன் ஓடி வந்தான். அவன் வலக்கையிலே வில் இருந்தது; இடக்கையிலே கூரிய

அம்பு இருந்தது. தோளிலே அம்புக்கூடு தொங்கியது. காலிலே வீரர்கள் அணியும் கழலும், கையிலே கடகமும், மார்பிலே முத்தாரமும் கிடந்து அழகு செய்தன. அவனது வீரத் திறத்தையும், அஞ்சா உள்ளத்தையும் அவன் கண்களும், தோள்களும், மார்பும், ஏறு நடையும் வெளிக் காட்டின.

அயர்ந்திருந்த புலவர்கள் வீரன் வந்த ஒலி கேட்டு அரை குறையான பார்வையுடன் விழித்து நோக்கினர். அந்த வீரனைக் கண்ட பின்னரும் அவர்களால் உட்கார்ந்திருக்க இயலவில்லை. விரைந்து எழுந்திருப்பதற்குக் களைப்பு இடம் தரவில்லை. காலைப் பிடித்துக் கொண்டு மெதுவாக எழ முயன்றனர். வீரனோ புலவர்கள் களைப்பாக இருப்பதையும், எழுந்திருக்கவும் முடியாத சோர்வுடன் இருப்பதையும் அறிந்து கொண்டு "உட்காருங்கள், உட்காருங்கள்" என்று கையமர்த்தி விட்டு விரைந்து காட்டுக்குள் சென்றான்.

'வீரன் எங்கே போகிறான்' என்று புலவர்களுக்குத் தெரியாது. அவனது எழுச்சி மிக்க நடையினை நோக்கிக் கொண்டிருந்தனர். அந்த அழகனது உருவம் மறையும் வரை இமை கொட்டாமல் பார்த்து நின்றனர். சென்ற சிறிது நேரத்துள் வீரன் திரும்பினான். 'வாளா' திரும்பினானா? - கையிலே மான் தசை இருந்தது. புலவர்கள் பசியினைப் போக்குவதற்காகக் காட்டிலே புகுந்து வேட்டையாடினான். உடன் வந்த இளைஞர்களைப்

பற்றிக் கூடக் கவலைப் படாமல் தானே வேட்டை யாடி, தன் கையாலே தீமூட்டி, ஊனைப் பக்குவமாக வாட்டி, நல்ல ஊனாகத் தேர்ந்து கையிலே எடுத்துக் கொண்டு வந்து புலவர்களுக்கு அளித்தான். அவன் இவ்வாறு காலத்தால் உதவுவான் என்பதை அறியாத புலவர்கள் களிப்பும் வியப்பும் ஒருங்கே யடைந்தனர். பசி மிகுதியால் விரைந்து விரைந்து உண்டனர்; பசி போனது - ஆனால் நீர் வேட்கை உண்டாயிற்று. "புலவர்களே, இங்கே வாருங்கள்" என்று அழைத்துப் போய் ஒரு நீரூற்றைக் காட்டினான். உவப்புடன் நீரருந்திக் களைப்பு நீங்கினர்.

புலவர்களின் தலைவர் பெயர் வன்பரணர். அவர் கூறினார்: "வீர! நன்றி. நீ காலத்தாற் செய்த இந்த உதவிக்கு என்ன கைமாற்றுச் செய்ய வல்லோம்? 'நீ யார்?' என்பதைக் கூட அறிந்து கொள்ள முடியவில்லை: அதனை அறிவிக்கலாமா? எங்களுக்கு அதனை அறிந்து கொள்ள ஆவலாக உள்ளது."

"ஐயா, காட்டிலே இருக்கும் யான் தங்களுக்கு என்ன உதவியைச் செய்ய முடியும்? இந்த மாலையையும் கடகங்களையும் மறுக்காமல் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றான் வீரன். மாலை, கடகங்களைக் கழற்றி, புலவர்களிடம் தந்தான். வியப்புத் தாங்காத புலவர்கள் நாத் 'தழுதழுக்க' நன்றி கூறினர். அவன்பெயரை அறிந்து கொள்ளுதற்குத் துடித்தனர்

"அன்ப, உன்னைக் காணும் போது ஒரு வேந்தனாகவே தோன்றுகின்றது. உன் நாடு யாது? உன் பேர் யாது?"

- இது புலவர்களின் ஆவலுரை.

"புலவர் பெரும, இதோ வருகிறேன்; நீங்கள் செல்ல வேண்டுமல்லவா! நானும் செல்ல வேண்டும். என்னுடன் வந்தவர்கள் தேடிக் கொண்டு வந்தாலும் வந்து விடுவார்கள். தாங்கள் இப்பாதை வழியே செல்லலாம்" என்று வழி காட்டிவிட்டு வீரன் விரைந்து காட்டுக்குள் சென்றான். அவனுடன் வந்த வீரர்களுள் எவரையாவது கண்டாலும் வீரன் பெயரைக் கேட்டறியலாமே என்று தேடினர். ஆனால் அவர்களைக் காணவில்லை. அவர்களுள் எவரும் புலவர்களைக் கண்டு பிடித்துப் பேசி விடாதவாறு தந்திரமாக வீரன் அழைத்துக் கொண்டு போய் விட்டானே! பிறகு கண்டு பிடிப்பது எப்படி?

பேரையும் ஊரையும் கேட்டும் சொல்லாத அவ்வள்ளலின் அருங்குணம் புலவர்களைக் கவர்ந்தது. எப்படியும் தெரிந்துவிட ஆசை கொண்டனர். நமக்கு மட்டும் அவ்வாசை இல்லையா?

நான்கு காசு கொடுத்து விட்டு அதனை நான்கு இடங்களிலே எழுதிவைக்கும் 'வள்ளல்கள்' மிகுந்த இக்காலத்திலே, பேரும் ஊரும் சொல்லாமல் பெருங்

கொடை புரிந்த செயல் வியப்புக் குரியதல்லவா! கேட்டும் கொடுக்காதோர் பலர்: கேட்டுக் கொடுப்போர் சிலர்: கேளாமல் கொடுப்போர் மிகச்சிலர். பேரும் ஊரும் சொல்லாமலும், கேளாமலும் கொடுப்போர் அரியர் - மிக அரியர்! அரிய செயல் செய்த அவ்வள்ளலின் பெயரை அறிய, புலவர் வழிகளிலெல்லாம் கேட்டுக் கேட்டுச் சலித்தனர்: வாயும் அலுத்தனர்.

ஒருவன் சொன்னான்.

"தோட்டி மலைத் தலைவனான கண்டீரக் கோப் பெருநள்ளி அவன்."

"வள்ளல் நள்ளி! நீ வாழ்க" என்று புலவர்கள், வாழ்த்திக் கொண்டு அவன் தந்த பொருளால் இன்பமாக வாழ்ந்தனர். நள்ளியின் கொடை பயன் கருதாக் கொடை! மழை போன்ற கொடை.

"கைமாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்(டு)
என்னாற்றுங் கொல்லோ உலகு."

☆ ☆ ☆

# 14. முத்தும் முத்தும்

பன்னிரண்டு வயது கூட ஆகாத ஓர் இளைஞர் இருந்தார். அவர் ஒரு கணக்கரிடம் எழுத்து வேலை பார்த்து வந்தார். அவருக்கு மாதச் சம்பளம் - முப்பது நாட்களும் முயன்று எழுதினால் சம்பளம் - ரூபாய் ஒன்று!

சம்பளம் குறைவு என்றாலும் இளைஞர் தம் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தார். எதனையும் ஆழ்ந்து கவனித்துச் செய்யும் இளைஞரது வேலைத் திறம் கணக்கரைக் கவர்ந்தது. இளைஞர்மேல் அன்பு கொள்ளுமாறும் செய்தது. ஆனால் வேலைத் திறமோ அன்போ சம்பளத்தை ஒன்றும் கூட்டி விடவில்லை!

இளைஞர் கணக்கரிடம் வேலைபார்த்து வரும் போது, ஒரு தாசில்தாருடைய உறவு ஏற்பட்டது.

அவர் திருவாரூரில் இருந்தார். அவரை நம் இளைஞர் அடிக்கடி சென்று கண்டு பேசியும், அவர் மகிழுமாறு பணிகள் செய்தும் வந்தார். அதனால் இளைஞர் தாசில்தாரது அன்பரானார்.

ஒருநாள் தாசில்தாரைப் பார்ப்பதற்காகச் செல்வர் ஒருவர் வந்தார். "ஐயா, யான் வெளி யூருக்குச் சென்று வரவேண்டிய தேவை உள்ளது. வரவும் நாள்கள் பிடிக்கும், நிலத் தீர்வைப் பணம் கட்ட வேண்டியதுள்ளது. கணக்கர் ஊரில் இல்லை. தாங்கள் பணத்தை வாங்கிக் கொண்டால் உதவியாக இருக்கும்" என்றார்.

தாசில்தார் அவர் தரும் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்! எவ்வளவு பெற்றுக் கொள்வது? தாசில்தாருக்கு இவ்வளவு ரூபா என்று தெரியாது: செல்வருக்கும் தெரியாது. கணக்கர் ஊரில் இல்லை. ஆனால், அக்கணக்கரிடம் வேலை பார்க்கும் இளைஞர் - நம் இளைஞர் - தாசில்தாரின் அருகில் இருந்தார். "எவ்வளவு தொகை என்று உனக்குத் தெரியுமா?" என்னும் குறிப்புடன் இளைஞரைப் பார்த்தார் தாசில்தார்.

"ஐம்பது அறுபது இடங்களில் நிலம் வைத்திருந்த அச்செல்வரது கணக்கை இளைஞர் எப்படி மனத்தில் வைத்திருக்க முடியும்?" என்ற திகைப்பும் தாசில்தாருக்கு இல்லாமல் இல்லை. ஆனால் இளைஞர் முகமோ 'அதனைக் கூறமுடியும்' என்பது போல் மலர்ந்து விளங்கியது. சிறிதுநேரம்

கணக்கினை மனத்துள் கூட்டிச் சேர்த்து "இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து ரூபா, எட்டணா, ஒன்பது காசு" என்று கூறினார். செல்வருக்கு வியப்புத் தாழவில்லை. ஏனென்றால் இதற்கு முன்னும் ஏறக்குறைய இவ்வளவு கட்டி வந்ததாக அவர் நினைவு! தமக்குரிய வரிப்பணம் இவ்வளவு என்று தாமே அறியக் கூடாத நிலைமையில் இருக்கும்போது 'ஒரு ரூபாச் சம்பள இளைஞர்' தெளிவும் திருத்தமுமாகக் கூறியது வியப்பாக இருக்காதா?

தாசில்தார் இளைஞரைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து இருந்தார். இவ்வளவு நினைவாற்றலும் நுண்ணறிவும் உடைய இச்சிறுவன் எதிர் காலத்தில் முன்னுக்கு வரத் தக்கவனே என்று எண்ணினார்.

அவர் சிந்தனை கலையுமாறு செல்வர் கூறினார்: "ஐயா, கணக்கு ஏறக்குறையச் சரியாகவே இருக்குமென்று கருதுகிறேன். இப்பொழுது இவன் சொல்லிய தொகையைத் தங்களிடம் கட்டி விடுகிறேன். கூடுதல் குறைதல் இருக்குமானால் சரிபார்த்துக் கொள்வோம்" என்று பணத்தைக் கட்டிவிட்டுப் புறப்பட்டார்.

தாசில்தாருக்கு, இளைஞர் முன்னேற்றத்திற்கு ஏதேனும் வழிவகை செய்ய வேண்டும் என்னும் எண்ணம் அரும்பியது. இவ்வேளையிலே மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது.

அடுத்திருந்த ஓர் ஊர்க் குளம் உடைந்து பெருஞ் சேதமாகி விட்டது. ஊரார், தாசில்தாரிடம் உதவி வேண்டி ஓடி வந்தனர். சேதம் எவ்வளவு என்று கணக்குப் பார்க்க வேண்டியதுடன், உடைப்பினை அடைக்க எவ்வளவு செலவு ஆகும் என்றும் கணக்கு எடுக்க வேண்டியது தேவை ஆகிவிட்டது. அதற்காகத் தம் அலுவலகத்திற்கு ஆள் அனுப்பி எவரேனும் எழுத்தர் இருந்தால் அழைத்து வருமாறு ஏற்பாடு செய்தார். அது காலைப் பொழுதாக இருந்த காரணத்தால் அங்கு எவரும் வந்திருக்கவில்லை. ஆனால் தற்செயலாக ஒரு விளம்பரத்தினைப் படித்துக் கொண்டு அங்கு நின்றார் நம் இளைஞர். அவர், அலுவலகத்திற்கு வந்த ஆள் வழியாகச் செய்தியினை அறிந்து கொண்டு தாசில்தாரிடம் சென்றார். தாம் கணக்கு எடுத்துக் கொண்டு வருவதாகக் கூறி, உடைந்த குளத்திற்குச் சென்று கணக்கெடுத்துக் கொண்டு வந்தார். தாசில்தாரின் அனுபவம் இளைஞர் கணக்குச் சரியாக இருக்கக் கூடும் என்பதை உறுதி செய்தது. இருந்தாலும் தெளிவாக்க விரும்பினார். அலுவலகத் தலைமை எழுத்தர் வந்தவுடன் அவரை அனுப்பிக் கணக்கு எடுத்து வருமாறு பணித்தார். அவர் கணித்து வந்த கணக்கும் இளைஞர் குறித்திருந்த கணக்கும் சரியாக இருந்தமையைக் கண்ட தாசில்தார் காலம் நீடிக்காது இப்பையன் முன்னேற்றத்திற்கு உதவி செய்ய வேண்டும்" என்று முடிவு கொண்டார்.

தொடக்கப் படிப்புடன் இருந்த இளைஞர் உயர் நிலைப்பள்ளியிலும் கல்லூரியிலும் கற்றார். முதல்

மாணவராகவே எல்லா வகுப்புகளும் தேறினார். மாநிலம் முழுவதற்கும் ஏற்படுத்தியிருந்த கட்டுரைப் போட்டி ஒன்றிலே முதன்மையாக வெற்றியடைந்து "ஐந்நூறு ரூபா" பரிசு பெற்றார். இவர் படித்து வந்த பள்ளியில் இருந்த ஆசிரியர்களும், மேல் அதிகாரிகளும் பெரிதும் பாராட்டிச் சிறப்பித்தனர்.

இளைஞர் முதலில் மாநிலக் கல்லூரியில் ஓர் ஆசிரியரராகச் சென்றார்: விரைவில் கல்வி அதிகாரியானார். பின் வழக்கறிஞர்களுக்கென இருந்த தேர்வில் முதல்வராக வெற்றியடைந்தார். அதனால் மாவட்ட முன்சீப், துணைக் கலெக்டர், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என்னும் உயர் பதவிகளைச் சிறப்புடன் நடத்தினார்.


உயர்மன்ற நீதிபதியாக வந்த முதல் இந்தியா நம் இளைஞரே என்றால் நம் இளைஞரின் சிறப்புத்தான் என்னே! ஒரு ரூபாய் எழுத்து வேலை பார்த்த இளைஞர், இடையறாத முயற்சியால் உயர் நீதிமன்ற நீதிபதியாக வருவது எளிய செயலா? எல்லோர் வாழ்விலும் நடக்கக் கூடியதா? கொழுந்து விட்டெரியும் முயற்சி நம் இளைஞரிடம் இருந்தது. அது வறுமை, பிணி, எதிர்ப்பு ஆய இருட் படலங்களை இருந்த இடம் தெரியாமல் ஓட்டியது. இல்லையேல் உயர்நீதிமன்றத்தின் முகப்பில் இவ்விளைஞருக்குப் 'பளிக்குச் சிலை' நிறுத்தி வைப்பார்களா?

ஓ! ஓ! இளைஞர் பெயரைச் சொல்லவில்லையோ? அவர் தாம் வீட்டிலே விளக்கு வெளிச்சம் இல்லாது தெரு விளக்கிலே படித்து முயற்சியால் முன்னுக்கு வந்த சர். தி. முத்துசாமி ஐயர்! கடல் தந்த முத்தா இளைஞர் முத்து? கடல் தராமுத்து அல்லவா!

ஆமாம்: மறந்து விட்டோமே, முத்துசாமியைக் கடல் தரா முத்து ஆக்கிய தாசில்தார் பெயர் என்ன? நன்றி மறக்கலாமா? அவரும் ஒரு கடல் தரா முத்துதான்! அவர் போல் எத்தனை அதிகாரிகள் உண்டு? அவர் பெயர் முத்துசாமி நாயகர்! வாழ்க கடல்தரா முத்துகள் என்று வாழ்த்தத் தோன்றவில்லையா?

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

☆ ☆ ☆



# 15. கல்யானை

வான் வறண்டாலும் தான் வறளாத நீர் வளம் உடையது காவிரி. சோலைகளைப் பெருக்கிச் செல்வதால் காவிரி என்றும், தேனொழுகும் சோலைகளை மிகக்கொண்டுள்ள படியால் காவேரி என்றும் (வேரி = தேன்) பெயர் பெற்ற பெருமை காவிரிக்கு உண்டு.

ஆற்றுப் பெருக்கால், வரப்பு உயர்வதும், வரப்பு உயர்வதால் நீருயர்வதும் நீருயர்வதால் நெல்லுயர் வதும், நெல்லுயர்வதால் குடி உயர்வதும், குடி உயர்வதால் கோல் உயர்வதும் இயற்கை அல்லவா!

சோழ நாட்டின் வளங் கண்டு, அதனை அண்டை நாட்டினரும், அயல் நாட்டினரும் பன்முறை கைப்பற்ற எண்ணியது உண்டு! படை

கொண்டு வந்ததும் உண்டு! ஆற்றாமல் தோற்று ஓடியதும் உண்டு: ஆட்சி நிலைக்க விட்டதும் உண்டு!

வேற்றவர்களை அல்லாமல் வேந்தர் பரம்பரையினருள்ளும் "யான் ஆள வேண்டும்: அவன் என்ன ஆள்வது? என்னளவு அவனுக்கு உரிமை உண்டா? உரம் உண்டா? உயர்வு உண்டா?" என்று கிளர்ந்து எழுந்தவர்களும் கேடு சூழ்ந்தவர்களும் பலர் பலர்.

இத்தகைய பிணக்குமிக்க ஆட்சிப் பொறுப் பேற்றிருந்த ஆண்மையால் பிறரை அடக்கி வைத்திருந்த வேந்தன் 'திடுமென' இறந்து விட்டான் என்றால், அவன் இறப்பை எப்பொழுது எப்பொழுது என்று உற்றார் உறவினர் எதிர் நோக்கியிருந்து ஆட்சியைக் கவர்ந்து கொள்ளத் திட்டமிட்டிருந்தனர் என்றால், இவ்வேளையிலே பச்சிளம் குழந்தை யொன்று பாராளும் உரிமையில் இருக்கிறது என்றால், அதன் நிலைமையாதாகும்?

எங்கு நோக்கினும் பகைமை: எங்கு நோக்கினும் எதிர்ப்பு: எங்கு நோக்கினும் தீமை: ஏச்சு - பேச்சு: ஆனாலும் இளைஞன் ஊக்கம் இழந்துவிடவில்லை: ஒரே ஒருவராகத் துணைநின்ற மாமனும் கைவிட வில்லை!

இளைஞன் இருக்கின்றான் கோட்டைக்குள்: எதிரிகள் இருக்கின்றனர் கோட்டையின் உள்ளும் புறமும்: கட்டுக்காவல் இவ்வளவென்று இல்லை:

அழிவு வேலை எவ்வளவு செய்தாலும் முளையிலே கிள்ளி எறிகின்றான் சூழ்ச்சித் திறமும் ஊக்கமும் படைத்த மாமன்! சுற்றப் பகைவர் வஞ்சம் என்னாம்?'

பகைவர் உள்ளம் வெதும்பியது: மூக்கில் புகை கப்பியது: கண்கள் நெருப்பாயின: இளைஞனை இன்று அழித்தே தீர்வோம்: ஆட்சியைப் பற்றியே ஆவோம்: என்று முனைந்தனர்: எரி நெருப்பு எடுத்தனர்: இளைஞன் இருக்கும் கோட்டைக்குள் மூட்டினர்.

பற்றிய தீ சுற்றிப் படர்ந்தது: பண்புடையோர் உள்ளம் பதைத்தது: பகைவர் உள்ளம் மகிழ்ந்தது: தாய்மார் உள்ளம் தவித்தது: குழந்தைகள் உள்ளம் திகைத்தது: மாமன் உள்ளம் மருகியது: உற்ற துணைவர் உள்ளம் உருகியது. நம் இளைஞன் உள்ளமோ எழுச்சி கொண்டது.

சிந்திக்கப் பொழுது இன்றிச் செயலாற்றத் தொடங்கினான் இளைய வீரன். மீனுக்கு நீத்தும், புலிக்குப் பாய்ச்சலும், சிங்கத்திற்கு முழக்கும், யானைக்குப் பீடு நடையும் பயிற்றுவித்தவர் எவர்? பழக்குவித்தவர் எவர்? இவை இயற்கை என்றால் எனக்கும் கோட்டையைத் தாவுவதும், கேட்டைத் தகர்ப்பதும், நாட்டைக் காப்பதும் இயற்கை! கோட்டை என்ன கோட்டை! எனக்கு எளிய வேட்டையே என நொடிப்போது எண்ணி, மீன்போல் கிளர்ந்து, சிங்கம்போல் செம்மாந்து,

புலி போல் பாய்ந்து, யானைபோல் நடந்து கோட்டையை விட்டு வெளியேறினான்!

'இளைஞன் இறந்தான்' என இன்புற்று மங்கலப் பறை முழக்கும் பகைவர் இடையே, இளைஞன் வெளியேறி முடிசூடிக் கொண்டுள்ளான் என்ற சொல் சாப்பறை கொட்டியதாயிற்று சாவாமல் சவம் ஆயினார் போல ஆயினர் சுற்றப் பகைவர்கள்!

இளைஞனுக்கு ஆற்றல் மிகுதி: அதனினும் மிகுதி அவனுக்கு வாய்த்த அரிய துணை: ஆற்றலும் அரிய துணையும் இருந்தால் போதுமா? பகைவரும் புகழ, வசை கூறுவோரும் வாழ்த்தி வணங்க செயல் திறம் அல்லது வினையாண்மை வேண்டுமல்லவா! நம் இளைஞனிடம் மிகுதியாக அமைந்திருந்தது வினைநலம்'

இளைஞன் காளையானான்: ஆற்றல் பேராற்றல் ஆயிற்று: வினைத்திறம் விஞ்சியது: காவிரிக் கரையிலே உலவிய அவனுக்கு, கரை புரண்டு செல்லும் வெள்ளத்தைக் கண்ட அவனுக்கு வாய்க்கால், வரப்பு, வயல் அழிக்கப்பட்டு வெள்ளத் தால் கெடுவதையும் துளிநீரும் இன்றி வறண்டு வானோக்கி ஒருபால் காடு கிடப்பதையும் நோக்கிய அவனுக்கு, நூலொடு நுண்ணறிவும் வாய்த்த அவனுக்கு ஓரெண்ணம் உண்டாயிற்று! காவிரிக்குக் கல்லால் அணைகட்ட வேண்டும் என்பதே அது.

சொல்லால் அணை கட்டினான் சோழன்! கல்லால் அணை கட்டினர் தொழிலாளர்; நெல்லால் அணை கட்டினர் உழவர்; அல்லல் பறந்தது; அமைதி நிறைந்தது; சோழநாடு சோழவள நாடு ஆயிற்று; சோழன் வளவன் ஆனான்; காவிரி பொன்யாயிற்று!

சோழவளநாடு சோறுடைத்து என உண்மை உரைக்கவும், யானை வயலுள் புகுந்தால் நெற்பயிர் அதனை மறைக்கும் என உயர்வு உரைக்கவும், ஒரு பெண் யானை படுக்கும் இடம் ஏழு ஆண் யானை களுக்கு உணவு தந்துகாக்கும் எனப் புனைந்துரைக் கவும் ஆயிற்று சோழநாடு.

'வாழ்க சோழன்' என்று வாழ்த்துவோர்களின் ஓங்கிய குரலுக்கு இடையே, 'ஒழிக' என்போர் உதட்டு அசைவும் இல்லையாயிற்று. பற்றியெரிக்கும் பசியுண்டானால் அன்றோ சுற்றியிருப்போர் தூண்டுதலுக்கு மக்கள் செவிசாய்ப்பர்? பொன் மலையாய் நென்மலை காட்சி தரக்கண்டோர் பொய்ப்பழியோர் மொழிக்கு இசைவாரோ?

சோழநாட்டில் ஆணை செலுத்திய வேந்தன் இமயம் வரை தன் கொடி பறக்க விரும்பினான். தீர எண்ணித் தெளிந்த முடிவு கொண்டு, எண்ணிய வண்ணமே செய்து முடிக்கும் திண்மை பெற்றவனுக்கு முடியாத செயலென ஒன்றுண்டா? இமயப் பெருமலையில் சோழன் புலிக்கொடி வீறுடன் பறந்தது; வெற்றிக் களிப்போடு மீண்டான் வேந்தன்.

குறுநில மன்னரும், பெருநில வேந்தரும் சோழன் அடிக்கீழ்ப் பணிந்து நின்றனர்; அடி பட்டதற்கு அடையாளமாக அரும்பொருள்கள் குவித்தனர்; கலைஞர்கள் ஆடிப்பாடி இன்புறுத் தினர்; கவிஞர்கள் இறவா உடலாம் எழிற்கவிகள் பாடிப் பெருமை செய்தனர்; வடநாட்டு வெற்றியால் பெற்ற உவப்பினும், தன்னாட்டுப் பாராட்டுக்கு மகிழ்ந்தான் சோழன்; பொன்னி நதி போல் பொருள் வழங்கினான். ஒரே ஒரு புலவன் 301 அடிகளைக் கொண்ட 'பட்டினப்பாலை' பாடிய புலவன் - கடியலூர் உருத்திரங் கண்ணன் அந்நூலுக் காகப் பெற்ற பரிசில் பதினாறு நூறாயிரம் பொன்! ஏனையோர் பெற்ற பரிசு? எவர் கண்டார்?

இரண்டாயிரம் ஆண்டுகளின் முன் வாழ்ந்த அவன், மக்கள் வாழ வாழ்ந்த அவன், இன்றும் வாழ்கின்றான் நல்லோர் உளத்தும், காவிரிக் கல்லணையில் நிற்கும் கல்யானை மீதும்!

கல்யானை மீதிருக்கும் அக் காவல யானை யாவன்? அவனே கரிகாலன்! வாய்ந்த துணை நலமும், வளர்ந்த வினைநலமும் ஒருங்கெய்திய சோழன் கரிகாலன் புகழ் வாழ்க!

**"துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்**
**வேண்டிய எல்லாம் தரும்."**

☆ ☆ ☆

# 16. நிறுத்து போரை

மாறி மாறி ஒருவரை ஒருவர் தாக்க நிற்கின்றார்கள்: யார்? யார்?

தந்தையும், மைந்தரும்!

ஏன்?

தாய் நெஞ்சிற்குக் காரணம் உண்டு: பேய் நெஞ்சிற்குக் காரணம் உண்டோ?

தீய பழக்கம், தீயோர் உறவு, தெளிந்த அறிவின்மை, தூண்டுதலைக் கேட்கும் மனம், துடிக்கும் உணர்வு - இவை போதாவா பகைத்து நின்று பழி செய்ய!

நல்லவன் தந்தை - வல்லமையும் அவனுக்கு மிகவுண்டு: அறநெறிக்கு அஞ்சுபவன் அவன்:

மறப்போருக்கு அஞ்சாமையும் அவனுக்கு இயல்பு; அமைதி வாழ்வை விரும்புபவன் அவன் - அடக்கு முறைக்கோ அழிசெயலுக்கோ உடன்பட்டறியான்: உடன்படுவோரையும் விடான்; கொற்றவன்தான் அவன் - என்றாலும் குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாகக் காப்பான் - குறை கண்டானோ கொதிப் படைவான்!

இத்தகைய நற்பண்புத் தந்தையும், தீமையே வடிவான மைந்தரும் போர்க்களத்தில் நிற்கின்றனர். யானையும், குதிரையும், தேரும் காலாளும் தத்தம் கடமைகளை ஆற்றுதற்குக் காத்திருக்கின்றன. ஏவிவிட்டோர் இறுமாந்திருக்க ஏனையோர் ஏங்கியிருக்க, ஆணையை எதிர் நோக்கிக்கொண்டு இருக்கின்றன இருதிறப் படைகளும்.

“வயலிலே நெல்லைப் பயிரிட வேண்டா: கட்டிக் காவல் புரிய வேண்டா; களை எடுக்கவும் வேண்டா: நீர் பாய்ச்சவும் வேண்டாம்; புல்லைப் பயிரிட வேண்டும்: பொருந்தும் உரம் இட வேண்டும்: பொழுதும் சென்று போற்றிக் காத்தல் வேண்டும் என்று கூறுவது புன்மை யல்லவா! இத்தகு புல்லியர்களும் உள்ளனரே நாட்டில்; அவர்களுக்குத் துணை நிற்பவர்களும் இருக்கின்றனரே” என்று அறிவுடையோர் வருந்துகின்றனர்.

மலருள் புகுந்து இசைபாடித் தேனெடுக்கும் ஈயும் உண்டு; மலத்துள் புகுந்து பண்ணிசைத்து

உண்ணும் ஈயும் உண்டு: மக்களுக்கு ஊட்டந்தரும் தேன் தருவது முன்னதன் பணி: தீராப் பிணி தந்து மக்களை அழிப்பது பின்னதன் வேலை; இத்தகைய இருவகை ஈக்களையும் போல்பவர்கள் உலகில் உளர் அல்லவா! முதல் வகையைச் சேர்ந்தவன் முன்னவனாம் தந்தை; இரண்டாம் வகையைச் சேர்ந்தவர் பின்னவராம் மக்கள்!

"பன்றியின் முன் மணியைப் போட்டால் பயன்படுமா? என்பது பழமொழி. நல்லுரை கேட்டு நடப்பது நன்னெஞ்சிற்கு இயலும்: ஆயின் புன்னெஞ்சிற்குப் பொருந்துமா? தந்தை நிற்கும் இடம் நாடிச் சென்றார் அருள் மிக்க புலவர் ஒருவர்: புல்லாற்றூரில் பிறந்தவர்: எயிற்றியனார் என்னும் பெயரினர்.

'வேந்தே' என்றார் விரைந்து சென்ற புலவர். புலமையாளர்களை வரவேற்றுப் போற்றுதலில் இணையற்ற அவ்வேந்தனாம் தந்தை போர்ச் சினத்தை ஒரு பக்கம் போக்கிப் புன்முறுவல் மிகுந்து நல்லுரை கூறி வரவேற்றான். கைவேலைக் கடிதில் எறிந்து மெய் தழுவி இன்புற்றான்.

"புலவர் பேசினார்: அரசே! அன்புகனிய அகம் குழைய நீ எடுத்து மகிழ்ந்த மக்கள் இவர்: ஆசைப் பெருக்கால் உச்சி முகர்ந்து உவகை உரைக்க வளர்ந்தவர் இவர்; கன்னல் பாகோ, கனிச்சாறோ, கவின் தேனோ, களி மதுவோ என்று மயங்க மழலை பொழிந்தவர் இவர்; மலரிலாச் சோலையும்,

மதியிலா வானமும், நீராடுந் துறையிலாக் குளமும், மணமிலா மாலையும் போன்றது புதல்வரைப் பெறாத வாழ்வு எனத் தேர்ந்த உன்னால் "அன்பே' ஆருயிரே! கண்ணே' கண்ணின் மணியே'" என்றெல்லாம் போற்றப் பெற்றவர் இவர்' ஆனால் இன்றோ எதிர் எதிர் நின்று போரிட உள்ளீர்' தந்தை 'உரிமையை அணுவும் நினைத்தாரல்லர் இவர் நீயும் மக்களென உளங் கொண்டாயில்லை. உன்னை எதிர்த்து நிற்குமாறு அவர்களது பண்பும் உறவும் பட்டறிவும் துணைபோகலாம்: உன் பண்பும் உறவும் பட்டறிவும் அவர்களை எதிர்க்கத் துணைபோகலாமா?

"சோழர் குடியில் வந்த உங்களுக்கு ஒரொரு கால் பாண்டியரும் சேரரும் பகைவராயிருந்துள்ளர் ஆனால் இன்று நீ போரிட முனைந்து நிற்பது சேரரிடமோ பாண்டியரிடமோ இல்லை. சோழரிடம் - இல்லை - உன் மக்களிடம் ?

வெற்றியும் தோல்வியும் இப்பொழுதே தெரியுமா? நீ வெற்றி பெறுவாய் என்றே முடிவு கொள்வோம். வென்று, ஆண்டு பின் யாருக்கு இவ்வாட்சியைக் கொடுப்பாய்' பிறந்தவர் யாவரும் நிலையாய் இருந்துவிட முடியாதே ! அப்படிச் சமயத்தில் வேறொருவரிடம் நாட்டை ஒப்படைப் பாயா? அது அறம் ஆகுமா? அன்றி உன் குடிக்கு ஏற்ற தகுதிக்குத்தான் பொருந்துமா? உன் மக்களோ, மற்றவர்களோ ஏற்றுக் கொண்டு அமைதியாக இருப்பார்களா? இது நிற்க.

"நீ ஒரு வேளை இவர்களிடம் தோற்று விட்டால் அய்யோ . . . அவ்விழிவை - பழிநிலையை - என்னால் நினைக்கவும் முடியவில்லை. தலை காட்டாது திரியும் பகைவர்களும் நிமிர்ந்து நடப்பார்களே! எள்ளி நகையாடுவார்களே! இகழ்ந்து உரைப்பார்களே! இவற்றை எண்ணினால் உனக்கு என்ன தோன்றுகின்றது? போரை விடுவது அன்றிப் புகழ்வழி யாதேனும் உண்டோ? மண்ணுலகப் புகழும் விண்ணுலகப் புகழும் எய்த ஒரே ஒரு வழி போர் விடுப்பதே!" என்றார்.

சோழன் நல்லதே நினைந்து, நல்லதே செய்பவன் அல்லவா! உணர்ச்சியால் வழிதவறிச் சென்றாலும் உயர்ந்த பெரியோர் உரையை முடிமேற் கொண்டு ஒழுகுபவன். ஆதலால் பெருமையும் நன்மையும் தாராத போரை நிறுத்தினான். இன்றும் புகழுடன் வாழ்கிறான். அச் சோழன் பெயரென்ன? கோப்பெருஞ் சோழன் என்பது அவன் பெயர்! ஆனால் மக்களென அறிகிறோமே அன்றி அவர்கள் பெயரும் அறியோம்!

"என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை"

(புகழும் நன்மையும் தராத செயல்களை எக்காலத்தும் நீக்கி விடுதல் வேண்டும்)

☆ ☆ ☆

# 17. எவர் வாழ்வோர் ?

கோபம் மிக்க தந்தை தன் மகனைத் தூக்கிக் கீழே போட்டு மிதிக்கிறான்; நையப் புடைக்கிறான்; கண்கள் சிவக்க, நெஞ்சம் கொதிக்க, நாடி துடிக்கத் திட்டுகிறான்: கண்டவர்கள் மைந்தன் நிலைமைக் காகப் பரிவு காட்டுகின்றனர்: தந்தையின் கொடுஞ் செயலுக்காக வருந்துகின்றனர்: வாய்விட்டுப் பேசித் திட்டுகின்றனர்: ஓடிப் போய்ப் பிடிக்கின்றனர்: நிறுத்துகின்றனர்! ஆனால் ஒரு காவல் நிலையத்துள் (போலீசு நிலையம்) இம்மாதிரி ஒரு செயல் நடந்தால் பொதுமக்கள் சென்று தடுக்க முனைவது இல்லை: முனைவதும் குற்றமாகி விடும்!

விட்டிலைச் சிறுவர்கள் பிடித்து, சிறகினைப் பிடுங்கி, வாலிலே நூல் கட்டி இழுத்து வதைப்பதைக் கண்டால் இரக்கமுடைய எவரும் "தம்பி இந்த

விளையாட்டு வேண்டாமடா" என்று சொல்லத் தவறார்; சிறுவனோடு விளையாடும் ஓர் இளைய சிறுவனும் கூடச் சிறிய அளவில் இரக்கம் படைத்திருப்பின் தடுப்பான்! ஆனால் வேந்தன் ஒருவனைக் காரணம் இருந்தோ இல்லாமலோ - அறியாமல் கூடச் செய்யலாம் அல்லவா! - கழுவேற்று கிறான்; தூக்கில் போடுகிறான்; கைகால்களை வாங்குகிறான்; தலையை வெட்டுகிறான்; அங்கே போய் "அரசே! அமைச்சே! இச்செயல் இழிவுடையது; பழியுடையது; இத்தகு கொடுஞ் செயலை விடுக" என்று உரத்தோடு உரைக்க முன் வருவோர் அரியுர்.

பாஞ்சாலி சபதம் என்னும் காவிய நூலில் பாரதியார் 'புலம்புவார்' மாந்தர் நிலைமையை நினைத்து!

பாஞ்சாலியைத் துச்சாதனன் அரச அவைக்கு, இழுத்துச் செல்கிறான் தெருவழியே! வழி நெடுக மக்கள் திரள்கின்றனர். 'ஆ! என்ன கொடுமை!' என்று வாயோடு வாயாக முணு முணுக்கின்றனர். வாய்விட்டு உரத்துப் பேசி, ஒன்று கூடி, கூந்தலைப் பிடித்து நீசன் இழுத்துச் செல்வதைத் தடுத்து, அவளை அந்தப்புரத்திற்கு அனுப்பி, அவனைத் தரையோடு தரையாக மிதிக்க வலிமையற்ற இவர்கள் கதறி அழுதும், கண்ணீர் சிந்தியும் என்ன பயன்? வீரமிலா நாய்கள்! பேடிப் பதர்கள்! என்று வருந்துகின்றார்.

அரசவையில் நிறுத்தி இழிவு செய்ய முனைந்த போதும், அரசர், அமைச்சர், அறிவோர், வீரர் எவரெவரோ இருக்கின்றார்; இருந்தும், தீங்கு தடுக்கும் திறமிலேம் என்று தலைதாழ்ந்து இருக்கின்றனர்.

பாரதியார் பெண்மை வாயால் - பாஞ்சாலி வாயால் - கேட்கின்றார்.

"மங்கியஓர் புன்மதியாய் மன்னர் சபைதனிலே
என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள் சொல்லுகிறாய்
நின்னை எவரும் நிறுத்தடா என்பதிலர்
என்செய்கேன்"

சிறியவர் செய்யும் சிறு பிழைகளைத் தடுக்க ஓடி ஓடி வரும் மக்கள், பெரியவர் செய்யும் தவறுகளைத் தடுக்க முன்வர அஞ்சுகின்றனர் அல்லவா! தவறு செய்தவர் எவராயினும் தட்டிக் கேட்கும் உரிமை, உரம், உறுதி எந் நாட்டில் ஏற்படுகிறதோ அந்நாடு தான் உரிமை நாடு; நாகரிக நாடு; உயர்ந்த நாடு! திருத்தி வாழுதற்கும் வழிவகை செய்யும் நாடு!

இத்தகைய சீரிய நாடுகளுள் தலையாய ஒன்றாகத் திகழ்ந்தது தமிழகம், சங்க காலத்தில்! அதற்குச் சான்றுகள் மிகவுள; ஒன்று காண்போம்!

ஆடி வரும் மணி; அசைந்து வரும் யானை; கூடி வரும் கூட்டம்; குமைந்து வரும் உள்ளம்; தேடி வரும் சிறுவர்; திகைத்து நிற்கும் நெஞ்சம்; வீர மிகு வேந்தன்;

வெற்றி மிகு படைகள்: அழுது நிற்கும் மாதர்: அமைந்து நிற்கும் ஏவலர்! - ஒரு கொலைக் களத்தின் சிலச் சில பக்கங்களில் காணப் பெறும் காட்சிகள்!

'ஏவு யானையை' - அரசன் குரல்! 'எங்கே' - அப்பாவி மக்கள் சிலர் குரல்! 'ஐயோ - ஐயையோ' - பொறுக்க மாட்டா இளமனத்தின் கதறல்! "இந்தப் பிள்ளைகளை மிதித்துக் கொல்லவா?" - ஏக்க மிக்கோர் உரை! 'இந்தச் சிறுவர்கள் என்ன கொடுமை செய்தார்கள்: பாவம் ஏதும் அறியாதவர்கள் அல்லவா! பெருங் கொடுமை - அழுகையால் நீதி பெற எண்ணினோர் அவல உரை! "யாராவது துணிந்து தடுக்க மாட்டார்களா? இப்படிக் கொடுமை நடக்க விடலாமா?-" தாம் மனிதர் என்பதைத் தாமே நம்பாமல் எவருக்காவது மனிதப் பதவி தர முயல்வோர் இரங்கல் உரை! "ஐயையோ! காரியின் மைந்தர் அல்லவா! வள்ளல் காரியின் மக்களுக்கா இக் கதி நேர வேண்டும்? - எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் விரிவு இல்லாமல் 'காரி'க்காகத்தான் கண்ணீர் வடிப்பவர் - இரக்கத்தை ஒரு பாதை வழியே போக விட்டவர்கள் - அதிலும் துணிவு இல்லாதவர்கள்: நைவுரை! - களத்தில் எழுந்த ஒலிகள் இவை !

இவர்கள் ஒலி வேந்தனுக்குக் கேட்கவில்லை: கேட்க வேண்டுமென்று இவர்கள் கூறவும் இல்லை: கேட்டுவிட்டால் வேந்தன் என்ன நினைப்பானோ என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களும் இல்லாமல்

இல்லை! மனத்தை அடக்க மாட்டாமல் ஏதோ புலம்பிவிட்டார்கள்; அவ்வளவே! அரசன் துணிந்து தன் செயலை ஆற்றத் தொடங்கினான். "பாகனே! யானையைச் செலுத்து; இச் சிறுவர்களை மிதித்துக் கொல்லச் செய்" என்று ஆணை பிறப்பித்தான்.

என்ன காரணம் என்று அறியாமல் திகைத்து நின்ற சிறுவர் இருவரும், யானையின் மணியோசை கேட்டு, அதன் மலை போன்ற நடை கண்டு, தங்களை நோக்கி வரும் நிலை கண்டு, மருண்டு மயங்கினர்! பாகன் யானையை விரைந்து செலுத்து கிறான்: பாராள்வோன் ஏவுகிறான்: கூட்டத்தை ஊடுருவிக் கொண்டு ஒரு புலவர் வந்தார்.

நிலைமை அவருக்கு வேதனை தந்தது: அத்னை நினைத்துப் பார்க்கவே கொடிதாக இருந்தது. அதனால் 'வேந்தனே நிறுத்து' என்று கட்டளை யிட்டார்! கட்டளைதான், அது! "யான் கூறுவதைக் கேள்! அதன் பின்னும் யானையை ஏவ வேண்டு மாயின் அதுவே உன் விருப்பு ஆயின் ஏவு! அதுவரை நிறுத்து" என்றார்.

கூட்டத்தினர் பார்வையெலாம் ஒரு முகமாகப் புலவர் மேலும், புவியாள்வோன் மேலும் மாறி மாறிப் பாய்ந்து நின்றன! அமைதி குடி கொண்டது! யானை தன் தலையசைப்பை விடவில்லை! அதன் காற் கீழ்ப்பட இருந்த சிறுவர்களும் மயக்கம் நீங்கினர் இல்லை!

"அரசே! புறா ஒன்றைக் காப்பதற்காகத் தன்னுடலை அரிந்து தந்த பெருமைக்குரிய செம்பியன் என்னும் சிபி உன் முன்னோன்! அவன் பரம்பரையில் வந்த உன்னை அருளாளன் என்பேன். ஆனால் உன் செயல் உன் பரம்பரைக்கோ, உனக்கோ பொருந்துவதா? பெருமை தருவதா? இல்லவே இல்லை என்பதை நீ அறிவாய்?


"இவர்கள்தான் கொடியவர்களா? தீமை செய்வதையே தொழிலாகக் கொண்ட குடிவழி வந்தவர்களா? இரப்பவர்க்கு இல்லை என்று கூறாமல், இருப்பது அனைத்தும் தந்து புலவர் தோழனாய், இரவலர் புரவலனாய், கலைஞர் காவலனாய், பாணர் புதையலாய் விளங்கிய வள்ளல் காரியின் மைந்தர்கள் அல்லரோ! இவர்கள் மேல் உனக்கு உண்டான சினந்தான் என்ன? உன் புலமைக்கும், புகழுக்கும் இது தகும் என்றால் உன் விருப்பம்போல் செய்" என்றார்!

புலவர் துணிவை மக்கள் பாராட்டினர். மன்னன் மதித்தான்: அறம் உணர்ந்தான்: அருள் கொண்டான்: இளைஞர்களோ உயிர் கொண்டார்: புலவரோ புகழ் கொண்டார்! தமிழகம் தனக்கு நேர இருந்த களங்கம் ஒன்றைத் துடைத்துக் கொண்டது! இலக்கியம் - புற நானூறு - அருமையான பாமணி ஒன்றைப் பெற்றுப் பொலிவு கொண்டது! குறள் வாழ்வு ஓர் இலக்கியம் கொண்டது.

"ஒஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்."

(மேலும் மேலும் உயர்வோம் என்று விரும்பி முயலுகின்றவர் தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயலைச் செய்யாமல் விடுதல் வேண்டும்.)

☆ ☆ ☆



# 18. எப்படி வாழ்வது ?

100 கிலோவுக்குக் குறையாமல் 150 கிலோவைத் தொடும் அளவில் உடல்: ஏந்தித் திரியும் கை: இரந்து கூறும் வாய்: இல்லையென்றால் ஏசும் நா: வாங்கிய பின் நன்றி பாராட்டாத நெஞ்சம் - இப்படி எத்தனை எத்தனை பேர்களைத் தெருக்களிலே காண்கிறோம்!

அதே பொழுதில்: ஒட்டிய வயிறு: ஒடுங்கிய கன்னம்: இளைத்த உடல்: ஏங்கிய மூச்சு: உலர்ந்த நா: மயங்கிய கண்: தள்ளாடும் கால்: தவித்த நடை: கடிய பாரம்: கொடிய வெயில் - கரடு முரடான பாதை- வயிற்றுத் தீப்பிணியை மானத்தோடு தணிக்க வேண்டி வண்டியிழுத்துத் திரியும் வறிய - ஆனால் மானம் பேணும் - ஒரு கூட்டத்தையும் தெருக்களிலே காண்கிறோம்!

இன்னொரு பக்கம்: இடிந்த வீடு மடிந்த உள்ளம்: கால் போகி, நார் கழன்ற கட்டிலாகக் காட்சியளிக்கும் கூரை: பழைய சாக்கு விரிப்பு: கந்தல் தலையணை: மூச்சுவிடவும் முணக்கம்: எலும்புருக்கி நோயின் இளைப்பு: இடிந்த அடுப்பு: முரிந்து போன பானை: குப்பைக் கீரை: உப்பில்லா அவியல் - இவ்வளவும் காட்சிப் பொருளாய் இலங்க மானத்தைப் போற்றி - பிச்சைக்காரராகித் தெருவில் நடை பிணமாகத் திரிவதினும் உண்மைப் பிணம் ஆவது மேல் எனக் கருதி கதவு இல்லாக் குடிசைக்குள் கிடக்கும் வெம்பிய உள்ளங்கள்!

வாழ வழியிருந்தும் - தோட்டம் துரவு, நன்செய் புன்செய்: ஆடு மாடு: செல்வம் சீர்: பட்டம் பதவி: வாழ்வு வளம்: வெற்றி விருது: ஒட்டு உறவு: சுற்றம் சூழல் எல்லாம் இருந்தும் - உள்ள செல்வத்தைக் கணக்கெடுக்க ஒரு நூறு பேர் சேர்ந்தாலும் ஓராண்டு முயன்றாலும் இவ்வளவென்று தெளிய முடியாத சொத்து - இருந்தாலும் ஊர் ஊராக, நாடு நாடாக இருந்தாலும் மேலும் மேலும் வஞ்சத் தாலும், கள்ள வணிகத்தாலும் கையூட்டாலும் (இலஞ்சம்) பொருளைப் பெருக்கித் திரட்டித் திரியும் நெஞ்சமிலார்!

இவற்றை எண்ணிப் பார்க்கும் நெஞ்சத்தே 'மானம்' எது என்பது புலனாகாமல் போகாது. உயிருக்காக மானத்தை விடுவதா? மானத்திற்காக

உயிரை விடுவதா? என்னும் இரு வேறு வினாக் களுக்குக் கிடைக்கும் விடையைக் கொண்டதே மானத்தின் வாழ்வும்; தாழ்வும். 'மானம் அழிந்தபின் வாழாமை இனிது' என்பார் மொழியும், மானத்தை விட்டும் உயிர் வாழ நினைவார் நினைவும் எண்ணிப் பார்க்கத் தக்கதேயாம்.

மானம் என்பது என்ன?

தன் நிலைமையில் தாழாமையும், தாழ்வு வந்தால் உயிர் வாழாமையுமே மானம்! இம்மானம் போற்றி ஒழுகப் பெறுகிறதா? போற்றுவோர் என்றும் போற்றித்தான் வாழ்கின்றனர். போற்றா தோர் என்றும் போற்றாதுதான் இழிகின்றனர்.

பசுவொன்று நீர் வேட்கையால் நடக்க மாட்டாமல் நடக்கின்றது; வழியிலே கிணற்றில் ஒருவர் நீரெடுக்கின்றார்; அவரிடைச் சென்று இப்பசுவிற்கு நீர் வேட்கை யுளது; அருள் கூர்ந்து நீர் தருக என்று கேட்டிரந்து நீர் ஏற்றுப் பசுவைக் காப்பதிலும், தன் முயற்சியால் நீர்கோலி, பசுவிற்கு அளிப்பது பெருமையானது; முயற்சிச் சிறப்பைக் காட்டுவது; அன்றி நீர் இரந்து நிற்பது நாவிற்கு இழிவு தருவது.

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்."

என்பது வள்ளுவம். இதனை வாழ்வில் கொள்வோர் எத்துணையர்?

நீர் வேட்கை மிகக் கொண்டுள்ளான் வேந்தன்: பகைவன் சிறைக் கோட்டத்துள் விலங்கு பூட்டப் பெற்று அடைக்கப் பெற்றுள்ளான்: வற்றா வளம் பெருகு ஆறுகள் அவன் நாட்டில் மிகவுண்டு! ஆனால் பகைவன் சிறையானபின் அவ்வாற்று நீர்ப் பெருக்கு கிட்டுமா?

பகைவன் தந்த உணவை வெறுத்தான்: நீரையும் மறுத்தான்: நாள்கள் சில சென்றன: தாங்க முடியா வேட்கை: தன்னை அறியாமலே கேட்டு விட்டான்:- "ஏவல! தண்ணீர் தா!"

ஏவலன், சிறைக்குள்ளிருக்கும் காவலன் சிறப்பினை அறிந்தவன் அல்லன். மற்றையோரைப் போலவே, தப்பாகக் கணக்குப் போட்டு விட்டான். பணிவும் இன்சொல்லும் இன்றி, எக்களித்த நடையோடு நீர் கொணர்ந்து தந்தான். ஏவலன் நிலைமையை எண்ணிப் பார்த்த காவலனுக்குத் தாங்க முடியா இழிவாகத் தெரிந்தது. மானங்கெட வாழ்ந்து பழகியவர்களுக்கு இயல்பாகிப் போகி யிருக்கும்: சிறிதும் தவறாது வாழ்ந்த அந்த அரசச் செம்மலுக்கு முடியவில்லை.

முன்னமே உயிரைப் போக்கிக் கொள்ளாது, நாய் போல விலங்கிடப் பெற்றுப் பகைவன் சிறைக் கோட்டத்துள் இருக்க நேர்ந்த இழிவை நினைத்தான்: இவ்விழிவினையும் தாங்கி 'நீர் வேண்டும்' என்று கேட்ட நீங்காப் பழியை நினைத்தான்: மதிப்பின்றித் தந்த தண்ணீரைப்

பெற்ற மாபெருந் தவற்றை நினைத்தான் - ஆ! ஆ! மானம் இழந்தேன்! என மயங்கினான்: மருண்டான்: இனியும் வாழ்வது இழிவு என முடிவு செய்தான்! என்ன செய்தான்? மானம் என்னும் வாள், உயிராம் மரத்தை வெட்ட வீழ்ந்தான்! இப்படி மானம் பேணுபவர் யார்? மானம் போற்றிய மன்னவன் என்று இந்த இரண்டு ஆயிரம் ஆண்டுகளாகச் சேரன் கணைக்காலிரும்பொறையைச் சொல்லி வருகின்றோம்! மானத்தின் சிறப்பையும் அருமை யையும் இது காட்டாதா?

“இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.”

(அசைவிலா அறிவை உடையவர் எத்தனைய் துயர்க்கு ஆட்பட்டாலும் இழிவான செயல் செய்யார்).

☆ ☆ ☆



# 19. மெய்மைப் பொய்

"மணிமுத்து! வெள்ளை வாங்கிக் கொண்டு வா. போனேன் வந்தேன் என்று இருக்க வேண்டும்! தெரிந்ததா?" என்று புட்டியையும் சில்லறையையும் தந்து அனுப்பினான் மூக்கன். சேவல் சண்டை பார்க்காமல் விட்டுச் செல்ல மணிமுத்துக்கு மனமில்லை. ஆனாலும், அப்பன் சொல்லைக் கேட்காவிட்டால் என்ன நடக்கும் என்பதையும் அறியாதவன் அல்லன் அவன். வேண்டா வெறுப்புடன் விரைந்து கடைக்குச் சென்றான் மணிமுத்து.

மூக்கன் குடும்பம் செல்வமான குடும்பமாகத் தான் இருந்தது. மூக்கன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டானோ இல்லையோ - தெருவில் நிற்க வேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டான். அவன் பாட்டனார், தந்தையார்

அரும்பாடு பட்டுத் தேடிவைத்திருந்த சொத்தை யெல்லாம் குடி, சூது ஆகியவற்றிலே தொலைத்தான். பொருளைத் தொலைத்ததுடன் உடலையும் கெடுத்துக் கொண்டான். நோய் நொம்பலம் இல்லாமல் வளர்ந்த மூக்கன், மெலிந்து எலும்புக் கூடாக மாறிவிட்டான். உடல் கெட்டபின் உள்ளம் கெடாமல் இருக்குமா? கண்ட கண்ட போக்கு களிலெல்லாம் போய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தேய்ந்து கொண்டு வந்தான். வறுமைத் துன்பமும், நோய்த் துயரும் அதிகரிக்க அதிகரிக்க இன்பவழி ஏதாவது கிடைக்கர்தா என்று தேடித் தேடித் திரிந்தான். இவ்வளவு கெட்டுப் போன உள்ளம் உடையவனுக்கு எது இன்பமாக இருக்கும்?

நல்லவர்களைப் பார்ப்பதோ, அவர்களோடு பேசுவதோ இன்பமாக இல்லை. இயற்கை வளம் வாய்ந்த இடங்களைப் பார்ப்பதோ இயற்கைக் காட்சிகளைக் காண்பதோ இன்பமாக இல்லை. புத்தகங்களையோ செய்தித் தாள்களையோ படிப்பது இன்பமாக இல்லை. எப்படி இருக்க முடியும்? காக்கைக்கு விருப்பமானது பிணம்தானே"

தீயவர்கள் சேர்க்கை, சூது, கள், சாராயக் குடிவகைகள் இவையே அவனுக்கு இன்பமாயின. எப்பொழுது பார்த்தாலும் இவற்றுள் ஒன்றில் ஈடுபடாமல் இருக்க அவனால் முடியாது. அப்படிப் பழகி விட்டான்.

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு."

என்னும் குறள் நெறி அவன் செவியில் விழ வாய்ப்பே இல்லை. அப்படியே விழுந்தாலும் அதனைச் சொல்லியவனைச் 'சும்மா' விடப்போவதுமில்லை. அவன் பரம்பரையையே சந்திக்கு இழுத்து விடுவான்.

ஒரு நாள் மணிமுத்து ஒருவன் தோட்டத்திற்குப் போய்த் தேங்காய்கள் சில பறித்தான். பறிக்கும் போது தோட்டக்காரன் கண்டு விட்டான். அவனுக்குக் கோபம் மிகுதியாயிற்று. தூரத்திலிருந்து வரும்போதே கத்தினான். பக்கத்தில் வந்தபோது மணிமுத்தைப் பார்த்ததும 'ஏன் திட்டினோம்' என்று பதறிப் போனான். மெதுவான குரலில் "மணிமுத்து, இறங்கு கீழே! இப்படியா செய்வது? ஆளில்லாத வேளையில் இப்படிக் காயை வெட்டுவது உனக்கே நன்றாக இருக்கிறதா? வா, உன் அப்பாவினிடமே கேட்கலாம்" என்று அழைத்துச் சென்றான். தோட்டக்காரன் நடந்து கொண்ட அளவு ஒருவன் பொறுமையாக நடந்திருக்க முடியாது. இத்தோட்டக்காரனும் மூக்கன் மகன் மணிமுத்து தவிர்த்து இன்னொருவனிடம் இப்படி நடந்திருப்பான் என்றும் எதிர்பார்க்க முடியாது.

மூக்கன் தோட்டக்காரனுக்கு என்ன பரிசு தந்தான்? "நீ திருட்டுப்பயல்; உன் அப்பன் திருட்டுப் பயல்; உன் பாட்டன் திருட்டுப்பயல்; உன்

பரம்பரையே கொள்ளைக் கூட்டம். ஒரு பயலிடம் யோக்கியதை உண்டா? தோட்டம் வைத்திருக்கிறா னாம் தோட்டம். இவன் ஒருவனுக்குத்தான் அதிசயமாகத் தோட்டம் இருப்பது போலே! ஏய், நீ பிச்சைக்காரப் பயல்; இந்தச் சின்னப்பயல் தெரியாமல் தேங்காயைப் பறித்ததற்குக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டு வந்து விட்டாயே - நீ செய்வதைச் செய்! அற்பனுக்கு வாழ்வு வ்ந்தால் இப்படித்தான்" என்றான். கூட்டம் திரண்டு விட்டது. கூடியவர்களும் "தோட்டக்காரன் இதனை இவ்வளவு பெரிது பண்ணியிருக்க வேண்டாம்" என்று ஒத்த முடிவு கூறினர். "தோட்டக்காரன் என்ன செய்வான்? வாயை மூடிக்கொண்டு போனான். இத்தகைய மூக்கனின் இல்லறம் எப்படி நயமாக நடந்திருக்கக் கூடும் என்று கற்பனை செய்து கண்டு கொண்டிருக்கலாம்.

புலிக் குகையிலே புள்ளிமான் குடியிருந்தது போலக் குடியிருந்தாள் காத்தாயி. புலி, சிங்கங் களுக்குக் கூட, கழுகு, பருந்துகளுக்குக் கூட தன் பெட்டை குட்டி குஞ்சு என்ற 'பாசம்' உண்டு. ஆனாலும் கூட மூக்கனைப் பொறுத்த அளவில் அது இல்லை என்றால் அந்த வாழ்வினை எப்படி யுரைப்பது? ஏதோ உயிரைப் போக்கிக் கொள்ளாமல் வாழ்ந்தாள். மணிமுத்தையும் பெற்றெடுத்தாள்.

மூக்கன் என்றோ ஒருநாள் அயலூர் ஒன்றிலே 'சேவற் சண்டை' நடப்பதைக் கண்டான். அது அவனை மிகவும் கவர்ந்து விட்டது. இரண்டு இரண்டு பேர்கள் எதிரெதிராக இருந்து, சேவல்களைப் போருக்கு அனுப்புவதும், அவற்றின் கால்களிலே கத்தியைக் கட்டி விடுவதும், ஒவ்வொரு முறையும் ஏவி வெறி யூட்டி விட்டுக் குத்துமாறு செய்வதும், தோற்று ஓடினால்கூட விடாது பிடித்து வைத்து மேலும் தாக்க விடுவதும், அது சிந்தக்கூடிய இரத்தத்தைக் காண்பதிலே களிப்புக் கொள்வதும், எதிரியின் சேவலை அடித்து வெற்றி இன்பம் கொள்வதும் மூக்கனைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. இக்காரியத்தைத் தன் ஊரிலேயும் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்தான். மூக்கன் நினைத்தால் அவன் ஊரில் நடத்த முடியாது போய்விடுமா? எத்தனை 'மூக்கர்கள்' முன் வரமாட்டார்கள்?

ஊர்ப்புறத்திருந்த ஆலந்தோப்பிலே சேவற் போர் நடந்தது. எவ்வளவோ நல்ல காரியங்களுக் கெல்லாம் பயன் பட்டு வந்த அந்த ஆலந்தோப்பு கோழிச் சண்டைக்கும் பயன் பட்டது. அது தொடங்கியபின் தோப்பின் களை கெட்டதும் அன்றி, ஊரின் களையும் கெட்டது. ஊரிலுள்ள மக்களின் மனங்களிலும் எத்தனை எத்தனையோ பகைமையும், வேற்றுமையும் பிணக்கும் ஏற்பட்டன. இவ்வளவையும் தலைமை நின்று நடத்தியவன் மூக்கன்தான்.

சேவற்போர் வெற்றி தராது என்றால் வலுச் சண்டை செய்தாவது வெற்றி தேடிவிடுவது அவன் வழக்கம். கைச் சண்டையோ, வாய்ச் சண்டையோ அதனைப் பற்றி அவனுக்குக் கவலையே இல்லை.

இப்படியே எவ்வளவு நாள்கள்தான் 'காட்டு ராசா'வாக ஆட்சி செய்ய முடியும்? மூக்கனுக்கும் எதிரி முளைத்தான். கடுவன் என்பவன் அவன். கடுவன் மூக்கன் சேவலை அடிக்கக்கூடிய அளவுக்கு வித விதச் சேவல்களைக் கொண்டு வந்தான். இனி மூக்கன் என்ன செய்வது?

மூக்கன் கடுவனை வெற்றி கொள்ள என்னென்ன வழிகள் உண்டோ அவ்வளவும் செய்தான். சேவலை ஊக்கப் படுத்தி ஏவினான். தன்னையும் ஊக்கப் படுத்த விரும்பிச் சீழ்க்கை அடித்தான்; புகை பிடித்தான். ஏதாவது குடித்தால் தான் 'ஊக்கம்' ஏற்படும் போல் அவனுக்கு இருந்தது. அதற்காகத்தான் மணிமுத்தைப் புட்டியுடன் கள்ளுக் கடைக்கு அனுப்பி வைத்தான்.

மணிமுத்து புட்டியுடன் விரைந்து ஓடி வந்தான். கொஞ்சம் பொறுக்கக் கூடாதா? "டே ஓடிவா; போனது எந்நேரம்! வருவது எந்நேரம்! வா இங்கே!" என்று கத்தினான். "இனி என்ன கிடைக்குமோ?" என்ற பயத்தில் ஓடிவந்த மணிமுத்து கல் காலை இடற, கள்ளிருந்த புட்டியையும் போட்டு

விழுந்தான். புட்டியும் உடைந்தது. கள்ளும் கொட்டித் தொலைந்தது. சேவற்போர்த் தோல்வியல் கடுப்புக் கொண்டிருந்த மூக்கனை இது கிளறி விட்டது. கோபம் கொந்தளித்துக் கிளம்பிற்று. இடுப்பில் இருந்த கத்தியினை எடுத்துக் கொண்டு மணிமுத்தினை நோக்கி ஓடினான். கூட்டமெல்லாம் சேவற்போரை விட்டுத் திகைத்தது. மூக்கனைத் தடுக்க எவருக்குத் துணிவுண்டு?

மணிமுத்து மருண்டோடும் மான்போல ஓடினான். வேங்கைப் புலிபோல வெருட்டிச் சென்றான் மூக்கன். ஓடும் விரைவில் எத்தனையோ இடங்களில் இடறியும் எழுந்தும் தாவியும் சென்றான் மணிமுத்து. ஆனால் மூக்கன் ஓரிடத்தில் உருண்டு விட்டான். உருண்டாலும் தொடர்ந்து செல்வதை விட்டானா? மணிமுத்துக்கு என்ன நேருமோ என்று அவனைப் பெற்றெடுத்த காத்தாயியும் ஓடிவந்தாள். “ஐயோ ஐயோ! வேண்டாம்: வேண்டாம்” என்னும் அவள் குரல் மூக்கன் செவியில் படவா செய்யும்?

மணிமுத்து இளைஞன் அல்லவா! சிட்டுப் போலப் பறந்து விட்டான். முடுக்கு, சந்து, பொந்து ஆகிய இடங்களிலெல்லாம் ஓடினான். ‘பயல் தப்பி விடுவான்,’ என்னும் எண்ணம் தாய்க்கு ஏற்பட்டாலும் பின் தொடர்ந்து ஓடினாள். மணிமுத்து ஒரு வீட்டில் நுழைந்தான். அவ்வீடு மெய்யப்பனுடையது

என்பதைக் காத்தாயி அறிவாள். ஆனால் மணிமுத்து, இன்னார் வீடு என்பதையும், வீட்டுக்காரன் குணம் இன்னது என்பதையும் அறியமாட்டானே!

"டே பையா! என்னடா ஓட்டம்? இங்கென்ன?" என்றான் மெய்யப்பன். நடுக்கத்துடன் நிலைமையைச் சொன்னான் மணிமுத்து. "டே, மெய்யப்பன் என்ற என் பெயரை நீ அறியமாட்டாயா? என்ன ஆனாலும் நான் பொய் சொல்லேன். உன் அப்பன் வந்து கேட்டால், நீ இங்கே மறைந்து இருக்கும் உண்மையைச் சொல்லி விடுவேன். வேண்டுமானால் நான் அவனைத் தேடிப் போய்ச் சொல்ல மாட்டேன், அவ்வளவுதான் உனக்காக நான் செய்ய முடியும்! அப்பப்பா!' உண்மையை மறைக்க என் கால் தடம் பட்டவனுக்கும் மனம் வராது: எப்படியோ உன் விருப்பம்போல் பார்த்துக்கொள்" என்றான்.

மணிமுத்துக்கு, மெய்யப்பன் சொல்லைத் தாங்க முடியவில்லை. 'சண்டாளன்' 'துரோகி' 'விளங்காதவன்' என்று திட்டிக்கொண்டே ஓடினான். காத்தாயி, மணிமுத்து மெய்யப்பன் வீட்டிலிருந்து ஓடுவதைக் கண்டாள். இப்படித் தான் நடந்திருக்கும் என்று உணர்ந்து கொண்டாள். மெய்யப்பன் மனிதன்தானா? அவன் மெய்யும் ஒரு மெய்யா? கொலைப்பாதகன் என்று ஏசிக்கொண்டு அவன் வீட்டிற்குப் பின்புறத்தில் நின்றாள்.

மணிமுத்து அடுத்த வீட்டுக்குள் ஒளிந்து கொண்டது அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. "நல்லவேளை, மணிமுத்து அடுத்த வீட்டில் ஒளிந்ததை மெய்யப்பன் பார்க்கவில்லை. பார்த்துத் தொலைத்தால் அதனையும் சொன்னாலும் சொல்லுவான். அவ்வளவு மெய்மைப் பித்தன் அவன்" என்று காத்தாயி இன்பமடைந்தாள்.

மூக்கன் ஓடிவந்தான். மெய்யப்பனிடம் கேட்டான்: "என் பயல் வந்தானா?"

"ஆ ஆ! உன் பயலா? இங்கு வந்து ஒளிந்தான். நான் உண்மையைச் சொல்லிவிடுவேன் என்றேன். இந்தப் பக்கமாக ஓடினான். ஒரு வேளை அடுத்த வீட்டில் ஒளிந்திருந்தாலும் ஒளிந்திருப்பான்" என்றான் மெய்யப்பன்.

'அடுத்த வீட்டில் ஒளிந்திருந்தாலும் இருப்பான்' என்னும் ஒலி காத்தாயிக்கும் கேட்டது. அடுத்த வீட்டுக்காரனுக்கும், மணிமுத்துக்கும் கேட்டது. "ஐயோ! இந்தச் சனியன் இங்கிருப்பதையும் காட்டிக் கொடுத்துவிடுவான் போல் இருக்கிறதே" என்று ஒரே வேளையில் அனைவரும் வருந்தினர், அதற்குள் மூக்கனும் வீட்டுக்குள் புகுந்து விட்டான்.

"என் பயல் இங்கு இருக்கிறானா?" என்றான் மூக்கன். "ஓர் ஒல்லிப் பயல்; மாநிறம்; கால் சட்டை மட்டும் போட்டவன்; காதில் கடுக்கன் அவன் தானே!" என்றான் வீட்டுக்காரன்.

"ஆம்: அவனேதான்! எங்கே இருக்கிறான்?" என்று துடிப்புடன் கேட்டான் மூக்கன்.

"இதோ பார் இந்தத் தெரு வழியே ஓடி, அந்தச் சந்திலே திரும்பினான். ஓடு: ஓடு: இப்பொழுதுதான் போனான். விரைந்து போனால் பிடித்து விடலாம்" என்றான் வீட்டுக்காரன்.

மூக்கன் ஓடினான். நெடுநேரம் தேடியலைந்தும் காணாதவனாகச் சோர்ந்து போய் வீட்டைச் சேர்ந்தான். இதற்குள் கோபமும் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது. கோபம் போனபின் தான் செய்தது என்னவோ போல் இருந்தது. கட்டிலில் குப்புற விழுந்து புரண்டான். உறங்கவா முடியும்? என்னென்னவோ உளறினான்.

மணிமுத்துவினிடம் நடந்ததை விளக்கமாகக் கேட்டறிந்தான் வீட்டுக்காரன். காலத்தால் உதவியதற்காகப் பெரிதும் மகிழ்ந்தான். "நீ இப்பொழுது வீட்டுக்குப் போகவேண்டாம்: இங்கேயே இரு. நானே மாலையில் உங்கள் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். அதற்குள் உன் அப்பா கோபம் தீர்ந்து விடும்" என்று கவலையை ஆற்றி, பசியையும் மாற்றி வைத்திருந்தான்.

மணிமுத்து அஞ்சிக் கொண்டு வேறெங்கும் போய்விடக் கூடாதே என்னும் கவலையில் நின்றிருந்த காத்தாயிக்கு வீட்டுக்காரன் சொல் தேன் போல் இருந்தது. இனிக் கவலையில்லை என்று வீட்டுக்குப் போகத் தொடங்கினாள்.

ஆனால், போகவிடாதவாறு ஒருவன் வந்தான் அவன், "ஐயா இருக்கிறாரா?" என்று மெய்யப்பன் மகனிடம் கேட்டான். மெய்யப்பன் அவன் வருவதைத் தொலைவிலே கண்டு ஒளிந்து கொண்டான். "அப்பா, வெளியில் போயிருக்கிறார்" என்று சொல்லிவிடுமாறும் மகனிடம் சொல்லி யிருந்தான். அப்படியே அவன் மகனும் சொல்லி விட்டான். மெய்யப்பன் மைந்தன் அல்லவா! அவன் சொல்லில் ஐயம் கொள்ளலாமா? தேடி வந்தவன் புறப்பட்டான். "கடன் வாங்கி நெடுநாள் ஆகின்றது; வந்த நேரமும் பார்க்க முடிவ்தில்லை; அவராகப் பணம் அனுப்புவதும் இல்லை; கடிதம் போட்டாலும் பதில் போடுவது இல்லை. எப்படித்தான் பணத்தை வாங்கப் போகின்றேனோ? முதலாளியிடம் நல்ல பெயர் எடுக்கப் போகின்றேனோ?" என்று சொல்லிக் கொண்டு நடந்தான். அவன் சொற்கள் காத்தாயி காதிலும் விழுந்தன. அவளால் தாங்க முடியவில்லை! அரிச்சந்திரன் போல நடிக்கும் அவன் நடிப்பை நினைத்து ஆவேசம் கொண்டாள். அவள் மகனைப் 'பொய் சொல்ல மாட்டேன்' என்று வெருட்டிவிட்டான் அல்லவா!

"மெய்யப்பா! வெளியே வா; ஊரை ஏமாற்றுவது எத்தனை நாள்களுக்கு?" என்னும் வாழ்த்துரையுடன் உள்ளே வந்தாள் காத்தாயி. மெய்யப்பன் "துரை, கணக்கப்பிள்ளை இருக்கி றாரா?" என்று மெதுவாக மகனிடம் கேட்டான். "அவர் போய் விட்டார்" என்று சொல்லிய

சொல்லை அடக்கிக் கொண்டு "கணக்கப் பிள்ளை போய் விட்டார்; ஆனால் காத்தாயி போகவில்லை. வெளியே வா: இதுவும் ஒரு பிழைப்பா? நீ கெட்ட கேட்டுக்கு மெய்யப்பன் எனும் பெயர் ஒரு கேடா? ஒருவனை ஒருவன் குத்திக் கொல்ல வரும் போது, உயிரைக் காப்பாற்றுவதற்காகக் கூடப் பொய் சொல்ல மாட்டேன் என்ற வாய், கடன்காரனைக் கண்டவுடன் ஒளிந்து கொண்டு பொய் சொல்லலாமோ? சோறுண்ட வாய்தானா இது? இரு; இந்தச் செய்தியைக் கணக்கப் பிள்ளைக்கும் ஊருக்கும் பரப்புகிறேன் பார். உன் ஒழுங்கு புலப்பட வேண்டாம்?" என்று துடிப்புடன் பேசினாள்.

மெய்யப்பன் வெட்கிப் போய், "காத்தாயி இந்த ஒரு வேளைக்கும் காப்பாற்று. நான் மெய்யன் தான். என் போதாக் காலம் இப்படிப் பொருள் முடை ஏற்பட்டு விட்டது. என்ன செய்வது!" என்றான். "பொருள் முடை உனக்குப் போதாக் காலம்! உயிரழிவு எங்கள் போதாக் காலம். எது பெரிது? உனக்காக - உன் கடன் தொல்லைக்காக - நீ பொய் சொல்லலாம். மற்றவர்கள் நன்மைக்காகப் பொய்யே சொல்ல மாட்டாய். இல்லையா? நீ உண்மையான மெய்யப்பன் என்றால் இந்தச் சிறுவனைக் காப்பாற்றுவதற்காகப் பொய் சொல்லி, கடன்காரனிடம் பொய் சொல்லாமல் இருந்திருக்க வேண்டும்; நீ தான் தன்னல மெய்யப்பன் ஆயிற்றே! அய்யோ, உன்னிடம் மெய்கிடந்து படும்பாடு

உனக்குத் தான் வெளிச்சம்!" என்றாள். அழாக் குறையுடன் நின்றான் மெய்யப்பன். காத்தாயி வெளியேறினாள்.

"இவனைத் தண்டோராப் போட்டுத் திரியத் தலைவிதியா? போய்த் தொலைகிறான்; என்றைக் காவது ஒரு நாள் உணர்வான்" என்று அமைதியாக வீட்டுக்குப் போனாள் காத்தாயி. வழியில் கணக்கனை கண்டாள். பேசிக் கொண்டே வீட்டுக்குப் போனாள்.

மூக்கன் புரண்டு புரண்டு படுத்தான். காத்தாயி அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. ஏதாவது கேட்பாள் என்று பலமுறை நினைத்தான் மூக்கன். காத்தாயிக்குத் தான் நடந்ததெல்லாம் தெரியுமே! அவனாகச் சொல்லட்டுமே என்று வாய் திறக்க வில்லை. நெடுநேரம் கழித்து மூக்கன் பேசினான்.

"காத்தாயி, பயல் இன்னும் வரவில்லையே! எங்கே போனானோ? அறிவில்லாமல் வெருட்டிச் சென்றேன்" என்று தலையில் அடித்துக் கொண்டான்.

"இப்படி வெறிபிடித்த தகப்பனுக்குப் பிள்ளை என்று இருப்பதைப் பார்க்கிலும் ஆற்றிலோ குளத்திலோ விழுந்து செத்திருந்தாலும் நல்லது தான். அந்தச் சின்னஞ் சிறியது செய்த காரியத்திற்கு வெட்டவும் குத்தவும் போவது தான் பெரியவன் செய்யும் காரியமா? என்ன கேடும் கெடுகிறான்"

என்று மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு பேசினாள் காத்தாயி.

"காத்தாயி, நீதானா இப்படிச் சொல்கிறாய்?"

"நீ வெருட்டிக்கொண்டு போன நேரத்திலே பயல் அகப்பட்டிருந்தால் விட்டு வைத்திருப்பாயா? நீ குத்திக் கொல்வதற்குப் பதில் ஆறோ குளமோ கொன்றிருந்தால் புண்ணியம் அல்லவா! கொஞ்ச நேரம் வரவில்லை என்று இந்தத் துடி துடிக்கிறாயே, அவன் உன் கத்தியால் குத்தப்பட்டு இங்கு சவமாகக் கிடந்தால் எப்படி இருக்கும் உனக்கு? ஒருகாலம் இல்லையானாலும் ஒருகாலமாவது அறிவு வர வேண்டாமா?" என்றாள்.

மூக்கன் கைகளால் தலையில் இடித்துக் கொண்டு கதறினான். "காத்தாயி, இப்பொழுது அறிவு வருகின்றது: வந்து என்ன செய்வது? பயலைக் காணோமே! நீயாவது தேடிப்பார்த்து வாயேன்" என்று கசிந்து அழுதான். கோபத்தின் விளைவு எப்படி ஆகும் என்பதை நினைத்து ஏங்கினான். இதற்கு முன் அவன் கோபத்தால் ஏற்பட்ட பொருள் கேடு, சிறை வாழ்வு, சீரழிவு ஆகிய எல்லாமும் கண்முன் நின்றன. தலையைச் சுவரில் மோதிக் கொண்டு விம்மினான். ஏறிச் சென்ற உணர்ச்சி இறங்கும்போது இப்படித் தான் கூத்து நடக்கின்றது! உணர்ச்சி ஏறும் போதுதானே அறிவு வேண்டும்? இறங்கியபின் இருந்தாலென்ன இல்லையானால் தான் என்ன?

"இப்பொழுது வரும் நல்லறிவாவது மறக்காமல் இருக்குமா?" என்றாள் காத்தாயி. "இனி இப்படிக் கெட்டுப் போக மாட்டேன்" என்றான் மூக்கன். அந்நேரம் மணிமுத்தைக் கூட்டிக் கொண்டு வந்தான் சென்னிமலை.

'மணிமுத்து' என்று சொல்லி ஓடிப்போய் அணைத்துத் தழுவினான். மூக்கன். "அறிவில்லாமல் செய்து விட்டேனடா! புத்தி கெட்டவன் நான். நல்ல வேளை ஓடி ஒளிந்து பிழைத்துக் கொண்டாய்" என்றான். இவன் உயிரைத் தந்தவன் சென்னி மலைதான் என்று நடந்ததைக் கூறினாள். காத்தாயி. சென்னிமலையை நன்றியறிதலுடன் நோக்கினான் மூக்கன்.

"குடிகெட வேண்டிய நேரம்: நல்ல வேளை: அப்படியாகிவிட வில்லை: இனிமேலாவது இந்த வெறி வேண்டாம்" என்றான் சென்னிமலை. காத்தாயி கையெடுத்துக் கும்பிட்டாள். பெற்றவள் அல்லவா!

"சென்னிமலை! கோபம் குடியைக் கெடுக்கும் என்பதை அறிந்து கொண்டேன். இனி ஒருநாளும் கோபப்பட மாட்டேன்: குடிக்க மாட்டேன்: சேவற் சண்டைக்குப் போக மாட்டேன்: சூதாட மாட்டேன்" - மூக்கன் உணர்ச்சியுடன் பேசினான்.

"ஆரம்பத்தில் இவற்றைக் கடைப்பிடிக்கச் சங்கடமாகக்கூட இருக்கும். ஆனால் பழக்கத்திற்குக்

கொண்டுவந்து விட்டால் எளிதாகி விடும்: நன்மையும் ஆகிவிடும்" என்று கூறிப் புறப்பட்டான் சென்னிமலை.

"ஐயா, பால் குடித்துப் போங்கள்" என்று ஒரு குவளையை நீட்டினாள் காத்தாயி.

"எனக்கா பால்" என்றான் சென்னிமலை.

"ஆம்: நீங்கள் என் வயிற்றில் பால் வார்த்தீர்கள். இந்தப் பாலையாவது சாப்பிட்டுப் போக வேண்டாமா?" என்று காத்தாயி சொல்லும் போது "ஆம் ஆம்! குடியுங்கள்" என்று வற்புறுத்தினான் மூக்கன்.

அப்பொழுது மெய்யப்பன் மிக விரைந்து வந்து சேர்ந்தான். "காத்தாயி, நீ கணக்கப் பிள்ளையிடம் சொல்லி ஊரெல்லாம் தூற்றி விடுவாய் என்று கடைக்கு ஓடினேன். அவன் "நான் இப்பொழுதுதான் உங்களைத் தேடி வந்தேன். வீட்டில் இல்லை என்று கேள்விப் பட்டுத் திரும்பினேன். வரும் வழியிலே காத்தாயி சொன்னாள். 'விரைவில் உங்கள் கணக்கை மெய்யப்பன் கொடுத்து விடுவார்: நீங்கள் கவலைப்பட வேண்டாம். இனித் தேடிவர வேண்டியிராது' என்றாள். அதற்குள் நீங்கள் பணத்துடன் வந்து விட்டீர்கள்: உங்கள் பையன் நான் வந்ததைச் சொன்னானா? என்று கேட்டான். உன்னை எப்படி வாழ்த்துவது என்று எனக்குத்

தெரியவில்லை. நீ அவனிடம் சொல்லியது பொய்தான். இருந்தாலும் அப்பொய்யால் கணக்கப் பிள்ளையும் முதலாளியும் எவ்வளவு மதித்தார்கள் என்பதை அறிந்து கொண்டேன். எனக்குள் இவ்வளவு 'நேர்மை' தோன்றி விட்டது என்பதை எப்படிச் சொல்வது? நல்ல உள்ளத்துடன் பிறர் நன்மை ஒன்றே எண்ணிச் சொல்லும் பொய் எவ்வளவு பயன் தருகிறது என்பதை அறிந்து கொண்டேன்" என்றான்.

காத்தாயி புன்முறுவலுடன் சொன்னாள். "உங்களைத் தூற்றுவதால் எனக்குக் கிடைப்பது என்ன? தூற்றிவிட்டால் அத்தூற்றுதல் மறைய எவ்வளவு காலம் ஆகும்? ஒருவன் வாழ்வில் எக்காரணம் கொண்டும் பொய் சொல்லக்கூடாது. கூடவே கூடாது. சொல்லக் கூடாத பொய்யைக் கூடப் பிறருக்குப் பெருநலம் வாய்க்குமானால் சொல்லலாம். தன் நலம் நாடிச் சொல்வதாக இருந்தால் எச்சிறு பொய்யையும் மன்னிக்கவே கூடாது."

"ஆம்; காத்தாயி சொல்வது பெரிய உண்மை. உயர்ந்த அறமுங்கூட! அறத்தினை அறுதியிட்டு அரிய நூல் செய்த திருவள்ளுவரும் இதனைக் குறிப்பிட்டுள்ளார் :

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

குற்றமற்ற நன்மையைப் பிறருக்குத் தருமானால் பொய் சொல்லுவதும் மெய்மைக்கு ஒப்பாகும்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்று கூறிய திருவள்ளுவரே இப்படிக் கூறினார் என்றால் காரணத்தோடு தானே இருக்க வேண்டும்" என்றான் சென்னிமலை.

"உண்மை உண்மை! நான் சொல்லிய மெய், பொய்யாயிற்று! நீ சொல்லிய பொய், மெய்யாயிற்று" என்றான் மெய்யப்பன்.

"மெய்யப்பா, உன் பேச்சு மெய்யப்பா!" என்றான் மூக்கன். வீடு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தது.

☆ ☆ ☆



# 20. பொய்யா விளக்கு

நீகிரோ ஒருவனின் உருவச்சிலையை ஓர் இளைஞர் கண்டார். அந்நீகிரோவின் தோற்றம் அவ்விளைஞர் உள்ளத்தை உருக்கியது. கண்ணீர் வடிக்க வைத்தது. இப்படியான தோற்றமும் வறுமையும் உடையவர்களும் உலகில் வாழ்கிறார்களா? அவர்களைக் காக்க எவரும் முன்வர வில்லையா? துயர்க்கும் வறுமைக்கும் எனவே பிறந்தாரும் உலகில் உளரா? எனப்பல நினைத்தார். அந்நினைவே கனவும் நனவும் ஆயின.

இளைஞர் பெயர் ஆல்பிரட் சுவைட்சர். அவர் தந்தையார் லூயி சுவைட்சர்; சமய போதகர். ஆல்பிரட்டின் இளகிய உள்ளம் சமய இயல் தத்துவ இயல் ஆகியவற்றை நாடியது. அக்கல்வியில்

சிறந்தார். திருக்கோயில் போதகர் பணியும் ஏற்றார். இசைத்துறையில் சிறந்தார்.

ஒரு விளம்பரத்தைச் சுவைட்சர் ஒருநாள் கண்டார் அதில்"ஆபிரிக்காவைச் சேர்ந்த காங்கோ பகுதியில் வாழும் மக்களுக்கு அருள் தொண்டு செய்ய ஆள் இல்லையா? இறைவன் தொண்டுக்குத் தம்மை ஒப்படைக்கும் அருளாளர்கள் உடனே வேண்டும்" என்று வேண்டுதல் இருக்கக் கண்டார். அவர் இளமையில் கண்ட நீகிரோ சிலை தட்டி எழுப்பியது. அத்தொண்க்குத் தம்மை ஆட்படுத்த அது தூண்டியது.

தொண்டு புரிவதற்காகவே மருத்துவக் கல்வி கற்றார். மருத்துவமனைப் பயிற்சியும் பெற்றார். கெலன் பிரசுகலோ எனும் ஒரு மங்கையை மணந்து அவரை மருத்துவச் செவிலியர் பயிற்சி பெறச் செய்தார். தம் இசைத் திறத்தால் தம் தொண்டுக்கு வேண்டும் தொகையைத் திரட்டினார்.

ஆபிரிக்கா சென்ற சுவைட்சர், கரடு முரடான மேடு பள்ளம் அமைந்த பாதையில் குதிரை வண்டி ஒன்றைக் கண்டார். அவ்வண்டி தாங்காத அளவுக்குப் பாதம் இருந்தது. அதனை இழுக்க மாட்டாமல் திணறிய குதிரைகளை நீக்கிரோக்கள் இருவர் வண்டியில் இருந்து கொண்டு கடுமையாக அடித்து ஓட்டப் பாடுபட்டனர். ஆனால் சுவைட்சர், அவர்களைக் கீழே இறங்கச் செய்து வண்டிக்குப் பின்னே இருந்து தள்ளினார். வண்டி எளிமையாய்ச்

சென்றது. தொண்டு செய்வார்க்கு இது தொண்டு அது தொண்டு என்பது இல்லையே!

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்."

என்பது 'வள்ளுவ வழிநடை" என்பதைக் கண்டோமே! அவர் போனதும், மருத்துவமனை உருவாக்க வேண்டும்! அது வரை மருத்துவத்தை நிறுத்த முடியாது! நீகிரோ மக்களோடு உறவாட அவர்கள் மொழியறிவு வேண்டும். ஒரு வீட்டை வாடகைக்கு அமைத்தார். மொழிபெயர்ப்பாளர் ஒருவரை வைத்துக் கொண்டார். மருத்துவப் பணியைத் தொடங்கிவிட்டார்.

மலேரியா காய்ச்சல், தூங்குநோய், குட்டம், யானைக்கால், நுரையிரல் கோளாறு, வயிற்றுக் கடுப்பு என்பவை அங்கிருந்த மிகுதியான நோய்கள். தம் பொருளையும், பொழுதையும் முழுமையாகச் செலவிட்டு உயிர்ப்பணி புரிந்தார் சுவைட்சர்.

**1914** இல் உலகப் போர் வந்தது. சுவைட்சர் செருமனி நாட்டவர் ஆபிரிக்கா பிரான்சு நாட்டைச் சேர்ந்தது. அங்கு செருமனியர் மருத்துவப் பணி செய்யவிடக்கூடாதே எனச் சிறைப்படுத்தப் பட்டார். தொண்டுள்ளத் துலக்கம் கொலையுள்ளச் சிறைக்கு ஆட்பட்டது. "அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை" என்பது மெய்ம்மறை. ஆனால், நோயர்க்கு

அல்லல் இல்லாமல் ஒழியுமா? அதற்கு அருளாளர் உள்ளம் உருகாமல் ஒழியுமா? மீண்டும் மருத்துவப் பணிக்கு விடுதலை செய்யப்பட்டார்.

கொண்டு சென்ற செல்வம் தீர்ந்தது. பிணி தீர்க்கும் பணிக்கு மேலும் செல்வம் தேவைப்பட்டது. ஐரோப்பாவுக்கு வந்து இசையாமலும் பொழிவாலும் செல்வம் திரட்டிக் கொண்டு மீண்டும் ஆபிரிக்காவுக்குச் சென்றார். சுவைட்சர் மருத்துவ மனை எழுப்பினார். மருத்துவர்களை உருவாக்கினார். பல்கால் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் திரட்டி மருத்துவமனை சிறக்க வழிகண்டார். போர் முடிவால் பிரான்சுத் தொடர்பு இல்லாமல் ஆயிற்று. அமெரிக்கத் தொடர்பு வளர்ந்தது. உதவியும் பெருகிற்று. அவர் புகழ் உலகப் புகழாக வளர்ந்தது. பிறர்க்கென வாழும் பெருந்தகை எனப் பாராட்டப் பட்டார். 1953 இல் அவர் பணிக்காக 'நோபல் பரிசு' கிடைத்தது. உள்ளத்தால் பொய்யாது ஒழுகியவர் சுவைட்சர். அவர் நூலறிவு, நுண்ணறிவு, பட்டறிவு ஆகியவற்றால் நூல்கள் பல படைத்தார். "பால் அடிகளின் பத்தி நெறி" "பாக் இசைவல்லார்" "நாகரிகத்தின் தத்துவம்" "கன்னிப் பெருங்காட்டின் கங்கில்" என்பவை அவற்றுள் சில.

நாகரிகத்தின் தத்துவம் என்பது, கிழக்கு, மேற்கு நாடுகளின் மெய்ப்பொருள் கொள்கை களைப் பற்றியது. அதில் அவர் திருக்குறளைப் பற்றி

எழுதியுள்ள கருத்துகள் உலகவர்க்கு உய்வு காட்டுவன. அவற்றுள் சில.

"உலகம் மாயை என்று கருதிய இந்தியக் கருத்துலகில் வள்ளுவர் தம் அறிவுச் சுடரால் நல்லொழுக்க நெறி பரவ விட்டுள்ளார்,

"பகவத் கீதை இறைவனிடத்தில் மனிதன் அன்பு செலுத்தவேண்டும் என்னும் குறிக்கோளைக் கூறுகிறது."

"மனிதன் மனிதனுக்குக் காட்டும் அன்பின் வழியாக இறைவனை அடையலாம் என்னும் கருத்து அந்நூலில் கூறப்படவில்லை. அன்பு, அருள் தொண்டாக மலர வேண்டும் என்று திருக்குறள் ஒன்றே வலியுறுத்திகிறது."


"மனுவின் நூலில் மாயை ஓங்கி நிற்கிறது: திருக்குறளில் அஃது ஒடுங்கிக் கிடக்கிறது. கைம்மாறு இல்லை எனினும் நல்ல செயலைச் செய்வதால் மனநிறைவு உண்டாம். ஆகவே நல்ல செயல் செய்ய வேண்டும் என்று திருக்குறள் அறிவுறுத்துகிறது."

"ஒழுக்கமே மனிதன் உயர்ந்த குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதை வள்ளுவர் துணிந்து வற்புறுத்தியுள்ளார். மனிதன் தனக்குத்தானே செய்ய வேண்டிய கடமைகளையும், பிறர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் பண்பாடும் அறிவும் தோன்றக் கூறியுள்ளார்.

"உலகத்தின் காணக் கிடைக்கும் இலக்கியப் பரப்புள் இத்தகைய உயர் அறிவுரை வேறு எந்நூலிலும் இல்லை. திருக்குறள் ஆசிரியர் வழியாகவே 'உலகம் உண்மை' என்னும் கொள்கை பரவி, பல சமயத் தலைவர்களால் மேற்கொள்ளப் பட்டன."

"வள்ளுவர் வழிநடை' 'வையக வழிநடை' என்பதற்கு 'ஆல்பிரட் சுவைட்சர் ஒளிவிளக்கேற்றி வைக்கிறார். "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்க." என்பது பொய்யா மொழி!

☆ ☆ ☆



# 21. தொண்டனாகுக

**வடிவேல் - பொன்னப்பன்**

வடி      *அண்ணே! வாங்க வாங்க.*

பொன் :   *ஆமாம் தம்பி! என்ன நலந்தானா?*

வடி      *நலமாக இருக்கிறேன் அண்ணே.*

பொன் :   *நல்லது; நம் வடக்கு வீட்டுப் பெரியவரைப் பார்க்க வந்தேன்; வரும் வழியில் உங்கள் நினைவு ஏற்பட்டது; பார்த்துப் போகலாமே என வந்தேன்.*

வடி      *நிரம்ப மகிழ்ச்சி!*

பொன் என்ன தம்பி, உங்களைப் பற்றி ஊரெல்லாம் ஒரே பேச்சாகக் கிடக்கிறது. கின்னென்னவோ செய்கிறீர்களாம்: என்னென்னவோ சொல்கிறீர்களாம் !

வடி அப்படி என்னண்ணே!

பொன் பெரியவர்களெல்லாம் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கச் சொல்கிறார்கள்: நீங்கள் சாலையைச் சுத்தமாக வைக்கச் சொல்கிறீர்களாம்.

வடி ஓகோ! அதைப் பற்றிச் சொல்கிறீர்களா? வேறு ஏதாவது சொல்லப் போகிறீர்களோ என்று நினைத்தேன்.

பொன் இப்படிச் சாலை சுத்தம் பற்றிச் சொல்வது எதற்காக தம்பி!

வடி சொல்கிறேன்.

பொன் இதென்ன தம்பி கண்ணாடிப் புட்டிக்குள் ?

வடி பாருங்கள்.. வாழைப் பழத்தோல்.

பொன் ஓகோ, சரிதாங்க! சாலையில் போடக் கூடாதென்று கண்ணாடிப் புட்டிக்குள் போட்டு வைத்திருக்கிறீர்கள்போல் இருக்கிறது. இப்படி எல்லாவற்றையும் கண்ணாடிப் புட்டிக்குள் போட்டு வைக்க முடியுமா? எல்லாராலும் முடியுமா?

வடி அப்படி இல்லை அண்ணே! நான் கண்ணாடிப் புட்டிக்குள் தோலைப் போட்டு வைத்திருப்பதற்குக் காரணம் உண்டு.

பொன் என்ன தம்பி, அப்படியானால் நான் சொல்கிறபடி இல்லை.

வடி இல்லை: நான் ஒருநாள் சாலை வழியே போய்க்கொண்டு இருந்தேன்: அவசரமான வேலை; ஓட்டமாகப் போனேன்: மருத்து வரை அழைத்து வரவேண்டிய அவசியம்...

பொன் : அப்பா நோயில் இருந்தார்களே... அப்பொழுதா?

வடி. ஆமாம் ஆமாம்! அப்பொழுதுதான்.

பொன் : சரி தம்பி, விரைவாக ஓடினீர்கள்...

வடி அந்த நேரத்தில் பாருங்கள்.

## காட்சி – 2

***(வடிவேல் ஓடிவந்து வாழைப்பழத் தோலால் வழுக்குண்டு கீழே விழுகிறான்.)***

வடி ஆ! ஐயோ! என்ன தொல்லை! சே! சே! இப்படியா வழுக்கும்? ஐயையோ... அவசரம் அல்லவா! கால் வரமாட்டேன் என்கிறதே ! அப்பாவுக்கு நோய்... மருந்து

வாங்கவும் மருத்துவரை அழைக்கவும் வந்த எனக்கு இப்பாடு... அப்பா!... அப்பா! ஐயோ!..

***(எழுந்திருக்க முயல்கிறான்; முடியவில்லை.)***

தேள் கடிக்கு மருந்து தேடப் போன இடத்திலே பாம்புக் கடிக்கு ஆளானது போல அல்லவா இருக்கிறது.ஐயோ! இடுப்புப் போய் விட்டதா? எந்தப் பாவிப்பயல் எனக்கு என்று இந்த வாழைப்பழத் தோலைப் போட்டானோ? அவன் விளங்குவானா? ஆ! ஐயோ! வலிக்கிறதே! சாலை என்றால் அவன் சொந்த நிலமா? எத்தனை பேர் போவார்கள் வருவார்கள்? சே சே! இந்த நாட்டில் இருக்கிறவர்களுக்குப் பொது நலம் கிடையவே கிடையாது;பொது அறிவுங்கிடையாது. ஐயோ! நான் என்ன செய்வேன்.

***(பலர் கூடிவிடுகின்றனர்.)***

ஒருவன் : டே! டே! இவனைப் பாரடா!

இன்னொரு: ஆ! ஆ! என்ன அழகு!

வேறொரு : விழு! விழு! விழவேண்டியதுதான்! இடுப்பு ஒடியவில்லை!

மற்றொரு : பாரடா துடிக்கிற துடிப்பை.

பிறிதொரு அதோ பார்! பல்லைக் கடிக்கிற கடிப்பை !

இன்னொரு ஏன் பார்த்து நடந்தால்....

வேறொரு அழமட்டும் தெரிகிறது, அறிவு இல்லை.

இரங்கும் ஒருவன் : அய்யோ பாவம்! பலமான அடிபோல் இருக்கிறது.

மற்றொருவன் : இரக்கம் மடைபிடுங்கிப் போகிறதைப் பாரு!

அப்பாவி ஒருவன் (அற்ப ஆவி) : படவேண்டிய நேரம்: யாரென்ன செய்வது: நடக்கிற படிதான் நடக்கும்.

ஒருவன் : ஓ! அவன் நடக்க வழிசெய்ய முடியுமானால் பாரும், வீணாய் ஏன் மூக்கைச் சீந்துகிறீர்!

அற்ப ஆவி ஒருவன்: பாருய்யா! பேசத்தெரிந்தவனை...

வடிவேல் : அட இரக்கம் கெட்டவர்களே! விழுந்து கிடக்கிறேன்: விலா வெடிக்கச் சிரித்து வேடிக்கை பார்க்கிறார்கள். என்னடா உலகம்? இந்த வாழைப்பழத்தோல் இவர்கள் காலில் பட்டிருந்தால்... அப்பா... அம்மா ... பட்டுச் சீரழிய வேண்டிய நேரம் அய்யோ ...

**(சாரணச் சிறுவர் இருவர் வருகின்றனர்.)**

ஒருவன் : ஏ! ஏ! அந்தச் சாலையில் பார்...

இன்னொருவன் : ஐயோ! ஓடு ஓடு எவனோ விழுந்து விட்டான்.

ஒருவன் : என்ன கிடந்ததோ . . .

இன்னொருவன் ஓடி வாப்பா! வா வா! சீக்கிரம்...
(இருவரும் வடிவேலைப் பிடிக்கின்றனர்)

வடி : ஐயையோ! எழுந்திருக்க முடியாது போலிருக்கிறதே !

சாரணர் இருவரும்: ஐயா . . . இருங்க . . எல்லாம் சரியாகிவிடும்.

ஒருவன் : சரி, மருத்துவ நிலையத்திற்குக் கொண்டு போகலாம்.

**(தூக்கிப் போகின்றனர்.)**

வடி: தம்பி, உங்களுக்குப்புண்ணியம்! சமயத்தில் காப்பாற்றினீர்கள். வடக்குத் தெரு வைரவன் வீடு எங்கள் வீடு! அங்கு என் அப்பா நோயோடு கிடக்கிறார்! அவரைத் தயை செய்து கவனித்தால் நல்லது; நான் அவருக்கு மருந்து வாங்க வந்தேன்.

சாரணர் : கவலைப்படாதீர்கள்! உடனே நாங்கள் அவரைக் கவனிக்கிறோம்.

வடி நல்லது தம்பி.

*(சாரணர் வைரவன் வீட்டுக்குச் சென்று திரும்பி வருகின்றனர்.)*

சாரணர்: அப்பா உடல் நன்றாக இருக்கிறது ஐயா.

வடி நலமாகி விட்டதா! என்னை காப்பாற்றி னீர்கள். என் தந்தைக்கும் உதவினீர்கள். நீங்கள் நன்றாக இருக்க வேண்டும். உங்களுக்கு என் வணக்கம்.

சாரணர்: வருகிறோம் அண்ணே! வந்து பார்க்கிறோம்

*(இருவரும் செல்கின்றனர்.)*

## காட்சி – 3

**மருத்துவமனை**

**வடிவேல் - முருகன்.**

வடி உங்களுக்கு என்னையா? காலில் கட்டு ...

முரு அதை ஏன் கேட்கிறீர்கள் நான் இந்த ஊருக்குப் புதியவன். இந்த ஊரில் நடுத்தெரு இருக்கிறதே, அது வெளிச்சம் கண்டு எத்தனை ஆண்டுகள் ஆயிற்றோ! அடேயப் பா! நெருக்கம் நெருக்கம்! வீட்டு நெருக் கத்திற்கு மேல் ஆட்கள் நெருக்கம்! ஒரே கொடுமை. அந்தத் தெருவில் வைரவன் வீடு

என ஒன்று இருக்கிறது. அந்த வீட்டுப் பக்கம் தெரியாமல் போய்விட்டேன் . வீட்டுச் சந்தில் கண்ணாடித் துண்டுகளைக் கண்டபடி கொட்டித் தொலைத்திருக்கிறான், பாவிப்பயல். ஐயையோ காலை வெட்டி வெட்டிப் பாளம்பாளம்ாகச் செய்துவிட்டது.

வடி பாவம்!

முரு அவன் விளங்குவானா? அவன் தலையில் இடிவிழ! அவன் காலில் வெட்டித் தவழ்ந்து நடக்க வைத்தால் அல்லவா அவனுக்கு அறிவு வரும். புத்திகெட்ட பயல் போட்டிருக்கிறான் பாருங்கள் பாதையில். குப்பையைக் கொட்டித் தொலைப்பது கூடக் குற்றமில்லை போலிருக்கிறதே! இந்த அழகில் அவன் குடும்பம் படித்த குடும்பமாம்!

வடி ஆமாம் ஆமாம் ! படித்தவன் குடும்பந்தான் ... இன்னும் சொல்லுங்கள்.

முரு புத்தி கெட்ட பயலை என்ன சொல்வது! நான் காலைக் கட்டிக் கட்டிலில் கிடந்து தவிக் கிறேன். அவன் எங்கே சுற்றித் திரிகிறானோ?

**(வடிவேல் சிரிக்கிறான்.)**

முரு ஏனையா சிரிக்கிறீர்?

வடி சிரிக்க வேண்டிய இடம் வந்தால் சிரிக்க வேண்டாமா?

முரு நான் வேதனையில் ஏசுவது உமக்கு இனிக்கிறதுபோல் இருக்கிறது.

வடி அப்படியில்லை. அந்த ஏச்செல்லாம் எனக்குத்தானே?

முரு என்ன! என்ன! என்ன சொன்னீர்கள்?

வடி நான் தான் வைரவன் மகன்.

முரு வடிவேலா நீங்கள் . . . ஐயையோ!

வடி வடிவேல்தான் நான். கவலைப்படாதீர்கள். நீங்கள் திட்டியது காணாது. நான் செய்த கேட்டினால் நீங்கள் தொல்லைப் படுகிறீர்கள். எவனோ போட்ட வாழைப் பழத்தோலை மிதித்து வழுக்கிக் காலை ஒடித்துக் கொண் டேன் நான். அண்ணே "பிறர்க் கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா, பிற்பகல் தாமே வரும்" என்று திருக்குறள் உரைப்பது சரியாகத் தான் இருக்கிறது. நீங்கள் வருத்தப்பட்டுக் கொள்ளமாட்டீர்கள் நீங்கள் தான் வாழைப்பழத் தோலைச் சாலையில் போட்டிருப்பீர்கள்?. . .

*(இருவரும் சிரிக்கின்றனர்.)*

முரு நான் சாலையில் தாராளமாக வாழைப் பழத்தோல் போடுவதுண்டு. ஆனால் நான்

போட்ட பழத்தோல்தான் உங்களை வழுக்கி விட்ட தென்று சொல்லமுடியுமா?

வடி இல்லை! இல்லை! நான் வேடிக்கையாகச் சொன்னேன்! நீங்களும் சாலை விதிகளைக் கடைப் பிடிப்பது இல்லை என்று சொல்லு கிறீர்கள்.

முரு ஆமாம் தம்பி! நான் தெரியாமல் உங்களைத் திட்டியதை மனத்தில் போட்டுக் கொள்ளா தீர்கள்.

வடி ஐயையோ! இதில் என்ன தவறு இருக்கிறது. நீங்கள் என்னைத் தெரியாமல் எதிரில் பேசிவிட்டீர்கள். எத்தனையோ பேர்கள் மறைமுகமாகத் திட்டியிருப்பார்கள். இனி மேலாவது நான் புத்தியோடு நடந்துகொள்ள வேண்டுமே தவிரத் திட்டியதற்குக் கவலைப் படலாமா? ஆமாம் அண்ணே, எனக்கு ஒன்று தோன்றுகிறது. நாம் இனிமேல் நம் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதுடன் சாலையும் சுத்தமாக இருக்கப் பார்க்க வேண்டும்.

முரு ஆமாம் தம்பி. அதைத்தான் எழுதிப் போட்டிருக்கிறார்களே.

வடி என்ன எழுதிப் போட்டிருக்கிறார்கள்?

முரு சாலையைச் சுத்தமாக வையுங்கள்: தபால் நிலையத்தைச் சுத்தமாக வையுங்கள் - இப்படி யெல்லாம்!

வடி அண்ணே! வைவதிலேயும் சுத்தமாக வையவேண்டுமோ? என்ன மரியாதை வேண்டிக் கிடக்கிறது வைவதில். அது பெரும் தவறு அண்ணே! அஞ்சல் நிலையத்தைச் சுத்தமாக வைக்கவும்: தூய்மையாக வைக்கவும் என்று எழுதவேண்டும்! அதைப் பற்றிக் கவலைப்படாமல் வையுங்கள் திட்டுங்கள் என்றெழுதுகிறார்கள்.

முரு சரிதான்! தெருவைத் துப்புரவு செய்வதற்குள் தெருப்பலகைகளையும், விளம்பரங்களையும், சுவர் ஒட்டிகளையும் துப்புரவு செய்ய வேண்டும்போல் இருக்கிறதே.

வடி அதனால்தானே பாரதியார், "ஒட்டகத்திற்கு ஒரு பக்கமா கோணல்; தமிழகத்திற்கு ஒரு பக்கமா அழிவு" என்ற பொருளில் சொன்னார். பெரிய பெரிய காரியங்கள் செய்வதுதான் அறம், நல்வினை என்று சொல்கிறார்கள். எந்தக் காரியத்தை நல்ல எண்ணத்துடன் செய்தாலும் அதுஅறம் தான்!

முரு நல்ல திட்டம் தம்பி! நல்ல திட்டங்கள் நடைமுறைக்கு வரவேண்டுமே!

வடி இப்பொழுது வந்தார்களே; சாரணர்கள். எப்படித் தொண்டு செய்கிறார்கள்! நாம் இவர்களுக்கு உதவுவது நல்ல தொண்டு இல்லையா?

முரு சரிதான் தம்பி; பணம்?

வடி பணம் எதற்காக? மனத்தில் தொண்டு எண்ணம் வேண்டும்; கையில் பணம் இல்லாவிட்டாலும் குற்றம் இல்லை. நாட்டில் நல்லெண்ணம் ஏற்பட்டு விட்டதோ பிறகு பணத்திற்குப் பஞ்சம் இல்லை.

முரு சரி தம்பி, நான் உங்களுடன் ஒத்துழைக் கிறேன்.

வடி மிகச் சரி.

***( மருத்துவ நிலையப் பணியாள் சிங்கப்பன் வருகிறான்.)***

சிங் ஐயா நீங்கள் வீட்டுக்குப் போக வேண்டிய நாள். உங்களுக்குக் குணமாகி விட்டது.

முரு சிங்கனா! சரி சரி! இன்றுதான் உடல் குணமானதுடன் உள்ளமும் குணமாயிற்று. நல்ல நேரம் பார்த்துப் போகச் சொன்னாய்.

முரு வருகிறோம் அப்பா!

சிங் ஐயையோ! மருத்துவ நிலையம் ஐயா! வராமலே இருங்க! இது என்ன விருந்து வீடா?.

வடி ஓ ஓ! நல்லவனில்ல சிங்கன்! உன் எண்ணப்படியே ஆகட்டும்! வணக்கம்.

சிங் வணக்கம்!

## காட்சி – 4

***(வழியில் ஒருவன் மிதிவண்டியொன்றைத் தூக்கிக் கொண்டு வருகிறான்.)***

முரு என்னையா? வண்டி...

மிதி என்னவா? எந்தப் பயலோ சாலையிலே முள்ளைப் போட்டிருக்கிறான்!

முரு அடுப்பில் வைக்க ...

வடி வையவேண்டாம் அண்ணே!

மிதி அவசரப்படாதீங்க தம்பி. அடுப்பில் வைக்கக் கொண்டு போனதைச் சாலையில் போட்டிருக்கிறான். எந்தச் சனியன் செய்தானோ: தூக்கிச் சுமக்க வேண்டியது ஆயிற்று: தோளும் புண்ணாகி விட்டது.

***(போகிறான்.)***

முரு தம்பி நீங்கள் சொல்லியதுதான் சரி. நம் எண்ணத்தை எடுத்துப் பொதுமக்களுக்குச் சொன்னால் போதும்: வெற்றிதான்.

வடி ஆமாம்! அப்படியே செய்வோம்.

## காட்சி – 5

**வடிவேல் - பொன்னப்பன்**

வடி இந்த மாதிரி முடிவு கட்டினோம். அன்றிலிருந்து ஓயாத உழைப்புத்தான். என்னவோ ஒரு கவலையும் இல்லாமல் தொண்டு செய்ததுடன், வயிற்றுப் பாட்டுக்கும் தொழில் செய்து கொள்கி றோம். இதைத்தான் ஊரில் பேசிக் கொள்கிறார்கள் போல் இருக்கிறது. ஏதோ நம்மால் முடிந்தது.

பொன் : எவ்வளவு நல்ல காரியம்! நம்மால் முடிந்தது என்று சாதாரணமாகச் சொல்லுகிறீர்கள்.

தம்பி, இது என்ன அட்டை?

"எச்சரிக்கையாயிரு; தொண்டனாயிரு" என்று எழுதிவைத்திருக்கிறீர்கள்.

வடி இது வாழைப்பழத்தோல் தந்த பாடம்!

பொன் : அது என்ன தம்பி?

**"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும்வா யெல்லாம் செயல்"**

திருக்குறளா?

வடி ஆமாம்! வாழ்க்கை தந்த பாடம் அது. நான் எச்சரிக்கையாகப் போயிருந்தால் விழுந் திருக்க மாட்டேன்: அதனால் எச்சரிக்கை யாக இருத்தல் தேவை எனஅறிகிறேன். விழுந்து நான் பட்ட தொல்லை தானே மற்றவர்களும் படுவார்கள் என்ற எண்ணம் தொண்டு புரியத் தூண்டியது. எவ்வாறு தொண்டு புரிவது என்று நினைத்த வேளையிலே இன்ன வழி, இன்ன வகை, இன்ன நேரம் என்று இல்லை. எப்பொழுதும் எவ்வழியிலும் எவருக்கும் நல்வினை செய் என ஏவியது குறள் மணி. அதனால் இவைகளை நினைவாகப் பொறித்து வைத்துள்ளேன்.

பொன் நல்ல காரியம் தம்பி! நான் உங்களுக்கு வேண்டியதைச் செய்கிறேன்.

வடி மிக நன்றி.

பொன் அப்பா வெளியில் போயிருக்கிறார்போல், இருக்கிறது.

வடி ஆமாம்! அவர் தானே பெரிய தொண்டர்!

பொன் சரி சரி! நல்ல குடும்பம்! வருகிறேன் தம்பி.

வடி வணக்கம்.

☆ ☆ ☆